# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 | கதிர் 04 | கார்த்திகை 14ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | 30 நவம்பர் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM


**வடமாகாண**
**மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*

பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும் போது பூமியிலுள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றை கொண்டிருப்போம்.

பிராங்க் லோயிட் றைற்
(அமெரிக்கக் கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)

# பெப்ரவரிக்கு முன் புதிய அரசமைப்பு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ரணில் எழுத்து மூலம் உறுதி

கொழும்பு, நவம்பர் 30

புதிய அரசமைப்பை அடுத்த ஆண்டு சுதந்திர தினத்துக்கு முன்னர் நிறைவேற்றுவதற்கான உறுதிமொழியை எழுத்து மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணங்கியுள்ளார்.

>> 25



## பெற்றோல் குண்டு வீசி யாழ். நகரில் தாக்குதல்

### முச்சக்கர வண்டிகள் நாசம் 8 பேர் கொண்ட குழு அடாவடி

யாழ்ப்பாணம், நவ. 30
யாழ்ப்பாணம் நல்லூர் வைமன் வீதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2 மணி

>> 25

## இந்திய மீனவர்கள் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், நவ.30
இலங்கைக் கடலில் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்று முன்தினம் இரவு இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடலில் மீன்பிடித்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். கடற்படையினர் கைது செய்ய முயன்றபோது தப்பிச் செல்ல முற்பட்டனர் என்றும், அதன்போது அவர்களின் படகு கவிழ்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் நேற்று மதியம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீனவர்களின் படகு கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-26)

## தேர்தல் ஆணையாளர் நாயகமாக மொஹமட்



கொழும்பு, நவ. 30
தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாக எம்.எம்.மொஹமட் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.
தேர்தல்கள் திணைக்களத்தில் இதுவரை காலமும் மேலதிக தேர்தல்கள் ஆணை

>> 24

## ஐ.தே.மு. ஆட்சியமைப்பதற்கு தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவு

### மைத்திரிக்கு 14 எம்.பிக்கள் கடிதம்

கொழும்பு, நவ. 30
கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதிக்கு முன்னர் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசே மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு அளிக்கின்றது என்று அரச தலைவர்

>> 25

## நான்காவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டார் மகிந்த

கொழும்பு, நவ. 30
மகிந்த ராஜபக்சவின் தலைமை அமைச்சர் செயலகத்துக்கான, நிதி ஒதுக்கீட்டை இடைநிறுத்தும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் 123 வாக்குகள் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.
நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை

>> 25

## தமிழ்க் கூட்டமைப்பு, ஐ.தே.முவை இன்று சந்திக்கிறார் மைத்திரி

### நிலமை சுமுகமாகும் வாய்ப்பு

கொழும்பு, நவ. 30
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி மற்றும், இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும்

>> 25

see more news in newuthayan.com



## யாழ்.- கொழும்பு பேருந்து தடம்புரண்டு 4 பேர் சாவு

### ஹெமில்டன் கால்வாயில் கட்டுப்பாடிழந்து பாய்ந்தது

யாழ்ப்பாணம், நவ.30
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதி சொகுசுத் தனியார் பேருந்து நாத்தாண்டிய, வலஹப்பிட்டியவில் ஹெமில்டன் கால்வாயில் தடம்புரண்டு நேற்று விபத்துக்குள்ளானது. அதில் 4 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயங்களுக்

>> 25

## இலவச சீருடைகள் பெப்ரவரி மாதமே

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, நவ. 30
அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் அனைத்து மாணவர்களுக்குமான பாடசாலைச் சீருடை பெற்றுக் கொடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாகக் கொழும்பு கல்வி அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் உள்ளதாவது பாடசாலை மாணவர்களின் சீருடைக்கான வவுச்சர் வழங்கும் திட்டத்துக்குப் பதிலாக மீண்டும் சீருடைக்கான துணியை வழங்க கடந்த 22ஆம்

>> 25

## வடக்கு மகளிர் அமைச்சின் நிதி தொடர்பில் விசாரணை

### குழு அமைத்தார் ஆளுநர் குரே

யாழ்ப்பாணம், நவ.30
வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சராக அனந்தி சசிதரன் பதவி வகித்தபோது செலவு செய்யப்பட்டது என்று

>> 25

## 12,000 ஏக்கர் காணிகளை இராணுவம் விடுவிக்காது

### தேசிய பாதுகாப்புக் காரணமாம்

கொழும்பு, நவ. 30
அரச தலைவரின் பணிப்புரைக்கு அமைவாக அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்

>> 24




# மகிந்தவின் நேசநாடுகள் கூட அவரை இன்னமும் ஏற்கவில்லை

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, நவ. 30**

**மைத்திரி – மகிந்த தரப்பின் ஆட்சிக்கு மேற்குலக நாடுகள் மாத்திரமே எதிர்ப்பதாக தெரிவித்து வருகின்றனர். ஆனால், மகிந்த ராஜபக்சவுடன் நெருங்கிய உறவைப் பேணிய நாடுகளான சுவாசிலாந்து, மாலைத்தீவு, சீசல்ச் உட்பட தெற்காசியாவிலும் ஒருநாடுகூட ஆதரவளிக்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் காலை 10.30 மணிக்குக் கூடியது. தலைமை அமைச்சர் அலுவலகத்துக்குச் செல்லும் நிதியை இடைநிறுத்துவதற்கான தீர்மானத்தை ஐ.தே.க. கொண்டுவந்திருந்தது. மேற்படி தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சிக்கு மேற்குலக நாடுகள் மாத்திரமே கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக அவர்கள் தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். ஆனால், மகிந்தவுடன் கடந்த காலத்தில் நெருங்கிய உறவைப் பேணியிருந்த மாலைத்தீவு, சுவாசிலாந்து, சீசல்ச் போன்ற நாடுகள் கூட ஆதரவளிக்கவில்லை. இதேவேளை, கிழக்காசியாவிலும் ஒரு நாடுகூட இவர்களின் ஆட்சிக்கு ஆதரவளிக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் குமார வெல்கம எடுத்துவைத்துள்ள பாதத்தின் ஒரு அடிக்கு முன்னாள் இன்று மக்கள் உள்ளனர்.

மைத்திரி – மகிந்தவின் கறுப்பு ஊடக வணிக கலாசாரத்தால்தான் இந்த அரசு கொண்டு செல்லப்படுகிறது. எமது நாட்டின் சில கறுப்பு ஊடகங்களில் உயர் அதிகாரிகள் இவர்களுடன் மேற்கொள்ளும் வணிக கலாசாரத்தால் மக்களிடம் வேறுவிதமான செய்திகள் செல்கின்றன. உலகலாவிய ரீதியில் எமது நாட்டின் கலாசாரத்துக்கும், நாட்டின் மதிப்புக்கும், நாடாளுமன்ற சம்பிரதாய மற்றும் சனநாயக முறைக்கும் சீரழிவையும், அவமதிப்பை ஏற்படுத்தியதற்கும் அரசதலைவர்தான் பொறுப்புக்கூற வேண்டும்.

அரசதலைவரின் பதவியானது கூலியாகவே மைத்திரிக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. ஐ.தே.க. உள்பட பலதரப்பின் வாக்குகளால்தான் அவர் அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாட்டின் சட்டம், நாடாளுமன்றம் சம்பிரதாயம், ஜனநாயகம் எவ்வாறு அரசதலைவரால் வீழ்த்தப்பட்டு சட்டத்துக்கு முரணாக இந்த ஆட்சி முன்னெடுக்கப்பட்டதென நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்தப்பட வேண்டும். அத்துடன், அரசியல் சூழ்ச்சியால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புகளை மீளப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் – என்றார். (5,10)

# நாடாளுமன்ற அடாவடிகளை விசாரிக்கக் குழு நியமனம்

## சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 30

நாடாளுமன்றத்தில் கடந்த 14ஆம், 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் நடைபெற்ற அடாவடிகள் தொடர்பில் சிறப்பு விசாரணை நடத்துவதற்காக பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியது. இதன் போது சபாநாயகர் கருஜயசூரிய மேற்படி அறிவிப்பை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தற்போது பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். உள்ளக விசாரணைகளை நடத்துவதற்கு என்னால் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச, ரஞ்சித் மத்தும பண்டார, பிமல் ரட்நாயக்க, மாவைசேனாதிராசா, சந்திரசிறி கஜதீர ஆகியோர் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் – என்றார்.

நாடாளுமன்றத்தில் கடந்த 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் பெரும் களேபரம் இடம்பெற்றிருந்தது. உறுப்பினர்கள் ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் நடத்தினர். நாடாளுமன்றத்துக்குச் சபாநாயகர் பொலிஸ் பாதுகாப்புடன் வந்திருந்தார். அன்றைய தினம் பொலிஸார் மற்றும் உறுப்பினர்கள் மீது மிளகாய்த் தூள் கரைசல் வீச்சும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,10,61)

# பொது மேடையில் மூக்கறுபட்ட துமிந்தவும், உதய கம்மன்பிலவும்

கொழும்பு, நவ. 30

இளைஞர்களை மதிப்பளிக்கும் தேசிய விருதுவழங்கும் விழாவுக்கு முதன்மை விருந்தினர்களாகச் சென்றிருந்த அமைச்சர்களான துமிந்த திசாநாய்க்கவும், உதய கம்மன்பிலவும் விருது பெறும் இளைஞர்களாலேயே மேடையில் வைத்து அவமரியாதைக்கு உட்படுத்தப்பட்ட காணொலி சமூகவலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ள காணொலிக் காட்சியில் விருதைப் பெறவரும் இளைஞர் உதய கம்மன்பிலவிடம் விருதை வாங்க மறுத்து அருகிலிருந்த சினிமாக்கலைஞரான ஸ்ரீயந்த் மென்டிஸிடம் விருதை வாங்கிக் கொள்கிறார்.

விருதைப் பெற வந்த மற்றுமொரு கலைஞர் மேடையிலிருந்த சிறப்பு விருந்தினர்களுக்குகைகொடுத்துவிட்டு துமிந்த திசாநாயக்கவிற்கு மாத்திரம் கை கொடுக்காது விருதைப் பெற்றுச் செல்கிறார். (5)

# அரசியல் நெருக்கடிக்கு மைத்திரியே பொறுப்பு

## மகிந்த பங்குதாரர் என்கிறார் வெல்கம

கொழும்பு, நவ. 30

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இதற்கு மகிந்தவும் பங்குதாரராக காணப்படுகின்றார். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி புறக்கணித்தமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அரசின் பொறுப்புக்களை முன்னாள் அரச தலைவர் மகிந்த பொறுப்பேற்று அரசியல் ரீதியில் தவறிழைத்துவிட்டார். அவர் சற்றுப் பொறுமை காத்திருந்தால் தற்போது நாட்டின் முழு ஆட்சியதிகாரத்தையும் நாட்டு மக்களே ஜனநாயக ரீதியில் அவருக்குப் பெற்றுக் கொடுத்திருப்பார்கள். அதற்கான சூழ்நிலைகளே காணப்பட்டது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். மகிந்தவும் பங்குதாரராகக் காணப்படுகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்களின் பெரும்பான்மைப் பலத்தை பலமுறை நாடாளுமன்றத்தில் நிரூபித்து விட்டனர். அரச தலைவர் சிலவிடயங்களை முறையாக நிறைவேற்றுங்கள் என்று குறிப்பிட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் நிராகரித்துவிட்டார். பெரும்பான்மைப் பலம் உள்ளவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு எதிர்க்கட்சியாக செயற்பட்டால் மத்திரமே தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணலாம் – என்றார். (5)



# வெலிக்கடை சிறைக்கு மாற்றப்பட்டார் அட்மிரல்

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுண வர்தன, வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பில் தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முதன்மைச் சந்தேகநபரான அட்மிரல் ரவீந்திர நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

# கடற்படைக்கு துக்கமான நாள்

## ரவீந்திரவின் கைது குறித்து முன்னாள் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 30

பதவிநிலைக்கும் இலங்கை கடற்படைக் கோவைக்கும் துக்கமான நாள் இது என்று, முன்னாள் கடற்படை அதிகாரி, றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இது தொடர்பாக, கடற்படையின் முன்னாள் அதிகாரியும், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான, றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம தனது கீச்சகப் பக்கத்தில், பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில், 'பதவி நிலைக்கும் கடற்படைக் கோவைக்கும் துக்கமான நாள்' என்று கூறியுள்ளார். (5)

# எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்த அத்துரலிய தேரருக்கு இடையூறு

கொழும்பு, நவ. 30

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக அறிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர், நேற்றைய சபை அமர்வின்போது, ஐக்கிய தேசியக் கட்சியினர் அமர்ந்திருந்த எதிர்க்கட்சிப் பக்கத்தில் அமர்ந்திருந்து சிறப்பு உரையாற்றினார். இதன்போது அவருக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினரான அத்துரலிய ரத்தன தேரர், மகிந்த தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படப் போவதாக அறிவித்திருந்தார். நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது, எதிர்க்கட்சி வரிசையில் அத்துரலிய ரத்தன தேரர் வந்து அமர்ந்தார்.

நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில், இரண்டு பிரிவுகளுக்கும் அதிகாரங்களை வழங்கி இடைக்கால அரசு அமைத்து பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னர் பொதுத் தேர்தலுக்கு செல்லவேண்டும். மாறாக அரச தலைவரை விமர்சிப்பதன் மூலம் தற்போதுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. அத்துடன் ஐக்கிய தேசிய கட்சிக்கு பெரும்பான்மை இருப்பதும் அரச தலைவருக்கு விருப்பம் இல்லை. தற்போதுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண இடைக்கால அரசை அமைத்து எதனை செய்ய வேண்டும் எதனை செய்யக் கூடாது என்பது தொடர்பில் தீர்மானத்துக்கு வரவேண்டும் என்றார்.

அவர் உரையாற்றிக்கொண்டிருந்தபோது, ஐக்கிய தேசிய கட்சி பின்வரிசை உறுப்பினர்கள் சபையில் கூச்சலிட்டு கடும் எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இதன்போது சபையில் ஆரம்ப வரிசையில் இருந்த மனோ கணேசன், ராஜித சேனாரட்ன மற்றும் சிலர் அவர்களை அமைதிப்படுத்தித் தேரருக்கு தொடர்ந்தும் உரையாற்ற நடவடிக்கை எடுத்தனர்.

அத்துடன் தேரர் கடந்த அரசு மேற்கொண்ட சிங்கப்பூர் ஒப்பந்தத்தின் சில உள்ளடக்கங்களை தெரிவித்தபோது, ஐக்கிய தேசிய கட்சி சுஜீவ சேனசிங்க, ஹர்ஷ டி சில்வா போன்றவர்கள் பொய் சொல்ல வேண்டாம் என தெரிவித்து தொடர்ந்து தேரரின் பேச்சுக்கு இடையூறு ஏற்படுத்தினர். (5,10,61)

# சிறுபான்மையினருக்கு பாதிப்பில்லாது தீர்மானங்கள் எடுப்பதே ஜனநாயகம்

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் தெரிவிப்பு

பெரும்பான்மையைக்கொண்ட தரப்பினரின் கருத்துக்களுக்கு மாத்திரம் செவிசாய்ப்பது ஜனநாயகம் ஆகாது எனத் தெரிவித்த சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய, சிறுபான்மையைக் கொண்ட தரப்பினருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானங்களை எடுப்பதே உண்மையான ஜனநாயகம் எனவும் குறிப்பிட்டார்.

காலி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழிபேசும் மக்கள் பெரும்பான்மையைக்கொண்டிருப்பதால் அங்கு சிங்கள மொழி பேசுபவர்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது. அதேபோன்று அம்பாந்தோட்டையில் சிங்களம் பேசுவர்கள் பெரும்பான்மையாக இருப்பதால் தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது. என்று குறிப்பிட்டார். (5)

# அரசியல் நெருக்கடியைத் தீர்க்க மைத்திரி தயாராக இருக்கின்றார்

## சபாநாயகரை அவருடன் பேசுமாறு விஜயதாச சபையில் பரபரப்புப் பேச்சு

கொழும்பு, நவ. 30

அரசியல் பேதங்களை மறந்து நாம் நாடாளுமன்ற ஜனநாயக முறையைப் பின்பற்ற வேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர்களுக்கு ஆட்சியமைக்க அதிகாரம் வழங்க வேண்டும். நாட்டின் நன்மை கருதி அது நடக்க வேண்டும். ஒரு கொள்கை உடன்பாடு ஏற்படுத்தப்பட்டு இந்த அரசியல் நெருக்கடி முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். நாடாளுமன்ற வேலைகளை ஒரு பக்கம் வைத்து விட்டு அரச தலைவர் மைத்திரிபாலவுடன் பேசி ஓரிரு நாள்களில் இந்த பிரச்சினைக்கு முடிவை சபாநாயகர் எடுக்க வேண்டும். அரச தலைவர் மைத்திரிபால இதில் விருப்புடன் இருப்பதை என்னால் அறிய முடிந்தது.



இவ்வாறு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணிப்பதாக அறிவித்தது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மகிந்த அணிக்கு தாவி அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்ட விஜயதாச ராஜபக்ச சபை அமர்வில் பங்கேற்றார். அவர் சிறப்பு உரையும் ஆற்றினார். இதன்போதே மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் நெருக்கடியால் மக்கள் அதிர்ச்சியில் உள்ளனர். ஜனநாயகக் கட்டமைப்புக்களின் பாதுகாப்பை நாடாளுமன்றம் உறுதிப்படுத்துகிறது.

நாம் 30 வருட காலம் போரினால் பாதிக்கப்பட்டோம். முப்படையினர் மட்டுமன்றி இலங்கையர்கள் ஏராளம் உயிரிழந்தனர். அப்படி ஒரு நிலமை மீண்டும் வரக் கூடாதென்றே ஒரு ஜனநாயகப் புரட்சி நடந்தது. ஐக்கிய தேசியக் கட்சி பொது வேட்பாளராக மைத்திரியைத் தெரிவு செய்தது. நாடு நன்றாக வர வேண்டும் என்பதே மக்களின் அவாவாக இருந்தது. நாட்டின் நன்மை கருதி 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றினோம். நிறைவேற்று அதிகாரத்தின் பல அதிகாரங்கள் நீக்கப்பட்டன. அது முழுமையானதல்ல.

நாங்கள் நல்லாட்சியை நிறுவ கூட்டு அரசை அமைத்தோம். பல பிரச்சினைகள் குற்றச்சாட்டுக்கள் வந்த போதும் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். ஆனால் ஒரு கட்டத்தில் இரு தரப்புக்களும் சராசரி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டன. அந்த இரு தரப்பையும் கட்டுப்படுத்த மைத்திரி மற்றும் ரணில் என்ற இரு தலைவர்களாலும் முடியாமற் போனது.

அப்படி ஒரு நிலமையில்தான் திடீரென ஒக்ரோபர் 26ஆம் திகதி அரசியலில் அதிரடித் தீர்மானங்கள் வந்தன. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு அது இப்போது நீதிமன்ற விசாரணையில் நிற்கின்றது. பின்னர் சபையில் குழப்பங்கள் ஏற்பட்டன. மக்கள் இன்று செய்வதறியாமல் நிற்கின்றனர். இதுவரை மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

அரசமைப்பு மற்றும் நீதித்துறை அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. நிறைவேற்று அதிகாரத்தின் உத்தரவை அரசமைப்பு அதிகாரம் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதையும் அரசமைப்பு அதிகாரத்தின் ஆணையை நிறைவேற்று அதிகாரம் ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கும் நிலமை இப்போது உள்ளது.

அரசியல் பேதங்களை மறந்து நாம் நாடாளுமன்ற ஜனநாயக முறையை பின்பற்ற வேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர்களுக்கு ஆட்சியமைக்க அதிகாரம் வழங்க வேண்டும். நாட்டின் நன்மை கருதி அது நடக்க வேண்டும்.

ஒரு கொள்கை உடன்பாடு ஏற்படுத்தப்பட்டு இந்த அரசியல் நெருக்கடி முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். நாடாளுமன்ற வேலைகளை ஒரு பக்கம் வைத்து விட்டு அரச தலைவருடன் பேசி ஓரிரு நாள்களில் இந்தப் பிரச்சினைக்கு முடிவை சபாநாயகர் எடுக்க வேண்டும். அரச தலைவர் மைத்திரிபால இதில் விருப்புடன் இருப்பதை என்னால் அறிய முடிந்

## மைத்திரியுடன் பேசத் தயார்

### கரு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 30

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேசுவதற்கு நான் தயாராகவே உள்ளேன். அவருடன் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. உங்களின் (விஜயதாச) கோரிக்கையை நான் பரிசீலிப்பேன். இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரியா தெரிவித்தார். (5.10.61)

## மைத்திரியுடன் பேச்சுக்கு நாங்கள் தயாரில்லை

### ஜே.வி.பி. திட்டவட்டம்

கொழும்பு, நவ. 30

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்த தயாரில்லையென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமாரதிசநாயக்க, மைத்திரியுடன் ஏற்கனவே நடத்தப்பட்ட பேச்சுக்கள் பயனற்றுபோயின. இனியும் பேச்சுக்கு தயாரில்லை. அத்தோடு, நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி அரச தலைவர் மைத்திரி செயற்படுகின்றார். அவர் தொடர்ந்தும் தவறிழைக்கின்றார்.

அரச தலைவர் தனது வரையறைகள் குறித்து அறிந்து செயற்பட வேண்டும். முற்றுமுழுதாக முன்னெடுக்கப்பட்ட ஒரு அரசியல் சூழ்ச்சிக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு வழங்காது. பேச்சுக்கும் செல்ல மாட்டோம். என்று குறிப்பிட்டார். (5)

## நிதி ஒதுக்கீட்டை நிறுத்த முடியாது

### மகிந்த போர்க் கொடி

தலைமை அமைச்சர் அலுவலக நிதி ஒதுக்கீடுகளை நிறுத்த முடியாது என்று மகிந்தராஜபக்சதெரிவித்தார். கட்சித் தலைவர்களின் கூட்டத்தைப் புறக்கணித்துவிட்டு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற நேற்றைய அமர்வையும் புறக்கணித்துள்ள மகிந்த ராஜபக்ச, தலைமை அமைச்சர் அலுவலக நிதி ஒதுக்கீடுகளை நிறுத்த முடியாது. அப்படி நிறுத்துவதாயின் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்றும் சபாநாயகரின் செயற்பாடு சட்ட விரோதமானது, எனவும் தெரிவித்துள்ளார். (5)

## பதவியேற்று ஒரு மாத காலத்துக்குள் ரூ.840 லட்சத்தை விழுங்கிய மகிந்த

### ஐ.தே.க. பகீர் தகவல்

கொழும்பு, நவ. 30

தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச பதவியேற்றதன் பின்னர், நாட்டினுள் பயணங்களை மேற்கொள்வதற்காக் உலங்கு வானூர்தியைப் பயன்படுத்தியுள்ளதோடு இதற்காக 840 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்படி தகவலை முன்வைத்தார்.

மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்தும் தீர்மான வரைவை ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் நேற்றுச் சமர்பித்தனர். அதன் மீது விவாதம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்து. (5)

## அலரிமாளிகையில் மக்கள் பணம் வீணடிக்கப்படவில்லை

அலரிமாளிகையில் மக்கள் பணம் வீணடிக்கப்படவில்லை. மின்கட்டணம் முதல் அனைத்துச் செலவுகளையும் நாங்கள்தான் செய்கின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் அனுரகுமாரவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். லக்ஸ்மன் கிரியெல்ல மேற்படி பதிலை வழங்கியதும் குறுக்கிட்ட அனுர, அப்படியானால் அலரிமாளிகை ஒரு விடுதியா? வாடகைக்கு விடப்படுமா? எனக் கேட்டார். இதற்கு பதிலளித்த லக்ஸ்மன் கிரியெல்ல, நீங்களும் விண்ணப்பித்தால் அலரிமாளிகை வாடகைக்கு விடப்படும் என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார். (5,10)

## அலரிமாளிகையை விட்டு ரணில் வெளியேறவேண்டும்

### ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, நவ. 30

தலைமை அமைச்சர் மகிந்தவின் அலுவலகத்துக்குச் செல்லும் நிதியை இடைநிறுத்தும் தீர்மானம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பின்னர் முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் அலரி மாளிகையை விட்டு வெளியேற வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கான நிதியை முடக்குவது தொடர்பான தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இரு தலைமை அமைச்சர்கள் உள்ளதால் மக்களின் பணம் வீணடிக்கப்படுகின்றது. மகிந்த ராஜபக்ச ஒரு தலைமை அமைச்சராக மக்கள் பணத்தை செலவழித்துக் கொண்டிருக்கிறார். மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் தங்கியிருந்து கட்சிக் கூட்டங்களையும், சந்திப்புகளையும் நடத்தி வருகிறார். மக்களின் வரிப் பணம் வீணடிக்கப்படுகிறது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன், அலரிமாளிகையில் இருந்து ரணில் தரப்பும் வெளியேற வேண்டும் - என்றார். (5.10)

## நாடாளுமன்றப் பதிவேட்டு அறிக்கையில் பொய்த்தகவல்கள்

### திருத்தக் கோருகிறார் கம்மன்பில



கொழும்பு, நவ. 30
கடந்த 14 ஆம் திகதி நாடாளுமன்ற சபை நடவடிக்கைகளுக்கான பதிவேட்டு அறிக்கையில் பொய்த்தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் உதயகம்மன்பில நாடாளுமன்ற பதிவேட்டு ஆசிரியருக்கு நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பியுள்ளார்.
அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சபாநாயகர் அவரது உரையில் 'இவர்களுக்கு பெரும்பான்மை இல்லை. என்று தெரிவித்திருந்தார்.
இருப்பினும், 'இவர்களுக்கு பெரும்பான்மை இல்லை' என்ற சொற்றொடர் 'அவர்களுக்கு பெரும்பான்மை இல்லை' என மாற்றப்பட்டுள்ளது. இது அன்றையநாளுக்குரிய காணொலிகளூடாக உறுதிசெய்யமுடியும்எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்துடன் காணொலிகளையும்இணைத்து அனுப்பியுள்ள உதய கம்மன்பில, இதுகுறித்துதேவையான திருத் தங்களை உடனடியாக மேற்கொள்ளுமாறும்பதிவேட்டு ஆசிரியருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)


## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு, நவ. 30
பாதுகாப்பு படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுண்வர்தன கொழும்பு கோட்டைநீதவான்நீதிமன்றத்தில்நேற்றுமுன்தினம்முன்னிலையாகி வாக்குமூலம் வழங்குவதைஅறிக்கையிடச்சென்ற ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவத்தை சுதந்திர ஊடக இயக்கம்வன்மையாகக்கண்டித்துள்ளது.
இதுதொடர்பில்அந்தஅமைப்பு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பொதுமக்களுக்காக தகவல் சேகரிப்பதில் பத்திரிகையாளர்களுக்கு தலையீடுகளோ அல்லதுதடையோஇன்றிசெயல்படும் சுதந்திரம் இருக்கவேண்டும்.
அத்தகையஉரிமைகளைமீறுவதிலிருந்து அல்லது அது போன்ற நிலைமைகளை உருவாக்குவதிலிருந்து அதிகாரிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் கண்டிப்பாக வலியுறுத்துகிறோம்.
இந்த ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைதொடர்பில்ஒருசிறப்பு விசாரணையை மேற்கொண்டு,சந்தேகநபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதன்மூலம்,தொழில்சார் ஊடகவியலாளர்களின் கண்ணியத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு அனைத்து பொறுப்புடைய அதிகாரிகளையும் சுதந்திர ஊடக இயக்கம் கோருகிறது. என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்றத்தில்கடற்படைச்சீருடையில் நேற்றுமுன்தினம் சரணடைந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவை, பிற்பகல்2.30மணியளவில்சாதாரணசிவில்உடையில்நீதிமன்றத் துக்கு வருமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
பிற்பகல் 2.15 மணியளவில், நீதிமன்றத்துக்கு வெளியே வந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் எடுக்க முற்பட்டனர்.
அங்கு சிவில் உடையில் வந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர், ஊடகவியலாளர்களைத் தள்ளி விட்டார். சண்டே மோர்னிங், இதழின் ஊடகவியலாளர் இந்திக ஹன்டுவாலாவின்மார்பில்குத்தித்தாக்குதல் நடத்தினார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.
இதையடுத்து, தாக்குதல் நடத்திய பாதுகாப்பு அதிகாரியை, அங்கிருந்த பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்துக்குள் கொண்டுசென்றனர். (ஐ)

# பெரும்பான்மை பெறத்தவறியதால் பசிலைத் திட்டித் தீர்க்கும் மகிந்த

கொழும்பு, நவ. 30
நாடாளுமன்றில் பெரும்பான்மையை பெற்றுக்கொடுக்கத் தவறிய முன்னாள் அமைச்சர்பசில்ராஜபக்சவை, தலைமைஅமைச்சர்மகிந்த ராஜபக்ச கடுமையாகத் திட்டியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுவதாக உறுதியளித்த பசிலினால் அதனைச் செய்ய முடியவில்லை. இதனால் படுதோல்வி அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 15 உறுப்பினர்கள் கொண்ட குழுவினர் மகிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்து தற்போதைய அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருமாறும், தலைமை அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.
தலைமை அமைச்சர் பதவியில் இருந்து விலக முடியாதென கூறிய மகிந்த ராஜபக்ச அந்த உறுப்பினர்களுக்கு முன்பாக பசில் ராஜபக்சவுக்கு அலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார்.
பெரும்பான்மை பெற்றுவிடலாம் எனக் கூறியமையினால் கடந்த மாதம் மகிந்த, தலைமை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.
தற்போது வரை பெரும்பான்மை பெற்றுக்கொள்ளமுடியாமையினால் மகிந்த சற்றுப் பதற்றத்துடனே காணப்படுகின்றார். இந்த நிலைமைக்கு மத்தியில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பதவி விலகுமாறு கூறியுள்ளனர்.
கடும் கோபமடைந்த மகிந்த, பசிலுக்குஅலைபேசிமூலம்கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
உங்களால் தான் இந்த நிலைமைக்கு வந்துவிட்டேன் எனக் கடும் கோபமாகத் திட்டி பசிலின் அழைப்பை துண்டித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (ஐ)



(நன்றி: நாமல் அமரசிங்க)



அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை ,புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சமற்றும்புதிய அமைச்சர்களைநியமித்தமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஊவாமாகாணசபையின் ஐக்கிய தேசியக் கட்சிஉறுப்பினர்கள் கறுப்புபட்டியணிந்து, சபை அமர்வுக்குள் பிரவேசிப்பதைபடத்தில் காணலாம். (ஐ)

## மைத்திரி, மகிந்தவால் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியவில்லை

கொழும்பு, நவ. 30
இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வியடைந்துள்ள நிலையில் தேர்தல் மூலம் ஆட்சியதிகாரத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணம் மகிந்த ராஜபக்ச தரப்புக்கு ஏற்பட்டுள்ளதாக "போரின் பொலிஸி" என்ற அமெரிக்க ஊடகம் தெரிவித்துள்ளது.
இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசமைப்புக்கு விரோதமாகச் செயல்பட்டு ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சியைக் கவிழ்த்தார்.
இதனையடுத்து சட்ட விரோதமாக மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தார்.
அவரால் அந்த ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை.இது அவரைப் பொறுத்த வரையில் தோல்வியாக கருதப்படுகிறது.
அந்தத் தோல்வியை ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இல்லை.
அதேபோன்று அவரால் நியமிக்கப்பட்ட மகிந்தவும் தலைமை அமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. எனவே இருவரும் தாம் தீர்மானித்த தேர்தல் ஒன்றுக்கு செல்வதையே குறியாகக் கொண்டுள்ளனர்.
அதன்மூலம் மீண்டும் தங்களின் ஆட்சியை பிடிக்கலாம் என்பதே அவர்களின் எண்ணமாக உள்ளது என்று அமெரிக்க ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## நாமலை விவாதத்துக்கு வருமாறு ஹரின் அழைப்பு

கொழும்பு, நவ. 30
ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு சவால் விடுத்துள்ளார்.
முதலாவதாக நடத்தப்பட வேண்டியது அரச தலைவர் தேர்தலா? பொதுத் தேர்தலா? என்பது தொடர்பில் விவாதிப்பதற்குப் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருமாறு ஹரின்பெர்னாண்டோ, நாமல்ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.
கீச்சகப்பதிவொன்றிலேயே ஹரின் பெர்ணான்டோ, இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.
தற்போதைய ஆளும்கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்கள், நாடாளுமன்றத்துக்கு வருகை தராமையால், இவ்வாறு பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அழைப்பதாகவும்ஹரின் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கையில் இனவாதத்தை தூண்டி தவறிழைத்துவிட்டோம்

## ஒப்புக்கொண்டது முகநூல் நிறுவனம்

கொழும்பு, நவ. 30
இலங்கையில் இனவாதத்தைத் தூண்டும் முகநூல் பதிவுகளை நீக்காதது எங்களின் நிறுவன நியதிகளுக்கு முரணான ஒரு பாரதூரமான தவறு என்று முகநூல் நிறுவனத்தின் கொள்கைத் தீர்வு விவகாரங்களுக்குப் பொறுப்பான துணைத் தலைவர் ரிச்சர் அலன் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சிங்கப்பூரின் நாடாளுமன்ற உறுப்பினர் எட்வின் தொங் கேள்வி எழுப்பியிருந்தார்.
சிங்களத்தில் பரவிய இனவாதத்தை தூண்டும் முகநூல் பதிவுகளின் அடிப்படையிலேயே முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இவை உங்களது நிறுவனத்தின் நியதிகளுக்கு புறம்பானது அல்லவா என எட்வின் எழுப்பிய கேள்விக்கு, ரிச்சர் அலன் ஆம் என்று ஒப்புக் கொண்டுள்ளார்.
இலங்கையில் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களுக்கு இடையில் கடுமையான முரண்பாடுகள் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான முகநூல்ப் பதிவுகள் பரவியதனால் பல உயிர் இழப்புக்களும், உடமைச் சேதங்களும் ஏற்பட்டதாக எட்வின் குறிப்பிட்டிருந்தார்.
இவ்வாறான பதிவுகளினால் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் இதனால் இலங்கையில் முகநூல் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டு இறுதியில் அரசு அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
முகநூல் பதிவுகளை நீக்குமாறு, அப்போது இருந்த இலங்கைத் தொலைத்தொடர்பு அமைச்சர் வேண்டிக் கொண்ட போதிலும் பதிவுகள் நீக்கப்படாமைக்கான காரணம் என்ன என எட்வின் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு முகநூல் பணியாளர் ஒருவரின் கவனயீனமே காரணம் என ரிச்சர்ட் அலன் பதிலளித்துள்ளார். (ஐ)

# ரணிலே தலைமை அமைச்சர்

## ஐ.தே.க. நாடாளுமன்றக்குழு முடிவு

கொழும்பு, நவ. 30
நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையே தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.
அலரி மாளிகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்பட்டது.
ரணில் விக்கிரமசிங்கவை, தலைமை அமைச்சராக நியமிக்கமாட்டேன் என்று, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துத் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.
ஒரு நபரைத் திருப்திப்படுத்துவதற்காக, அரசமைப்பை மாற்றமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, களுத்துறையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் தலைமை அமைச்சரைத் தீர்மானிப்பது நாடாளுமன்றமே தவிர, அரச தலைவர் அல்ல என்று கூறியிருந்தார். (ஐ-31)

# கட்சியை விட்டு வெளியேறவேண்டாம் அதிருப்தி அணியிடம் மைத்திரி கெஞ்சல்

கொழும்பு, நவ. 30
**சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது அதிருப்தி கொண்டுள்ள அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேரை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.**

இந்தச் சந்திப்பின் போது அதிருப்தியாளர்கள் சுதந்திரக் கட்சி இரண்டாக பிளவடையக் கூடாது என்பது தொடர்பில் எடுத்துரைத்ததுடன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் எக்காரணம் கொண்டும் கட்சியிலிருந்து வெளியேற வேண்டாம் என்று அவர்களிடம் கோரிக்கையை முன்வைத்தார்.
அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அமைச்சுக்களுக்கு ஒதுக்கும் நிதியைத் தடுக்கும் வகையிலான தீர்மானம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வந்தால் என்ன செய்வது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. (ஐ)



# சபாநாயகரை வெளியேற்றுமாறு கோரியும் தேர்தலை நடத்தக் கோரியும் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, நவ. 30
சபாநாயகரை வெளியேற்றக் கோரியும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வலியுறுத்தியும் பொதுமக்கள் முன்னணி கட்சி ஆதரவாளர்கள் முல்லைத்தீவில் கவனவீர்ப்பு போராட்டத்தை நேற்றுமுன்தினம் மேற்கொண்டனர்.
முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனவீர்ப்பு போராட்டம் பேருந்து தரிப்பிடம் வரை சென்றடைந்தது.
இந்தக் கவனவீர்ப்புநடவடிக்கையில் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தெரிவித்ததாவது,
இலங்கை நாட்டின் அரச தலைவர் நல்ல ஒரு முடிவை எடுத்துள்ளார் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்து நல்ல ஒரு விடயத்தை மேற்கொண்டதைத் தமிழ் மக்கள் வரவேற்கின்றார்கள்.
மகிந்த ராஜபக்சதான் இந்த நாட்டை ஆளமுடியும். அவரால்தான் அபிவிருத்திகள் மேற்கொள்ள முடியும். நினைத்ததை செய்து முடிக்கும் வல்லவர் அவர்.
கூட்டரசு இரண்டரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. ஆனால் வடக்குக்கோ தமிழ் மக்களுக்கோ எந்தப் பயனும் இல்லை.
மகிந்த ராஜபக்ச இருந்த காலத்தில் நாடு எவ்வளவோ முன்னேற்றத்தை கண்டது. வேலை வாய்ப்புக்கள் கிடைத்தன.
இந்த அரசால் வேலைவாய்ப்பு இல்லை, அபிவிருத்தி இல்லை தமிழ் மக்களுக்கான தேவைகள் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. போலி அரசு மாதிரித்தான் இந்த அரசும் இருந்துள்ளது. மகிந்தவைதலைமை அமைச்சராக்கியது நல்ல விடயம் அதை எல்லோரும் வரவேற்கின்றார்கள் - என்றார்
இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தின் போது பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-ரி3)

# மகிந்தவே தலைமை அமைச்சர்

## டிலான் பெரேரா விடாப்பிடி

கொழும்பு, நவ. 30
எது நடந்தாலும் மகிந்தவே நாட்டின் தலைமை அமைச்சர். எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்க வேண்டியது கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்கவே என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் பதவியை ஏற்றுள்ளார். எது நடந்தாலும் அவரே தலைமை அமைச்சர். அவர் எதிரணியில் சென்று அமரவேண்டிய எந்தத் தேவையும் கிடையாது. எதிர்க்கட்சி வரிசையில் அமரவேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்கவே.
மார்ஷல் பெரேராவின் புதல்வரான நான் தனிப்பட்ட வாழ்க்கையில் தோல்வி கண்டிருக்கலாம். ஆனால் அரசியல் வாழ்க்கையில் தோல்வி அடையவில்லை. அவ்வாறு அடையாமைக்கு காரணம் சரியான நேரத்தில் எடுக்கும் நேர்த்தியான முடிவுகளே. தற்போதும் நேர்த்தியான முடிவையே எடுத்துள்ளேன். தோல்வியடையும் தரப்பிலோ அல்லது தவறான தரப்புக்கோ எனது ஆதரவு என்றும் இருந்ததில்லை. தற்போது எனது ஆதரவு சரியான தரப்புக்கே உள்ளது. அவரே தலைமை அமைச்சராக தொடர்ந்தும் நீடிப்பார். (ஐ-31)

# டென்மார்க்கில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வு






தமிழீழத் தேசிய மாவீரர் நினைவு நாள் நிகழ்வுகள் டென்மார்க்கில் நேற்றுமுன்தினம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.
டென்மார்க்கின் கேர்னிங் மற்றும் கோல்வேக் நகரங்களில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.
பொதுச்சுடர் ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து "ஏறுது பார் கொடி ஏறுது பார்" என்ற தமிழீழத்தின் தேசியப்பாடலுடன் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. முதல் மாவீரன் சங்கர் வீரச்சாவடைந்த நேரமான 13.35 (தாயக நேரம் 6.05) இற்கு மாவீரர் பொது ஈகைச்சுடர் ஏற்றப்பட, துயிலும் இல்லப் பாடல் ஒலிக்க, மாவீரர்களின் உறவினர்களால் சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கமும் செய்யப்பட்டது. டென்மார்க் நாட்டின் பல நகரங்களில் இருந்து வருகை தந்த மாணவர்களின் எழுச்சி நடனங்கள், கவிதை, டென்மார்க் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்பு உரைகளும் இடம்பெற்றன. இறுதி நிகழ்வாக "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடலுடன் தேசிய கொடி இறக்கலுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன. (ஐ)

# வலி. தென்மேற்கு சபையில் ஆளும் கட்சிக்குள் குழப்பம்?

யாழ்ப்பாணம், நவ. 30

**வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதில் தவிசாளர் பாகுபாடு காட்டுகிறார் என்று தெரிவித்து ஆளும் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் கடந்த வாரம் இடம்பெற்ற சபை அமர்வில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.**

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக்கூட்டம் தவிசாளர் அ. ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான எஸ். மகேந்திரன் தற்பொழுது இடம்பெற்றுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் தனது அதிருப்தியைத் தெரிவித்தார்.

வலி. தென்மேற்குப்பிரதேசத்தில் 28 கிராமஅலுவலர்பிரிவுகள் இருக்கின்றன. 17 வட்டாரங்களைக் கொண்ட இந்தச் சபையில் 28 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

இந்தப் பிரதேசத்தில் வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்துவதிலும் வீதிகள் அபிவிருத்திசெய்வதிலும் தவிசாளர் பாகுபாடுகாட்டி வருகின்றார். வீதிகளுக்கு மின்விளக்குகள்பொருத்துவதற்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும் 7 லட்சம் ரூபாவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வீதிகளுக்கு அடுத்தடுத்து மின்குமிழ்கள்பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் எனது வட்டாரத்தில்தேவையான இடங்களில்மின்குமிழ்கள்பொருத்தப்படாமையால் வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன. இதே போல் வீதி அபிவிருத்தி வேலைகளிலும் வட்டாரத்துக்கு வட்டாரம் பாகுபாடு காட்டப்பட்டு வருகின்றது. தற்பொழுது 14 வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இவற்றில்ஒருவீதிகூட எனது வட்டாரத்தில்இல்லை. எனது வட்டாரம்சகலதுறைகளிலும் பின்தங்கியநிலையிலுள்ளது. நீதியாகவும் நேர்மையாகவும்கடமையாற்றவேண்டிய தவிசாளர்பக்கச்சார்பாகநடப்பதால் அவர் மீது இருந்த நம்பிக்கையை இழந்துவிட்டேன். சபையில்பிச்சைகேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் நான் சபையில் தொடர்ந்து இருப்பதால் பயனில்லை என்று தெரிவித்து அவர்சபையில்இருந்துவெளியேறினார்.

ஆளும் கட்சி உறுப்பினரும் உபதவிசாளருமான ஆ.சி. கணேசவேல் உரையாற்றுகையில், 2018ஆம் ஆண்டுக்கானவரவு-செலவுதிட்டத்தில் முன்னுரிமைப்படுத்திக் குறிப்பிடப்பட்ட எனது வட்டாரத்திலுள்ள வீதிகள் இன்று வரை அபிவிருத்தி செய்யப்படவில்லை. 14 வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அவற்றில்ஒருவீதிகூட எனது வட்டாரத்தில் இல்லை. மின்விளக்குகள் பொருத்துவதிலும் பாகுபாடு காட்டப்படுகின்றது.

தவிசாளர் பாராபட்சமாக இயங்குவதால் நிதிக்குழு அறிக்கையை நான் ஏற்கமாட்டேன் என்று தெரிவித்து சபையில்இருந்துவெளிநடப்புச்செய்தார்.

இந்தவிடயம்தொடர்பில்வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசனைத் தொடர்புகொண்டு கேட்டபோது:

மின்விளக்குகள் கொள்வனவுசெய்யும்பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தால் எமக்கு மின்விளக்குகள் தரப்படவுள்ளன. அவை தரப்பட்டதும் மின்விளக்குகள்தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வரும். ஆ.சி. கணேசவேல்குறிப்பிடுகின்ற வீதியை அபிவிருத்தி செய்வதற்கு கம்பரெலிய திட்டத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் நிதியொதுக்கியிருந்தார். கம்பரெலியத்திட்டம்தற்போதேநிறுத்தப்பட்டுள்ளது.

சபையின் நிதியில் இருந்து அந்தவீதிசீரமைத்துக்கொடுக்கப்படவுள்ளது. சபை நிதியில் இருந்தும் கம்பரெலிய திட்டத்தின்கீழும்ஒரேவீதியை பெயரிடுவது நல்லதல்ல என்ற அடிப்படையிலேயே அந்த வீதியின் அபிவிருத்திக்குச் சபை நிதி விடுவிக்கப்படவில்லை. உறுப்பினர்கணேசவேல்குறிப்பிடும்வீதிஅபிவிருத்தி செய்யப்படவில்லை - என்றார். (ம-115)

## நாவலரின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 30

சைவத்துக்கும்தமிழுக்கும் அளப்பெரும் தொண்டாற்றிய நாவலரின் நினைவு நிகழ்வுநல்லூர்சிறிதுர்க்கா தேவி மணிமண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை சிறிதுர்க்கா தேவிதேவஸ்தானத்தலைவர் கலாநிதி ஆறு. திருமுகனின் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம)

## கலாசார விழா

யாழ்ப்பாணம், நவ. 30

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பிரதேச செயலகமும்கலாசாரப்பேரவையும் இணைந்து நடத்தும் கலாசார விழா நாளை சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் பிரதேசசெயலர் ச. சிவஶ்ரீ தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகமகளிர்விவகாரம், மறுவாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு அமைச்சின் செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ம)



உலகநீரிழிவுதினத்தைமுன்னிட்டு யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகம் நீரிழிவு நோயாளர்களை இனங்காணும்முகமாக யாழ்ப்பாணம் மத்திய சந்தைப்பகுதியில்அண்மையில்மருத்துவமுகாமொன்றை நடத்தியிருந்தது. (ம)



## மாணவர்கள் மதிப்புறுத்தல்

கொடிகாமம், நவ. 30

போக்கட்டி அ.த.க. பாடசாலையில் இருந்து புலமைப்பரிசில்பரீட்சைக்குத்தோற்றிச் சித்தி பெற்றமாணவர்களைமதிப்புறுத்தும்நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கணித பாட உதவிக்கல்விப்பணிப்பாளர்வி. மதிதரன்கலந்து கொண்டார். ஓய்வுபெற்றஆசிரியர்பொ. திருப்பதி, நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-159)



*காந்தியூர் புலோலி வடமேற்கு முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சியும், சந்தையும் காந்தியூர் சனசமுக நிலையத்தின் தலைவர் ப. கௌநேசன் தலைமையில் கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றன.* (ம- 124)

# இன்றைய நிகழ்வுகள்

**குடமியன் அ.த.க.**

வரணி குடமியன் அ.த.க. பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்குநடைபெறவுள்ளன. அதிபர் ம. லினாஷ்குமார்தலைமையில்நடைபெறும்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. திருக்குமரனும் மதிப்புறுவிருந்தினராகபாடசாலையின்முன்னாள் அதிபர் பா. கனகரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**கரவெட்டி விக்னேஸ்வரா**

கரவெட்டிவிக்னேஸ்வராஆரம்பப்பாடசாலையின் மாணவர் மதிப்பளித்தல்நிகழ்வுகள் கல்லூரி அரங்கில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் ம. மகாகேதீஸ்வரனின் தலைமையில்நடைபெறும்நிகழ்வுக்குமுதன்மை விருந்தினராககரவெட்டிபிரதேசசெயலர் ஈ. தயாரூபன், சிறப்பு விருந்தினராக கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் மு. கனகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

**வரணி வடக்கு அ.த.க.**

வரணிவடக்குஅ.த்.க. பாடசாலையின்பரிசில்நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ந. வசந்தரூபன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக்கல்விவலயஆரம்பக்கல்விஉதவிக்கல்விப் பணிப்பாளர்எஸ். திருக்குமரன்கலந்துகொள்ளவுள்ளார். மதிப்புறுவிருந்தினர்களாகபாடசாலைஅபிவிருத்திக் குழு செயலர் செ. ஈஸ்வரநாதன், பழைய மாணவர் இ. கஜன் ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர்.

**வலந்தலை தெற்கு அ.மி.த.க.**

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வுகள் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் க. நேத்திரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறைமற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் சி. சத்தியசீலனும்சிறப்புவிருந்தினராகவடமாகாணக்கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலரும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான ப. விக்னேஸ்வரனும் கலந்துகொள்ள உள்ளனர்.

**வலந்தலை வடக்கு அ.மி.த.க.**

காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் அதிபர் விமலாதேவி விஸ்வநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன. முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ. இளங்கோவும்சிறப்புவிருந்தினராக காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி ப. நந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**இலக்கிய பரிசளிப்பு விழா**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்துநடத்தும்பிரதேச இலக்கிய பரிசளிப்பு விழா காரைநகர் கலாசார மத்திய நிலையத்தில் காரைநகர் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இன்று நண்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளன.

காரைநகர் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாபூசணம் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை முதன்மை விருந்தினராகவும் காரைநகர் யாழ்ரன் கல்லூரி அதிபரும் காரைநகர் மணிவாசகர் சபையின்செயலருமான வே. முருகமூர்த்தி, மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இ. கிருஸ்ணகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**வாசிப்புமாத பரிசளிப்பு**

வேலணை பிரதேச சபையால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுநடத்தப்பட்ட பரிசளிப்புவிழா வேலணை தேவா திறந்தவெளி அரங்கில் இன்று காலை 10 மணிமுதல் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச சபைத் தவிசாளர் நா. கருணாகரகுருமூர்த்தியின் தலைமையில் நடைபெறும் விழாவுக்குமுதன்மைவிருந்தினராகவடமாகாண ஆளுனரின்செயலர் இ. இளங்கோவன்கலந்துகொள்ளவுள்ளார். (ம-9,422,159,250)

# பொதுமக்கள் பார்வைக்கு வருகிறது மாநகர சபை வரவு-செலவுத் திட்டம்

## நாளை முதல் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், நவ.30

**யாழ்ப்பாண மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட விவரங்கள் நாளை முதல் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட வுள்ளது. இது தொடர்பில் நேற்றைய சிறப்பு அமர்வில் தீர்மானிக்கப்பட்டது.**

யாழ்ப்பாண மாநகர சபையின் சிறப்பு அமர்வு மாநகர முதல்வர் ஆனோல்ட் தலைமையில் நேற்று இடம்பெற்றது. 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பாதீட்டு வரைவு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு அது தொடர்பான முன்மொழிவு களைக் கூறுமாறு கோரப்பட்டது. வரைவு அறிக்கையைப் பார்வை யிட்ட உறுப்பினர்கள் அதில் உள்ள விடயங்கள் குறுகியனவாக உள்ளன. வரைவு திருத்தப்படவேண்டும் என்று தெரிவித்தனர். உறுப்பினர் பார்த்தீ பன்,

"இந்த அறிக்கையில் சென்ற ஆண்டின் வரவுகள், செலவுகள் தொடர்பில் எந்த விடயங்களும்உள்ளடக்கப்படவில்லை. இந்த அறிக்கை வைத்துக் கொண்டு அடுத்த ஆண்டுக்கான வரவு - செல வுத் திட்டத்தை முன்மொழியவே முடி யாது" என்று தெரிவித்தார். ஏனைய உறுப்பினர்களும்அந்தக்கருத்தையே கூறினர்.

**முதல்வருக்கு வகுப்பெடுத்த உறுப்பினர் கிருபாகரன்**

மாநகர சபையின் உறுப்பினர் கிருபா கரன் வரவு - செலவுத் திட்ட அறிக்கை தயாரிக்கும் போதும் அதை முன்மொ ழியும் போதும் இருக்க வேண்டிய சட்ட விதிமுறைகள் தொடர்பாக முதல் வருக்கு விளக்கமளித்தார்.

வரவு-செலவுத் திட்டம் முன்மொழி வதாக இருந்தால் அது சபையில் முன்மொழிய முன்னர் மக்கள் பாவ னைக்கு வைக்க வேண்டும். பத்திரி கைகளில் பிரசுரிக்க வேண்டும். அர சிதழில் பிரசுரிக்க வேண்டும் உள் ளிட்ட பல விடயங்களை அவர் தெளி வுபடுத்தினார்.

**சின்னம் வழங்கலால் வந்த சிக்கல்**

அந்தப் பாதீட்டில் 'சின்னம் வழங்கல்' என்ற செலவினமும் குறிப்பிடப்பட்டி ருந்தது. இது பெரும் சர்ச்சையாக முடிந்தது. பாதீட்டு வரைவுக்கு வெளி யில் சென்று வாக்குவாதப்படும் அள வுக்கு வசனம் அமைந்திருந்தது. தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரை அழைத்துவந்து நூலகத் தில் நிகழ்வு நடத்தியதை யோகேஸ் வரி பிரச்சினையாக்கினார். பின்னர் முதல்வர் ஆனோல்ட் அதற்கான விளக்கங்களை வழங்கினார். வெளி யிடத்தில் இருந்து மாநகரசபைக்கு வரும் பிரமுகர்களுக்கு சபையின் சார்பில் பரிசுப் பொருள் வழங்குவ தையே 'சின்னம்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது என்று தெளிவுபடுத்தினார்.

**தமிழில் பாதீடு**

பாதீட்டில் ஆங்கில மொழியும் கலக்கப் பட்டுள்ளதாகவும் ஏதாவது ஒரு மொழி யில் அதை வெளியிட வேண்டும் என்றும் உறுப்பினர் அருள்குமரன் கேட்டுக் கொண்டார். தமிழ் மொழி யில் மாத்திரமே வெளியிட வேண்டும் என்று ஏனைய உறுப்பினர்கள் கேட் டுக் கொண்டனர். சபையால் அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. தமிழ்மொழியில்மட்டுமேபிரசுரிப்பது என்றும் தேவை ஏற்படின் அடைப்புக் குள் ஆங்கிலப் பதத்தைப் பயன்படுத் துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**மக்கள் பார்வைக்கு**

உறுப்பினர்கள் கூறிய விடயங்களை உள்ளடக்கிய புதிய வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் முதலாம் திகதி (நாளை) மக்களுடைய பார்வைக்கு வைக்கப்படும் என்று தீர்மானிக்கப் பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் நவீன சந்தை, யாழ்ப்பாணம் மற்றும் நல் லூர் பிரதேச செயலகங்கள், பொது நூலகம் போன்ற இடங்களில் வரவு செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது. அதற்கான அறி வித்தல்கள் உள்ளூர்ப் பத்திரிகைக ளில் பிரசுரிக்கப்படும் என்றும் முதல் வர் தெரிவித்தார். அத்தோடு பாதீட்டு முன்மொழிவு தொடர்பான அடுத்த அமர்வு எதிர்வரும் 7ஆம் திகதி இடம் பெறும் என்றும் அறிவித்தார்.

(ம-21)




---

### நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தவறால் முழுமையாக அழிவடைந்த வாய்க்கால்

உடன் சீர்செய்யுமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம், சிவலிங்கப்புளியடியில் இருந்து ஓட்டு மடம் சந்தியை இணைக்கும் வீதியில் உள்ள கழிவு வாய்க்கால் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தவறான கணிப்பால் முழுமையாக அழிவடைந்துள்ளது. இந்தக் கால்வாயை உடனடியாகச் சீர்செய்து வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

காங்கேசன்துறை வீதியில் உள்ள சிவலிங்கப்புளியடிச் சந்தியில் இருந்து ஓட்டுமடம் சந்தி நோக்கிப் பயணிக்கும் குறுக்கு வீதியில் நீர் விநியோகத் திட்டத்துக்காக நீர்ப்பா சனத் திணைக்களத்தினர் குழாய்களைப் பொருத்து கின் றனர். இவ்வாறு பொருத்துவதற்காக வைக்கப்பட்ட குழாய்கள் அண்மையில் பெய்த கடும் மழையை அடுத்துச் சரிவடைந்ததிலேயே மேற்படி வாய்க்கால் சேத மடைந்தது. வாய்க்கால் சரிந்து விழுந்ததை அடுத்து அருகில் உள்ள மின்கம்பம் ஒன்றும் மண்ணரிப்பால் சரியக் கூடிய ஆபத்தான நிலையில் உள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் வாய்க்காலின் ஆளுகை நிறுவனமான யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ. ஆனோல்டைத் தொடர்புகொண்டு கேட்டபோது, "குறித்த விடயம் சக உறுப்பினர்களால் எனது கவனத் துக்குக் கொண்டுவரப்பட்டது. அந்த இடத்தை நாம் நேரில் சென்றும் பார்வையிட்டோம். வாய்க்காலை உடனடியாகச் சீர்செய்து தரும்படி நீர்பாசனத் திணைக் களத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது" - என்றார்.

(ம-105)

---

## ஆனோல்டின் சாதகத்தைக் கேட்ட முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் இம்மனுவல் ஆனோல்ட்டின் சாதகத்தைத் தருமாறு அவரிடமே கேட்டார் முன்னாள் முதல்வரான யோகேஸ்வரி. யோகேஸ்வரியின் இந்தச் செயற்பாடு சபையில் பெரும் சிரிப்பை உண்டுபண் ணியது.

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வில் முதல்வர் ஆனோல்ட் டுக்கும், யோகேஸ்வரிக்கும் இடையிடையே கருத்து மோதல்கள் இடம்பெற்றிருந்தன. வரி அறவீடு தொடர்பில் கதைத்த யோகேஸ்வரிக்கு ஆனோல்ட் விளக்கம் வழங்கி னார். அதன் பின்னர் இருக்கையில் இருந்து கொண்டு "உங்களது சாதகத்தைத் தாருங்கள் பார்க்க வேண்டும்" என்று யோகேஸ்வரி கேட்டார். தொடர்ந்து பிரச்சினைகள் வருகின்றன. அதனால் இருவரது சாதகத்தையும் பார்க்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

யோகேஸ்வரியின் இந்தக் கூற்று சபையில் பெரும் சிரிப்பை உண்டுபண்ணியது. உறுப்பினர் தர்சானந் "முதல்வரிடம் குறிப்புக் கேட்ட முன்னாள் முதல்வர் என்று நளை (இன்று) செய்தி வரும்" என்றார். "இருவரும் திருமணமானவர்கள் அதனால் சாதகத்தைக் கேட்டதில் பிரச்சினை இல்லை" என்று உறுப்பினர் செல்வ வடிவேல் கூறினார்.

"முன்னாள் முதல்வருக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் முதல்வர் தனது குடும்பத்தைப் பார்த்துக் கொள்ள வேண் டும்" என்று உறுப்பினர் கிருபாகரன் கிண்டலடித்தார். உறுப்பினர்கள் சில நிமிடங்கள் சிரித்துக் கொண்டே இருந் தனர். மாநகர சபையின் ஒரு அமர்வுக்காக சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவாகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-21)

---

## ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 30

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம; சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச் சுடர்' சஞ்சிகையின் கார்த்திகை மாத வெளியீடு இன்று இடம்பெறவுள்ளது. சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று காலை 10.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(ம-173)

---

## மாவீரருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமானது மாநகர சபை அமர்வு

யாழ்ப்பாணம், நவ. 30

தமிழர் விடுதலைக்காக வீரச்சாவடைந்த வீரமறவர்களான மாவீரர்கள், போரால் உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்கள் ஆகி யோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டே யாழ்ப்பாண மாநகர சபையின் நேற் றைய அமர்வு ஆரம்பமானது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சிறப்பு அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியள வில் மாநகர முதல்வர் ஆனோல்ட் தலை மையில் இடம்பெற்றது.

தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பி னர் லோகதயாளன் மாவீரர் நாள் கடந்து இரு நாள்களில் கூடும் இந்தச் சபையில் எமது தேச விடுதலைக்காகவும், மண் ணின் விடுதலைக் காகவும் உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின் னர், சபை அமர்வை ஆரம்பிக்க இந்த உயரிய சபையைக் கோருகின்றேன். இதற்கு முதல்வர் அனுமதிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இந்தக் கோரிக்கையை ஏற்கிறேன். இதன்படி இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்த லாம் என்று ஆனோல்ட் தெரிவித்தார். உறுப்பினர்களும் ஏகோபித்து ஏற்றுக் கொண்டனர். அதன்படி அனைவரும் எழுந்து அகவணக்கம் செலுத்தினர்.

முன்னதாக யாழ். மாநகர முன்னாள் முதல்வரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட் சியின் உறுப்பினருமான யோகேஸ்வரி பற்குணராஜா, போராட்ட காலத்தில் உயி ரிழந்த 'அனைத்து இயக்க' உறுப்பினர்க ளுக்கும் அஞ்சலி செலுத்துவோம் என் றும் போராட்டங்களில் உயிரிழந்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கடந்த காலங் களில் அஞ்சலிகள் செலுத்தப்பட்டன என் றும் குறிப்பிட்டார்.

(ம-21,106)



## 19 குடும்பங்களுக்கு அரிசி பகிரிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 30
வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்றிட்டத்தின் 22ஆம் கட்டமாக 19 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்கு 380 கிலோகிராம் அரிசி பங்கிட்டு வழங்கப்பட்டது.
வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறார்.
முல்லைத்தீவு பனிக்கன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் இவை அண்மையில் வழங்கப்பட்டன.
கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் ச.தவசீலன் தலைமையில் இது நடைபெற்றது. புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
புலம்பெயர்ந்து வாழும் அன்பரின் பணப்பங்களிப்பில் இதுவரையில் 743 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. (4)



புலமைப் பரிசிலில் சித்திபெற்று

## வறியமாணவர்கள் 20 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா அன்பளிப்பு

வவுனியா, நவ. 30
வன்னி மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றவர்களில் வறிய நிலையிலுள்ள 20 மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களின் கல்வியை ஊக்கப்படுத்தும் முகமாக ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.
வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம், பன்னாட்டு, உள்நாட்டு மாணவர்களின் பங்களிப்புடன் நிதி வழங்கப்பட்டது.
விருந்தினர்களாக நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மயூரன், செட்டிகுளம் பிரதேச செயலர் முகுந்தன், வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் சுயன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு மதிப்பளித்து அவற்றை வழங்கினர். இந்த உதவிக்காக கிடைத்த மேலதிக பணமான 15 ஆயிரம் ரூபா, போரில் தந்தையை இழந்து இந்த வருடம் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவிக்கு ஈருருளி கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
(4,222)



*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஒளிப்படக் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் நிஜங்களின் நிழல்கள் 2 ஒளிப்படக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது. கல்லூரியின் நூலகத்தில் நேற்று ஆரம்பமான இந்தக் கண்காட்சி மாணவர்களால் எடுக்கப்பட்ட நிஜ வாழ்க்கையை சித்தரிக்கும் ஒளிப்படங்களைக் கொண்டிருந்தது. இன்றும் நாளையும் காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை கண்காட்சி தொடர்ந்து இடம் பெறும். சுமார் நான்கு வருடத்தின் பின்னர் இந்த கண்காட்சி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ம- 7)*

# நிதி அதிகளவில் கிடைக்கும் பட்சத்தில் மேலும்பலவேலைகளைச்செய்யலாம்

## வவுனியா தெற்கு சபையின் தலைவர் தெரிவிப்பு

வவுனியா, நவ. 30
**பல்வேறு எதிர்பார்ப்புகளுடனேயே மக்கள் எம்மைவெற்றி பெறச்செய்தனர். அவர்களின் எதிர்பார்ப்புகளை 100 வீதம் பூர்த்திசெய்யாதுவிடினும் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு முயன்றுவருகின்றோம். அதிகாரிகள் எமக்கு நிதிகளை ஒதுக்கித் தருகின்ற பட்சத்தில் தேவைகளை மேலும் பூர்த்திசெய்யகூடியதாக இருக்கும்.**



வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவர் து.நடராயசிங்கம் தெரிவித்தார்.
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் வாசிப்பு மாதபரிசளிப்புநிகழ்வுசபையில் மாவீரர்களுக்கான அஞ்சலியுடன் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வாசிப்புமாதநிகழ்வுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வாசிப்பு பழக்கமானது மனிதனை முழுமைப்படுத்துவதுடன் பெருமைப் படுத்தவல்லது. பல தேவைகளைக் கொண்டமைந்தஎமதுகிராமங்களில் மாகாண சபையுடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டுவருகின்றோம். பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகள் திருத்த வேண்டிய நிலையில் இருக்கின்றன.
மக்கள் கோரிக்கைகளை முன்வைத்துவருகின்றனர். ஆனால்நிதிவசதிபோதுமானதாக இல்லை. மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்வதற்காகஎமது சபை தொடர்ந்துமக்களுடன்பயணிக்கும்- என்றார்.
சபையின் தலைவர் து.நடராயசிங்கம்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாண்ட்வாத்திய அணிவகுப்புடன்விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர்.
மங்களவிளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதல்நிகழ்வாக போரில் உயிரிழந்த மாவீரர்களுக்கு இருநிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. அனைவரும் எழுந்துநின்று மாவீரர்களுக்குஅஞ்சலிசெலுத்தினர்.
பிரதேச சபையால் நடத்தப்பட்ட வாசிப்புமாத போட்டிகளில் வெற்றிபெற்றமாணவர்களுக்கும், ஐந்தாம்தரப் புலமைப் பரீட்சையில் பாடசாலைமட்டத்தில்அதிகூடிய புள்ளிகளைப்பெற்றமாணவர்கள், முன்பள்ளி மாணவர்களுக்கும் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
அத்துடன் வவுனியாவின் மூத்த கலைஞரான தமிழ் மணி அகளங்கனின் இலக்கியப் பணியைப் பாராட்டி மதிப்பளிக்கப்பட்டது. கலை நிகழ்வுகளும்இடம்பெற்றன.
நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர், மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ரி.லிங்கநாதன், சிறிரெலோ கட்சியின் செயலாளர்கா. உதயராயா, மாவட்டமேலதிக செயலர், தி.திரேஸ்குமார், பிரதேச செயலர் கா.உதயராஜா, ஏனைய பிரதேச சபைகளின் தலைவர்களான ச.தணிகாசலம், ஆ.அந்தோணி, உபதலைவர் மகேந்திரன், பிரதேச சபையின் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள், மாணவர்கள்எனப்பலரும் கலந்துகொண்டனர். (4,110)

## நெளுக்குளம் பாலர் பாடசாலை கலைவிழாசிறப்புற இடம்பெற்றது



வவுனியா நெளுக்குளம் பாலர் பாடசாலை கலை விழா நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது. பாடசாலையின் தலைவர் வி.அற்புதராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக நெளுக்குளம் கிராம அலுவலர் வி.தர்சிகா வவுனியா மாவட்ட பெண்கள் சிறுவர் உத்தியோகத்தர் திருமதி.சுபாஜினி, முன்பள்ளி இணைப்பாளர் திருமதி கனகம்மா, ஓய்வுபெற்ற முன்பள்ளி இணைப்பாளர் அருள்வேல்நாயகி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மழலைகளின் கலை நிகழ்வுகளும் அவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றன. (4,205)

## முதியோர் விழா

வவுனியா வைரவபுளியங்குளம் முதியோர் சங்கம் நடத்தும் முதியோர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வைரவப்புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தலைவர் ம.தேவராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதியோர் உரிமைகளை வென்றெடுத்தல், அவர்களுக்கான பராமரிப்பும் அவசர சேவையும் போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. (4,110)

## ஈருருளிகள் வழங்கப்பட்டன

நீண்டதூரம் நடந்துசென்று கல்விகற்கும் இரண்டு மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன. 10ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கு.கஜீபன், 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ப. பத்மநி ஆகியோருக்கு ஜேர்மன் ஸ்ருட்காட்டில் இயங்கும் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பில் அங்கம் வகிக்கும் கோபிதாஸ் என்பவரின் பிறந்த நாளையொட்டி இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4,222)

## வாசிப்புமாதநிகழ்வுகளின் பரிசளிப்பு இடம்பெற்றது

வவுனியா, நவ. 30
தேசியவாசிப்பு மாத பரிசளிப்பு, வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அங்கு தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழும் ஒன்று வெளியிடப்பட்டது. தமிழ்மணி அகளங்கன் அதனை வெளியிட முதல் பிரதியை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.சுவர்ணராஜா பெற்றுக்கொண்டார்.
மங்கள விளக்கேற்றல், சர்வமத குருக்களின் ஆசியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன.
இன நல்லிணக்கத்தை பிரதிபலிக்கும் முகமாக வரவேற்பு நடனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நகரசபை உறுப்பினர்களுக்குத் தேசிய வாசிப்பு மாதச் சிறப்பிதழ்கள் வழங்கப்பட்டன.
பொதுநூலகத்தால் நடத்தபட்ட வாசிப்பு மாதப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகள் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கினர். கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.
வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன், வலயக்கல்வி பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன், சபையின் உபநகரபிதா சு.குமாரசாமி, நகரசபைச்செயலாளர் இ. தயாபரன், ஆகியோர் கலந்துகொண்டனர். நகரசபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் எனப் பலரும் அதில் கலந்துகொண்டனர். (4,110)





# ரூ.75 ஆயிரம் பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பு



வவுனியா, நவ. 30
வவுனியா உமா மகேஸ்வரன் முன்பள்ளிக்கு பான்ட் வாத்திய உபகரணங்களும் சீருடையும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.
அந்த முன்பள்ளியின் வருடாந்தக் கண்காட்சி நேற்றுமுன்தினம் காலை அதிபர் மீரா குணசீலன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பான்ட் வாத்திய உபகரணங்களும் சீருடையும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.
வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதாவும் தற்போதைய உறுப்பினருமான ச. மோகன், வவுனியா நகர சபையின் உறுப்பினர் சு. காண்டீபன், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சந்திரேஸ்வரன், உறுப்பினர் ரவிச்சந்திரன், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் செயலாளர் கெர்சோன் கரிஸ், ஆற்றல் அரசி பனம்பொருள் உற்பத்தி நிலையச் செயலர் நிலா, முன்பள்ளி ஆசிரியர், பெற்றோர்கள் எனப் பெருந்திரளானோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (4,110)



*வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பன்னாட்டுப் பழைய மாணவர் சங்கத்தினால் வவுனியா புதுக்குளம் கனிஷ்ட பாடசாலை மாணவர்களான கி.சதுர்சன், ப.கலையரசன் ஆகியோருக்கு தலா பத்தாயிரம் ரூபாவிற்கான காசோலை வழங்கி வைக்கப்பட்டது. (222)*

## தொழிற்கல்வி தொடர்பான கருத்தரங்கு

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு பிற்பட்ட தொழிற்கல்வி தொடர்பான கருத்தரங்கு க்ல்லூரியின் பொன்சபாபதி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
கரைச்சிப் பிரதேச செயலகமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்தது. நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜிதா, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர் தனுஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (159)



# பேசாலை 4ஆம் வட்டார வீதி 71 லட்சம் ரூபாவில் சீரமைப்பு

தலைமன்னார், நவ. 30
**பேசாலைமீனவர்களும்அதன் நான்காம் வட்டார குடிமக்களும் வாழும் வீதி 71 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் காப்பெற் வீதியாகச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**



மன்னார் பிரதேச சபை உறுப்பினர்களான திருமதி ஆர். டிப்னா குரூஸ் மற்றும் என்.செபமாலை பீரீஸ் ஆகியோர் மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிரிடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க வீதி சீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பேசாலை உதவிப் பங்குத் தந்தை அருட்பணி பசில் கிளைன் அடிகளார் மத வழிபாட்டுடன் சீரமைப்பை ஆரம்பித்து வைத்தார். (4,60)

## தப்பி ஓடியவர் மீளவும் கைது

கிளிநொச்சி மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்றுவந்த நபர் தப்பிச் சென்றிருந்த நிலையில் மீளவும் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று கிளிநொச்சிமாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
மன்னார்போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி நகர்ப் பகுதியில் வைத்து கிளிநொச்சியை சேர்ந்தவர் கைது செய்யப்பட்டார்.
அவரிடம் 6 கிராம் குடு போதைப் பொருள் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளுக்காக அவர் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
அவர் சுகவீனம் காரணமாக கிளிநொச்சிப் பொலிஸாரின் பாதுகாப்புடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது பொலிஸாருக்குத் தெரியாமல் தப்பிச்சென்றுள்ளார். அங்கு கடமையில் இருந்த இரு பொலிஸார் சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.
கிளிநொச்சி மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கவிடம் கைது செய்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.
அவர் கைது செய்யப்படும்போது 2 கிராம் குடு போதைப் பொருள் வைத்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவரது உந்துருளியும் கைப்பற்றப்பட்டது. கிளிநொச்சி நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டார். 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4,6)

மகளின் பிறந்த தினத்தையொட்டி

## பொலிஸ் உத்தியோகத்தர் 65 மாணவர்களுக்கு பொருள்கள் வழங்கினார்



வவுனியாதம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வசதியற்ற 65 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், சீருடை, பாதணிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.
வவுனியா பொலிஸ் நிலையத்தில் வழக்குத் தொடுநர் பிரிவில் பணியாற்றும் பொலிஸ் பரிசோதகர் புஸ்பலால், தனது மகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு இவற்றை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.
பாடசாலையில் அதன் அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி. எம். எஸ். எம். தென்னக்கோன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அவற்றை வழங்கினார். 11 ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரியர்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.
பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4)



## வவுனியா மனித உரிமை வலய செயலணியின் ஆரம்ப நிகழ்வு

வவுனியா, நவ. 30
வவுனியா பிரதேச மட்ட மனித உரிமை வலய செயலணியின் ஆரம்ப நிகழ்வும் கருத்தமர்வும் வன்னி இன் விருந்தினர் விடுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.
வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் எம். ஆர். பிரியதர்சன மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தரணி ஆர். எல். வசந்தராஜ் தலைமையில் இது இடம்பெற்றது.
கருத்தமர்வில் மனித உரிமைகள் மீறல்களை வெளிக்கொண்டுவருதல் மற்றும் சட்டரீதியிலான தெளிவூட்டல்களை வழங்குதல் என்பன பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தரணி ஆர். எல். வசந்தராஜ் கருத்துரைத்தார்.
நிகழ்வில் வவுனியா மாவட்ட சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர். (4)

### கிளி. இந்து ஆரம்ப வித்தியின் பரிசளிப்பு இன்று

கொடிகாமம், நவ. 30
கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வும் சாதனையாளர்கள் மதிப்பளிப்பும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் பாலன் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.ரவீந்திரன், சிறப்புவிருந்தினராக ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பொ.விஜயநாதன், மதிப்புறு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சைவ மங்கையர் கழக செயலாளரும் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகருமானதிருமதிசெ.சோமசேகரம்பிள்ளை, ஜெயந்திநகர் கிராம உத்தியோகத்தர் திருமதி றஜீவனா ஜஸ்டினன்ட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4,159)

## பாடல்கள் இறுவெட்டு வெளியீடும் ஒளி விழாவும்

தலைமன்னார், நவ. 30
மன்னார் புனித பத்திமா வித்தியாலத்தில் ஒளி விழாவும் கிறிஸ்தவ பாடல்கள் இறுவெட்டு வெளியீடும் நேற்று இடம்பெற்றது.
வித்தியாலய பிரதி அதிபர் ஜி.சீ.மெரில் குரூஸ் தலைமையில்நடைபெற்றஇந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக குறித்த வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர் ஜெ.ஸ்ரனிஸ்லாஸ் (டிலாசால் சபை), சிறப்பு விருந்தினர்களாக பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.தேவராஜா கொடுதோர், அருட்பணி அன்புராசா, தமிழ்நாடு கோவை குழந்தை மாதா திருத்தலத்தின் காங்கயம் மறையுரையாளர் அருட்பணி சேவியர் கிளாடிஸ், மன்னார் நகர்ப் பிரதேச செயலக கிராம அலுவலர்கள் நிர்வாக அதிகாரி எஸ். ஏ.ராதா பெர்ணான்டோ, தலைமன்னார் மாவட்ட மருத்துவமனையின் மருத்துவர் எம்.வசந்தன் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (4,60)



# வடக்கிலுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பத்தவறின் 2019இல் சிக்கல் வரும்

## ஆளுநருக்கு சுட்டிக் காட்டியதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

வடக்கில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பத்தவறின் அடுத்த வருடம் பெரும் சிக்கல் ஏற்படும். இது பற்றி வடக்கு ஆளுநருக்குத் தெரிவித்தோம். உரிய நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் கூறியுள்ளார் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, வடக்கு மாகாண ஆளுநருடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம்கலந்துரையாடியுள்ளனர். ஆசிரியர்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகள், வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள ஆசிரிய பற்றாக்குறை, ஆசிரியர்களின் இடமாற்றம், வலயக் கல்விப் பணிப்பாளர்களின் நியமனம், வெற்றிடமாக உள்ள உடற்கல்வி ஆசிரியர்களுக்கானபுதியநியமனம், சீர்செய்யப்பட வேண்டிய ஆசிரிய ஆளணி போன்றன பற்றிக் கலந்துரையாடப்பட்டன.

2019ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள்ஏற்படவுள்ளனஎன்றும்சுட்டிக்காட்டப்பட்டது. 400க்கும் மேற்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியவெற்றிடங்கள்நிலவுகின்றன. தமிழ் பாடத்துக்கு(99)வெற்றிடங்களும், கணிதம் (188), விஞ்ஞானம் (161), ஆங்கிலம் (94) ஆகிய பாடங்களுக்கான வெற்றிடங்களை உடன்நிரப்பாதவிடத்து 2019இல்நெருக்கடி ஏற்படும் என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆளுநரிடம் முன்வைத்தது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர்ரெஜினோல்ட்குரேகூறினார்என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது. (4)

# 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஊருக்கு 24 கிலோமீற்றர்கள் சுற்றிப் பயணம்

## ஆற்றுக்குக் குறுக்காகப் பாலம் இன்மையே அவலத்துக்குக் காரணம் என விசனம்

கிளிநொச்சி, நவ. 30

கிளிநொச்சிகனகராயன்ஆற்றுப் பகுதியில் பாலம் இன்மையால்மழைகாலத்தில்5 கிலோமீற்றர் தொலைவில் உள்ளகிராமத்துக்குச்செல்ல 24கிலோமீற்றர்தூரம்சுற்றிச் செல்லவேண்டிய அவலம் தொடர்கிறது. இதற்கு மாற்று ஏற்பாடாக பாலத்தை அமைத்துத்தருமாறுகரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் மக்கள்கோருகின்றனர்.

வவுனியா மாவட்டம் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் சின்னடம்பன்கிராமஅலுவலர்பிரிவில் போருக்கு முன்னர் கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம், சின்னடம்பன் ஆகிய கிராமங்களில் 463 குடும்பங்கள் வாழ்ந்தன. தற்போது 211 குடும்பங்களே வாழ்கின்றன.

கரப்புக்குத்தி கிராமத்தில் இருந்து மாணவர்கள் உள்ளிட்ட பலரும் 5 கிலோ மீற்றரில் உள்ள முதன்மைக்கிராமமான கனகராயன் குளத்துக்குப் பயணிக்கும் பாதையின் குறுக்கே ஆறு பாய்ந்து கொண்டிருக்கும்.

மழைகாலத்தில் அந்த இடத்தினூடாகப் பயணிக்க முடியாது. அவர்கள் 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இந்தக் கிராமத்துக்கு 24 கிலோமீற்றர் சுற்றுப் பயணம் மேற்கொண்டே செல்ல வேண்டியுள்ளது.

இதுதொடர்பில்எத்தனையோ அதிகாரிகளிடம்சுட்டிக்காட்டினோம். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

இதுபோன்றே, சின்னடம்பன்கிராமஅலுவலர்பிரிவில் வசிப்போருக்கு போருக்கு முன்னர் வாழ்ந்த குடும்பங்கள் பல பகுதிகளில் சிதறி வாழ்கின்றன. அவர்கள் ஊர் திரும்புவதற்கு மறுக்கின்றனர். காரணம் கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லாதமையே.

இங்குள்ளவர்களின்முக்கிய தொழில்விவசாயம். மூன்று கிராமத்திலும் 7 குளங்கள் உள்ளன. இவற்றில்மூன்று குளங்களே சீரமைக்கப்பட்டுள்ளன. வயல் நிலங்களில் போர் காரணமாக காடு வளர்ந்துள்ளது. அங்கிருந்து போரால் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். மரங்கள் வளர்ந்த நிலையில் அவற்றைஅழிக்கமுனைந்தால் வன இலாகாவினர் கைது செய்வர்.

சின்னடம்பன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பவான் தெரிவித்ததாவது:

இந்த 3 கிராமங்களுக்கும் இன்றுவரையில் பேருந்து சேவை கிடையாது. பாடசாலைகளுக்குப்போதியஆசிரியர்கள் கிடையாது. யானைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளிடம் தெரிவித்தோம். மின்சார வேலி அமைத்துதருவதாகக்கூறி7 வருடங்களாகிவிட்டன. இன்னும் வேலி அமைக்கப்படவில்லை. பருவத்துக்குப் பருவம் விளைச்சல் கிடைக்கின்றதோ இல்லையோ யானைகளால் அழிவு மட்டும்ஏற்படுகின்றது.

இவைஒருபுறமிருக்க, எமது வாழ்வாதார நிலங்களை அபகரிக்கும்வன இலாகாவினர் வாழ்வாதாரத்தின் முக்கிய மூலமான குளங்களையும் விட்டு வைக்கவில்லை. 3 குளங்களை தமது ஆளுகையின் கீழ் எடுத்து விட்டனர். அந்தக் குளங்களைச் சீரமைக்கவுமில்லை. குளங்கள்கமநலசேவைத்திணைக்களத்துக்குச் சொந்தமானவை.

இவைதொடர்பில்உரியஅதிகாரிகள் கவனம் செலுத்தி எமதுகிராமத்தின்அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்-என்றார்.(4,105)

# கல்வியில்வடக்குகடைசியில்இருக்க மாகாண சபைதான் முழுப் பொறுப்பு

## தமிழர் ஆசிரியர் சங்கப்பொதுச் செயலர் கூறுகிறார்

வடக்கு மாகாணம் கல்வி மட்டத்தில் 9ஆவது மாகாணமாக விளங்குவதற்கு வடக்குமாகாணசபையேபொறுப்பேற்க வேண்டும். மாகாண பாடசாலைகளில் நிலவும்ஆசிரியவெற்றிடங்களைநிரப்ப, வடக்கு மாகாண சபை கடந்த 5 வருட ஆட்சியில் தவறிழைத்துவிட்டது என்று இலங்கைத்தமிழர்ஆசிரியர்சங்கத்தின் பொதுச் செயலர் சரா புவனேஸ்வரன் குற்றஞ்சாட்டினார்.

சங்கத்தின் கலந்துரையாடல் யாழ்ப்பாணம்மத்தியகல்லூரியில்கடந்த24ஆம் திகதிநடைபெற்றது. அதன்பின்னர்அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

கல்வித் தரத்தில் வடக்கு 9ஆவது இடத்திலும், கிழக்கு 8ஆவது இடத்திலும் உள்ளன. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மாகாணசபைஉருவாக்கப்பட்டபின்னர் இந்த நிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது. பாடசாலைகளில்கணிதம் மற்றும்விஞ்ஞானப்பாடஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் கோரப்பட்டன. குறைந்தளவானோரே விண்ணப்பித்தனர். விஞ்ஞானத் துறை சார்ந்தவர்கள் வேறு துறைகளுக்குச்சென்றுவிட்டார்கள்.

வடக்குமாகாணசபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர்இவைபற்றியவிவரத்தைதயாரித்து வழங்கி வந்தோம். மாற்று வழிகளைத் தேடுமாறு கோரியிருந்தோம். பட்டதாரிகளுக்கு நியமனம் கொடுக்கின்றார்கள்.

பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்க வடக்கு மாகாண சபைக்கு வழங்கிய அதிகாரத்தின் பிரகாரம் இந்த ஆசிரிய வெற்றிடங்களை ஏன் நிரப்பவில்லை? என்று கேள்வி எழுப்பினார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பதிவை மீள்புதிப்பிக்காதமை காரணமாக பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்ல என்றுசிலமாதங்களுக்குமுன்னர்தெரிவிக்கப்பட்டது. தற்போது அந்தச் சிக்கல்கள் தீர்க்கப்பட்டு சங்கம் முன்னர் போன்று இயங்குகின்றது என்று சங்கத்தின்பொதுச்செயலர்சரா.புவனேஸ்வரன் தெரிவிக்கிறார்.

"இதுதொடர்பில்தொழில்திணைக்களத்திடம் மாகாணக் கல்வித் திணைக்களம் கேட்டது. சிக்கல்கள் தீர்க்கப்பட்டு சங்கம் இயங்குகின்றது என்று திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்" என்று வடக்கு மாகாணக்கல்விப்பணிப்பாளர்செ.உதயகுமார் தெரிவித்தார். (4,106)

# சங்கிலி அறுத்து ஓடியவர்களை தேடிப் பிடித்தனர் இளையோர்

## கைதடியில் திசை தெரியாது தவித்தபோது மாட்டிய அவர்களுக்கு நல்ல கவனிப்பு

பொருள்கள்வாங்குவதுபோல்பாசாங்கு செய்து கடையில் நின்ற பெண்ணிடம் சங்கிலி அபகரிக்க முற்பட்டவர் பிரதேச இளையோரால்மடக்கிப்பிடிக்கப்பட்டார். சம்பவம் கைதடி தென்கிழக்கில் நேற்று முன்தினம் மதியம் 1.30 அளவில் இடம் பெற்றுள்ளது.

உந்துருளியில் வந்த இரு இளைஞர்களில்ஒருவர்கடையின்உள்ளேசென்று இறுவட்டு வாங்குவதுபோல் பாசாங்கு செய்துகடையில்நின்றபெண்ணின்சங்கிலியைப் பிடித்து இழுத்து அறுத்தார். அதை இறுகப் பற்றிக் கொண்டு உதவி கோரி கூக்குரலிட்டார். அறுத்த சங்கிலி கைக்குக் கிடைக்காத நிலையில் தப்பினால்போதும்என்றநிலையில்உந்துருளியில் ஏறிக் கைதடியின் உள் வீதியால் இருவரும்தப்பியோடியுள்ளனர். பிரதேச இளைஞர் ஒருவர் விடயத்தை அறிந்து ஏனையஇளைஞர்களுக்குதெரியப்படுத்தியவாறு தேடுதலில் இறங்கினார். மற்றையோரும் அவருடன் சேர்ந்து விட்டனர்.

சங்கிலிஅறுத்தவர்கள்திக்குத்திசைதெரியாது கைதடிக்குள்ளேயே அலைந்து திரிந்தனர். ஓயாது தேடிய இளைஞர்கள் கைதடி வடக்கு வீதியில் வைத்து அவர்களைப் பிடிக்க முயன்றபோது உந்துருளியின் பின்னால் இருந்த திருடன் தப்பியோட மற்றையவர் வசமாக மாட்டிக் கொண்டார். கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர்பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டார். அவரை விளக்கமறியலில்வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

அவர்யாழ்ப்பாணத்தின்திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் வசிப்பவர் எனவும் கைதடியில் இடம்பெற்ற பல திருட்டுக்களுடன் தொடர்புடையவர் எனவும் விசாரணையில் தெரியவருவதாகக் கூறப்படுகின்றது. (4,288)




# சாதனை மாணவர்கள் மதிப்பளிப்பும் பரிசளிப்பும்

முல்லைத்தீவு, நவ. 30

இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் மாவட்ட ரீதியாக முதல் நிலையைப் பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாமடு, பழம்பாசி அ.த.க. பாடசாலையில் நேற்று இடம்பெற்றது.

பொக்கிஷம்இலவசக்கல்விப்பிரிவின் ஏற்பாட்டில்இடம்பெற்றது. முதன்மை விருந்தினராகமுல்லைத்தீவுமாவட்ட உதவிச் செயலரும், சிறப்பு விருந்தினர்களாக ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி, ஆசிரிய ஆலோசகர், பழம்பாசி கிராம அலுவலர், அயற்பாடசாலை அதிபர்கள் கலந்து சிறப்பித்தனர்.

மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குப் பதக்கம் அணிவிக்கப்பட்டு நினைவுச் சின்னங்களும், வெற்றிச் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். நிகழ்வில் வடக்கின் 5 மாவட்டங்களையும்சேர்ந்த மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (4,222)



# யாழ். – கதிர்காமம் வழித் தடத்தில் 2கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

வவுனியா, நவ. 30

கேரளக் கஞ்சாவைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் அவர்கள் கைது செய்யப்பட்டனர். கிடைத்த தகவலின்படி யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் நோக்கிச் சென்ற பேருந்தை வழிமறித்துச் சோதனை நடத்தியபோதே 2 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைக் கொண்டு சென்றனர் என்ற குற்றச்சாட்டில் அனுராதபுரத்தைச் சேர்ந்த 21, 28 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் வவுனியாநீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,110)

# தமிழர் நிலங்களில் பெரும்பான்மையினரே அதிகரிப்பு! இருக்கும் நிலத்தைத் தக்கவைக்க நடவடிக்கை என்ன?

## அரசியல்வாதிகளோ அரச அதிகாரிகளோ கண்டுகொள்ளவில்லை என்று வவுனியா எல்லைக் கிராமத்தவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்

வவுனியா, நவ. 30

நில அபகரிப்புத் தொடர்பில் குரல்கொடுப்பவர்கள் தற்போது எமது கைவசம் உள்ள நிலங்கள் பறிபோகாதவாறு நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும். பெரும்பான்மையினரே தமிழ்க் கிராமங்களில் அதிகரித்து வருகின்றனர் என்று வவுனியா மாவட்டத்தின் எல்லைப் பகுதியை அண்மித்த ஊஞ்சல்கட்டி, மருதோடை கிராமங்களின் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது:
1990ஆம் ஆண்டுகளில் இங்கு அதிகமானோர் வாழ்ந்தனர். ஊஞ்சல்கட்டியில் 326 குடும்பங்களும் மருதோடையில் 400குடும்பங்களும் வாழ்ந்தன. போரால் இடம்பெயர்ந்து பல பிரதேசங்களிலும் சிதறி வாழ்ந்தனர். போர் நிறைவுற்று 10 ஆண்டுகளாகின்றபோதும் எங்கள் பகுதிகளில் மீள் குடியமர அச்சம்காரணமாக பொதுமக்கள் முன்வருவதில்லை.

**வீதி**

இந்த இரண்டு கிராமங்களுக்கும் இடையில் செல்லும் நெடுங்கேணி - வெடிவைத்தகுளம் வீதி சுமார் 25 வருடங்களாகச் சீரமைக்கப்படவில்லை. 17 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி கடுமையாகச் சீரழிந்துள்ளது.

**யானைகள்**

போதியளவில் தொழில் வாய்ப்புகள் இல்லை. தோட்டச் செய்கைக்கான நிலமும் தண்ணீரும் உள்ளபோதிலும் பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியாத நிலைமை. காரணம் அறுவடைக் காலம் நெருங்கும்போது யானைகள் வந்து பயிர்களை அழித்து நாசமாக்கிவிடுகின்றன.

வருமானமும் இன்றி போட்ட முதலும் இழக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இந்தக் காரணங்களால் 326 குடும்பங்கள் வாழ்ந்த ஊஞ்சல்கட்டி கிராமத்தில் தற்போது 32 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றன.

எமக்கு அண்மையில் உள்ள வேறு இனத்தவர்கள்1983 மற்றும் 1990களில் 200குடும்பங்களாக வெளியேறியவர்கள் இன்று ஆயிரம் குடும்பங்களாத் திரும்பியுள்ளனர்.

நாம் வாழ்ந்த 326 குடும்பங்களில் 30 குடும்பங்கள் மட்டுமே திரும்பியுள்ளோம். இந்த நிலையில் எவ்வாறு எங்கள் நிலங்களைப் பேணிப் பாதுகாக்க முடியும்?

மருதோடையில்வாழ்ந்த400குடும்பங்களில் இன்று வெறும் 86 குடும்பங்கள் மட்டுமே சொந்த இடம் திரும்பியுள்ளன.

இவ்வாறு மிகக் குறைந்த அளவில் சொந்த இடம் திரும்பியவர்களுக்குக்கூட அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தவில்லை.

**மின்சாரம் இல்லை**

யானைகளின் தாக்கம் உள்ள இந்தப் பகுதிகளில் இன்னும் பல வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. ஊஞ்சல்கட்டியில் 32 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றோம் 9 குடும்பங்களுக்கு மின்சாரம் கிடையாது. 8 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை. மீள்குடியமர்ந்த எங்களுக்கு 9 ஆண்டுகளாக இவை ஏற்படுத்தப்படவில்லை.

அவ்வாறிருக்க எஞ்சிய எமது உறவுகளை இங்கு குடியமர வருமாறு எவ்வாறு அழைக்க முடியும்?

மருதோடைக் கிராமத்தில் வாழும் 90 குடும்பங்களில் 68 குடும்பங்களுக்கு மட்டுமே நிரந்தர வீடுகள் உள்ளன.

எஞ்சிய குடும்பங்களுக்கு வீடுகள் இல்லை. இங்கு வாழும் 14 குடும்பங்களுக்கு இன்றுவரையில் மின் இணைப்பு வழங்கப்படவில்லை. வாழ்வாதாரத்துக்குப் போதிய வயல்நிலங்களும் குளங்களும் உள்ளன. விவசாயம் மேற்கொள்ளமுடியாதவாறு இங்கும் யானைகளின் தொல்லை பெரிய பிரச்சினையாகவே உள்ளது.

யானைகளின் தொல்லை தொடர்பிலும் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் 6 ஆண்டுகளாக முறையிடாத அதிகாரிகளே கிடையாது. யானைக்கு வேலி போட்டுத் தருவதாகப் பல தடவை வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்பட்டன. பணிகள்மட்டும்இடம்பெறவேஇல்லை.

**கண்டுகொள்ளாத அரசியல்வாதிகள்**

நிலமைகள் இவ்வாறு உள்ளன. எல்லைக் கிராமத்தைப் பாதுகாக்க நாம் போராடிவருவதனை அரசியல்வாதிகள் கண்டுகொள்ளவில்லை.

அச்சத்துக்கு மத்தியிலும் வேற்று இனத்தவர்களுக்கு மத்தியிலும் வாழும் எங்கள் நிலையைப் புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவுகளாவது புரிந்து கொள்ளவேண்டும். எங்கள் கிராமத்துக்கு உதவி செய்ய வேண்டும். அபிவிருத்தி, வாழ்வதற்கு வசதிகளை ஏற்படுத்தி எஞ்சியோரும் இங்கு வந்து குடியமரும் அளவுக்கு புலம்பெயர்ந்து வாழ்பவர்களும், அரசியல்வாதிகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் அரச துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கு எமக்குப் பின்னர் குடியேறிய பெரும்பான்மை இனத்தவர்களுக்குச் சகல வசதி வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. அவர்களுக்கு மட்டும் அந்தளவுக்கு உதவிகள் குவிகின்றன. எமக்கு எதுவுமில்லை.

**பெரும்பான்மையினரே உறுப்பினரானார்**

இந்தமுறை நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில்கூட தமிழ்க் கிராமமான இந்தப் பகுதியில் இருந்து சிங்கள இனத்தவரே உறுப்பினராகத் தெரிவானார் - என்று அவர்கள் கூறுகின்றனர்.

**ஆராய்வதாகக் கூறுகிறார் மாவட்ட மேலதிகச் செயலர்**

இந்த விடயங்கள் தொடர்பில் வவுனியா மாவட்ட மேலதிக செயலர் தி.திரேஷ்குமாரிடம் கேட்டபோது, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய பின்னர், குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கு இது தொடர்பாகத் தெரியப்படுத்தி அவர்களது தேவைகள் தொடர்பாக ஆராய்வதாகத் தெரிவித்தார். (4,105,110)

# எதிர்க் கட்சித் தலைவரின் ராஜதந்திரம் படுதோல்வி!

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

வவுனியா, நவ.30


எதிர்க் கட்சித் தலைவரின் ராஜதந்திரம் படுதோல்வியடைந்துள்ளது என்று ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா மத்திய மகாவித்தியாலத்தில் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இரு முதன்மைக் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியே முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியான விதத்தில் கையாளவில்லை வெறுமனே ஜனநாயகம் மீறப்பட்டிருக்கிறது. அரசமைப்பு மீறப்பட்டிருக்கிறது என்று கருதி அதிகாரப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் ஒரு கட்சியை அல்லது நபரை காப்பாற்றும் செயலையே எதிர்க் கட்சித் தலைவரும் அவர் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

கொழும்பில் இருக்கின்ற ராஜதந்திரிகளை அணுகி மூன்றாம் தர இணக்கத்துடன் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வல்லமையைத் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வழங்கியிருக்கும் நிலையில் தமிழ் மக்களின் நலனுக்காக அதனைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். கடந்தவாரம் 14 நாடுகளின் ராஜதந்திரிகளைச் சந்தித்த எதிர்க் கட்சித் தலைவர் வெறுமனவே இந்த நாட்டில் ஜனநாயகம் மீறப்பட்டிருக்கிறது என்பதைத்தான் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தாரே தவிர பல வருடகாலமாக இரு முதன்மைக் கட்சிகளும் தமிழ் மக்களுக்கு இழைத்திருக்ககூடிய அநீதிகளைப் பற்றியும் அரசியல் தீர்வு பற்றியும் எந்தவிதமான கவனத்தையும் செலுத்தவில்லை. தற்போது அரியதொரு சந்தர்ப்பத்தைத் தவறவிட்டிருக்கின்றனர்.

கூட்டமைப்பு என்றபெயரைத் தமிழ் அரசுக் கட்சி தனது சர்வாதிகாரப் பிடியில் வைத்திருந்ததன் விளைவினால் தான் கூட்டமைப்பும் இன்று கூட்டமைப்பாகவே இல்லை. தமிழர்களுக்கும் எந்த ஒரு தீர்வும் இல்லை - என்றார். (4,110)



# வவு. நகர சபையினுள் அதிகரிக்கும் முரண்பாடு

## தமிழ் அரசு உறுப்பினர்கள் உப குழுக்களிலிருந்து விலகினர்

வவுனியா நகரசபையின் உப குழுக்களில் இருந்து தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த மூவர் விலகியுள்ளனர்.

மக்கள் ஆதரவை தாம் பெறுவதற்காக அரசியல் விழாவாக நடத்தப்படவிருக்கும் விருது வழங்கும் நிகழ்வு தொடர்பாக சில விடயங்களைக் குழுவின் அங்கத்தவர்கள் என்ற ரீதியில் முன்வைத்தபோதிலும் அதனைச் சபைத் தலைவரும், அவரது கட்சிக்காரர்களும் கவனத்தில்எடுக்கவில்லை.

தாம் செய்யும் செயற்பாடுகளில் எம்மையும் இணைத்துள்ளோம் என்று பொய் கூறி வருகின்றனர். அது உள்ளிட்ட பொய்யான குற்றச் சாட்டுகளைத் தவிர்க்கும் நோக்கோடு வவுனியா நகரசபையின் அனைத்து உப குழுக்களில் இருந்தும் நகரசபை கலாசார குழுவில் இருந்தும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களான மூவர் விலகிறோம் என்று தெரிவித்தனர்.

கலாசாரக் குழுவின் தலைவரான பரதலிங்கம் வெளிநாடு சென்றிருந்தார். அவருடைய விலகல் கடிதம் உட்பட நகரசபை உறுப்பினர்களான லக்சனா நாகராஜன், ஜெயரூபன் ஆகியோர் தமது கடிதங்களை நகரபிதா இ.கௌதமனிடம் வழங்கினர். சில நாள்களுக்கு முன்னர் அவர்கள் உப குழுக்களிலிருந்தும் விலகியுள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர். (4,110)

# அச்சங்குளம் கடற்கரை தூய்மையாக்கல்



மன்னார், நவ. 30

மன்னாரில் கடற்கரையோரங்களைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வில் நானாட்டான் அச்சங்குளம் கடற்கரை கடந்த செவ்வாய்க்கிழமை காலை தூய்மைப் படுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் இடர் முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையில் தூய்மையாக்கல் இடம்பெறுகிறது.

இந்த நிகழ்வில் மாவட்ட இடர்முகாமைத்துவப் பணியாளர்கள், கடற்படையினர், அச்சங்குளம் பிரதேச மீனவர்கள் மற்றும் நானாட்டான் பிரதேச சபை ஊழியர்களும் அச்சங்குளம் கிராமத்து பொதுமக்களும் பங்குபற்றியிருந்தனர். (4,213)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பில் நேற்று சாந்தத்துக்கான அறிகுறி

நேற்றைய தினம் கொழும்பு அரசியலில் இரு முக்கிய விடயங்கள் நடந்தேறின. ஒன்று அண்மையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவின் சட்டத்துக்கு முரணான தலைமை அமைச்சர் அலுவலகத்திற்கான நிதிகளை முடக்கும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மற்றொன்று ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான ஆட்சிக்குத்தமது கட்சியைச்சேர்ந்த 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்கிறார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசதலைவருக்கு அறிவித்தது.

ஐப்பசி 26 ஆம் நாள் மாலை நேரத்துக் குழப்பமாகத் தொடங்கப்பட்ட கொழும்பு அரசியல் திருகுதாளங்கள் ஒரு மாதத்துக்கு மேலாகியும் முடிவின்றித் தொடர்ந்தது. தனது ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போன்று இம்முறையும் ஏனைய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கிக் கொண்டு பலமான ஒரு ஆட்சியை முன்கொண்டு செல்ல முடியும் என்று மைத்திரி மகிந்த தரப்பினர் போட்ட கணக்கு இம்முறை எடுபடவில்லை.

இந்த ஆட்சியின்காலம்முடிவடைவதற்கு இன்னும்ஒன்றரை வருடங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும் நிலையில் அரசியல் சுயபரிசோதனைகளில் ஈடுபடுவதற்கு அனேகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இல்லை என்பதால் மகிந்த தரப்பு எறிவதற்குத்தயாராக இருந்த அமைச்சுப்பதவி மற்றும் பணம் என்பன மட்டுமே கட்சி தாவுவதற்கான கவர்ச்சிப் பொருளாக இருக்கவில்லை. இதனால் எதிர்பார்ப்புகள் எல்லாவற்றுக்கும் மாறாகப் பெரும்பான்மையைக் காட்டி ஆட்சியைக் கொண்டு நடத்த முடியவில்லை.

மகிந்தவின் அரசியல் வரலாற்றில் அவர் அடைந்த மிகப் பெரும் அரசியல் சறுக்கலாக இது அமைந்துவிட்டது. மடை புரப்பிக்கிடந்தமகிந்தவின்புகழும்இதன்மூலம்சரிவுகண்டது. இதிலிருந்து மீள மைத்திரி –மகிந்த தரப்பு எடுத்த பொதுத் தேர்தல் என்கிற ஆயுதமும் உயர் நீதிமன்றத்தின் தலையீட்டால் பயனற்றதாகிப் போனது. இதற்கிடையில் மகிந்தவின் ஆட்சியைச்சட்டத்துக்குமுரணான, மக்களாட்சிக்குமாறானது என்கிற பரப்புரையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி என்பன மக்களாட்சியைக்காப்பதற்காகப் போராடும் போராளிகளாகத் தம்மை வெளிப்படுத்திக்கொண்டு, கடந்த மூன்றரை ஆண்டு காலப் பாவங்களை எல்லாமல் அதில் கரைத்துத் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டவர்களாகக்காட்டிக்கொண்டார்கள். இதன்மூலம் அரசியல் இலாபத்தையும் அடைந்தார்கள்.

எல்லாவழிகளிலும் முன்னேறவழியின்றி முடங்கியபோதும் மகிந்த தரப்பினர் ஆட்சியை விட்டுக்கொடுக்காது முரண்டு பிடித்துக் கொண்டிருந்தனர். ஏதோவொரு நம்பிகையுடன். அவர்களை அதிலிருந்தும் விரட்டும் நோக்கத்தோடு தலைமை அமைச்சர் அலுவலகத்திற்கான நிதியை வெட்டுவது பின்னர் அமைச்சர்களின் அலுவலகங்களிற்கான நிதியை வெட்டுவது என்று ஐக்கிய தேசிய முன்னணியும் பிடியை இறுக்கி வந்தது. எனினும் ஆட்சி அமைப்பதற்குத் தேவையான 113 ஆசனங்கள் என்கிற இலக்கை அடைய முடியாமல் தவித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்தால் மட்டுமே அந்த இலக்கை அடைய முடியும் என்கிற நிலையில், கடந்த மூன்றரை ஆண்டுகளில் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு வெளிப்படையான ஆதரவைக் கொடுக்கமுடியாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் திணறி வந்தது. ஆனால், கடைசியில் வழக்கம்போலவே ஐப்பசி 26ஆம் திகதிக்கு முந்தைய ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சி தொடர்வதற்குத்தனது வெளிப்படையான ஆதரவை கூட்டமைப்பு வழங்கியுள்ளது.

இதையடுத்து கொழும்பின் அரசியல் சூடு மெல்லத்தணியும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியிருக்கின்றன. நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரியவை நேற்று சந்தித்துப் பேசியிருக்கிறார் அரச தலைவர். ஐக்கிய தேசிய முன்னணியினர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் அரச தலைவர் இன்று சந்தித்துப் பேசவுள்ளார். இதைத் தொடர்ந்து அனேகமாக அடுத்த ஒன்றரை வருடத்திற்கான தலைமை அமைச்சர் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு இருக்கிறது என்று எண்ணப்படுகிறது. ஆனால் அப்படியொரு எண்ணம் இருந்தால் அரச தலைவர் நேற்றே அதனைச் செய்திருக்க முடியும், அதனால் பிரச்சினை தீர்வதற்கான வாய்ப்புகள் இன்னும் பளிச்சென்று தெரியவில்லை என்கிறவர்களும் இருக்கிறார். ஒருவேளை கூட்டமைப்பின் ஆதரவுடன் ரணில் மீண்டும் ஆட்சியைப் பிடித்தால் அதன் பிரதிபலன் என்ன என்பது குறித்து மக்களுக்கு எதுவும் தெரிவிக்காத நிலையிலேயே ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை ஆதரிக்கும் முடிவை கூட்டமைப்பு எடுத்துள்ளது என்பது கவலைக்குரியது.

# மனங்கொள்ளத்தக்க மாவீரர் நாள் எழுச்சி!

■ மு.ஈழத்தமிழ்மணி

## 2018 நவம்பர் 27

வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் மாவீரர் நாளன்று பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு இந்த முறையும் தன்னெழுச்சியுடன், உணர்வு பூர்வமாக மவீரர் நாளை நினைவேந்தியுள்ளனர். வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகங்களில், கடந்த ஆண்டை விட இந்த முறை, இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் அதிகளவில் கலந்து கொண்டிருந்தனர். ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அதிரடி நடவடிக்கையால் ஆட்சியிலிருந்து வந்த தேசிய அரசான கூட்டாட்சி குலைக்கபட்டு முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டி ருக்கின்ற நிலையில், ஆங்காங்கு நிகழ்ந்த பொலிஸாரின் அடக்குமுறைகளையும் மீறிக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்ற மாவீரர் நாள் இது என்பது குறிப்பிடத்தக்கது.

**பரவாலாக மாவீரர் நாள் உணர்வெழுச்சி**

கிளிநொச்சி - கனகபுரம் துயிலும் இல்லம், முழங்காவில் துயிலும் இல்லம், வடமராட்சி கிழக்கு உடுத்துறை துயிலும் இல்லம், தேருவில், கொடிகாமம், சாட்டி, இரணைப்பாலை, கோப்பாய், அளம்பில், கஞ்சி குடிச்சாறு, மட்டக்களப்புத் தொழில்நுட்பக் கல்லூரி, கிழக்குப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருகோணமலைச் சிவன்கோவிலடி, தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகம், பண்டிவிரிச்சான், பருத்தித்துறை சுப்பர் மடம், ஆட்காட்டி வெளி, நெடுங்கேணி, இரட்டை வாய்க்கால், வன்னிவிளாங்குளம், ஆலங்குளம் உள்ளிட்ட பல துயிலும் இல்லங்களிலும் தமிழ் அரசியல் கட்சிகளின் அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் மாவீரர்கள் நினைவு கூரப்பட்டிருக்கிறார்கள். நாடாளுமன்றிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால், மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டிருக்கிறது.

**இடையூறுகளும் நினைவேந்தலும்**

மாவீரர் தினத்தைத் தடுப்பதற்கான, இடையூறுகளை விளைவிப்பதற்கான முயற்சிகளில் கோப்பாய்ப் பொலிசார் ஈடுபட்டிருந்தனர். விடுதலைப் புலிகளின்கொடி, சின்னங்கள் பயன்படுத்தப்பட்டு மாவீரர் நினைவு நாளைக் கடைப்பிடிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை மாவீரர் தின ஏற்பாட்டாளர்களின் மேல் சுமத்தி யாழ்ப்பாணம் நீதிமன்றிலும், ஊர்காவற்றுறை நீதிமன்றிலும் அந்த அந்தப் பகுதிப் பொலிசார் முறைப்பாடுகளைச் செய்திருந்தனர். புலிகளின் சின்னத்தையோ, கொடியையோ பயன்படுத்த முடியாதெனக் கூறிய இந்த இரண்டு நீதிமன்றங்களின் நீதிவான்களும், நினைவு கூருதலையோ, புலிகளின் எழுச்சிப் பாடல்களை இசைப்பதையோ தடுக்க முடியாதெனக், கூறியிருந்தனர். அதன்படியே ஏற்பாட்டாளர்கள் மாவீரர் நாள் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

**மாவீரர்நாளில் நடந்த அடாவடிகள்**

இந்த முறையும் பொலிசார் மாவீரர் நாளைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். பருத்தித்துறை சுப்பர் மடத்தில் மாவீரர் நாளுக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருக்கையில் அந்த இடத்தில் கூடியிருந்த மக்களை அதில் பங்கேற்க விடாது, துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தியதுடன், அலங்காரங்கள், பதாகைகளைச் சேதப்படுத்தி அச்சுறுத்தியுமுள்ளனர். வடமராட்சி கிழக்கில் மாவீரர் நாளைக் கடைப்பிடிப்பது தண்டனைக்குரிய குற்றமெனக்கூறிய படையினர், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான இலங்கை அரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலை அச்சிட்டு மக்களைப் பயமுறுத்தும் வகையில், அவ்விடங்களில் ஒட்டியிருக்கின்றனர். துயிலும் இல்லத்தில் நடப்பட்டுள்ள நினைவு நடுகல்லை அகற்றுமாறும் ஏற்பாட்டாளர்களுக்குக் கூறப் பட்டுள்ளது. பொலிசார், இராணுவத்தினர் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டு மக்கள் சோதனையிடப்பட்டிருக்கின்றனர்.

**பெரும் எழுச்சியாக மாவீரர் நாள் பதிவாகியது**

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் கடந்த வருடத்தைவிடப் பெரும் எழுச்சியுடனும், பெரும் திரளான மக்களுடனும் நடந்து முடிந்த நிகழ்வாக இந்த வருடத்துக்கான மாவீரர் நாள் அமைந்திருந்தது. அடக்குமுறைகளையும், கெடுபிடிகளையும் மீறி மாவீரர் நாளுக்காக மக்கள் பிற்பகல் 3மணியிலிருந்து பெருவாரியாகத் திரண்ட வண்ணமிருந்தனர். மாவீரர்களை நினைவு கூருவதற்காக நினைவேந்தும் பகுதிகள் அனைத்தும் மஞ்சள், சிவப்பு வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது



டன் மாவீரர்களது நினைவெழுச்சிப் பாடல்களும் ஒலிக்கவிடப்பட்டிருந்தன. 2016ஆம் ஆண்டில் அரச தலைவரான மைத்திரி பால சிறிசேன தலைமையிலான ஆட்சியானது, மாவீரர் நாளை நினைவுகூருவதற்கு அனுமதியளித்திருந்தது. 2017ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாளானது சிறப்பான முறையில் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. இந்த முறையும் இளைஞர்கள், யுவதிகள் ஏராளமாகக் கலந்து கொண்டு தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினர். வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதி மாவீரர் நாளன்று கண்ணீரால் தோய்ந்தது.



**வேரூன்றிப்போன பாரம்பரியமாகிற்று!**

மாவீரர்களை மக்கள் எப்போதும் தமது மனங்களில் நிலைநிறுத்தியிருப்பர் என்பதை இந்த முறையும் மாவீரர் துயிலும் இல்லங்களில் குவிந்த மக்கள் வெள்ளம் உணர்த்தியுள்ளது. அன்றைய நாள் மாலை நேரம் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவுகள், மற்றும் பொதுமக்கள் திரண்டு நிற்க, 6.05 மணிக்கு உணர்வுகளாலும் எழுச்சியாலும் துயிலும் இல்லங்கள் ஆட்கொள்ளப்பட்டிருந்தன. 2008ஆம் ஆண்டு வரையில் மாவீரர் நாளைத் தமிழ் மக்கள் நினைவு கூருவதும், மதிப்பளிப்பதும் ஒரு பாரம்பரியமாகவே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதுவே இன்று வேரூன்றிப் போயிருக்கிறது.

**மாவீரர் நாளைப் பொதுமையுணர்வுடன் கடைப்பிடித்தனர்**

தமது பிள்ளைகள் சாவடைந்த நாளை மறந்தாலும், மாவீரர் நாளன்று அவர்களுக்குத் துயிலும் இல்லங்களில் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தி ஆறுதல் அடைவதே மாவீரர்களின் பெற்றோர்களினதும், உறவினர்களினதும் மரபாக மாறியிருக்கிறது. இந்த வருடமும் உயிர் பெற்றெழுந்த மாவீரர் நாள் என்பது, தமிழினத்தைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தமிழின விடுதலைக்காகத் தமது உயிர்களையும் பொருட்படுத்தாது களமாடிய வீரமறவர்களைத் தமிழ் மக்களாகிய நாம் என்றென்றும் மறக்கவே மாட்டோம் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்ற நிகழ்வாகும். ஈழத் தமிழர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததும், வரலாறோடு பின்னிப் பிணைந்தும் இருக்கின்ற மகோன்னதமான மாவீரர் நாளைத் தமிழினம் மறக்காமல் நினைவில் வைத்திருப்பதன் மூலம் தன்னுடைய வரலாற்றை அடுத்தடுத்து வருகின்ற சந்ததிகளுக்குக் கடத்திச் செல்வது உறுதியாகியிருக்கிறது.

தமிழ் மக்களுக்காக விடுதலைப் புலிகள் முன்னெடுத்திருந்த ஆயுதப்போராட்டத்தின் நியாயத் தன்மையை மாவீரர் நாள் அகில உலகுக்கும் எடுத்தியம்புகின்றது. மாவீரர்களின் இலட்சியம் எதுவாக இருந்ததோ, அந்த இலட்சியத்தை அடைவதே எமது குறிக்கோள் என்று மாவீரர் தினத்தன்று திடசங்கற்பம் பூண்டு கொள்வது மட்டுமல்லாது, தமிழ் மக்கள், தமிழ்த் தலைவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் ஈழம் என்ற இலட்சியத்திலிருந்து பிறழாது நடக்க வேண்டியதையும் உணர்த்தியிருக்கிறது இந்த வருட மாவீரர் நாள்.

**மக்களின் ஒற்றுமை ஓங்க வேண்டும்**

இந்த முறையும் மாவீரர் துயிலும் இல்லங்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னரே மாவீரர்களின் உறவுகளால், பொது அமைப்புக்களால், பொது மக்களால் ஒன்றிணைந்து முன்னெடுக்கப்பட்ட துப்புரவுப் பணிகளால், தூய்மையாகியிருந்தன. தாமாகவே முன்வந்து அனைவரும் இந்தப் பணிகளைச் செய்திருந்தனர். ஒக்ரோபர் 26 ஆம் திகதியன்று தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டதையடுத்து மக்களுக்குப் பல சந்தேகங்கள் இருந்தாலும், எத்தனை நெருக்கடிகள் வந்தாலும், மாவீரர் நாளை நினைவேந்துவது என்பதில் அனைவரும் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் இருந்தமை தெளிவாகின்றது. மாவீரர்களின் இலட்சியத்தைக் கொண்டவர்கள் திரண்டு நிற்க, அனைத்து நினைவேந்தல் இடங்களிலும் மாலை 6.05மணிக்கு மணி ஓசை இசைக்கப்பட்டு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் தினப் பாடல் இசைக்கப்பட்டது. பாடல் இசைத்து முடியும் வரையில் துயிலும் இல்லங்கள் எந்தவித அசைவும் இன்றி அமைதி காத்துக் கண்ணீரால் நனைந்து கொண்டிருந்தன. மாவீரர்களின் வித்துடல்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. "தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும். கருத்து வேறுபாடுகளை மறந்து தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் வகையில் கட்சிகளும் ஒன்றுபடவேண்டும். பல கட்சிகள் உருவாகித் தமிழ்த் தேசியம் மீதான உணர்வை, பற்றை, ஒற்றுமையுணர்வைச் சிதறடிக்காமல், மாவீரர்களது இலட்சியம் சீர்குலையாமல் இருக்கும் வகையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" என்பதே இந்த முறை நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்து கொண்ட அதிக தமிழ்மக்களின் பேச்சுக்களாக இருந்தன.





> மாவீரர்களை மக்கள் எப்போதும் தமது மனங்களில் நிலைநிறுத்தியிருப்பர் என்பதை இந்த முறையும் மாவீரர் துயிலும் இல்லங்களில் குவிந்த மக்கள் வெள்ளம் உணர்த்தியுள்ளது. அன்றைய நாள் மாலை நேரம் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவுகள், மற்றும் பொதுமக்கள் திரண்டு நிற்க, 6.05 மணிக்கு உணர்வுகளாலும் எழுச்சியாலும் துயிலும் இல்லங்கள் ஆட்கொள்ளப்பட்டிருந்தன.

## ஆசிரியருக்கான கடிதம்

# மக்களை எழுச்சி கொள்ள வைத்த ஊடகத்துக்குப் பாராட்டுக்கள்!

இந்த முறையும் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. தமிழர்கள் பரந்து வாழ்கின்ற பிரதேசங்கள் எங்கிலும் பெரும் எழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. இத்தகைய தமிழ்த் தேசிய எழுச்சிகளின் பின்னணியில் இருக்கின்ற உதயனை நிச்சயமாகப் பாராட்டியே ஆக வேண்டும்.

மாவீரர் வாரம் ஆரம்பித்த உடனேயே அது பற்றிய செய்தியைத் தயக்கமின்றிப் பெரியளவு முக்கியத்துவம் கொடுத்துத் தன்னுடைய முதற் பக்கத்தில் பதிப்பித்ததாக வெளியாகியிருந்தது அன்றைய நாள் உதயன். தொடர்ந்து அதன் வீரியம் குறையாமல் அது சார்ந்த செய்திகளை மாவீரர் நாளை நினைவேந்தக்கூடிய நேர் மனப்பாங்கை மக்கள் மத்தியில் வளர்க்கும் வகையில், மக்களுக்குத் தென்பூட்டும் விதத்தில் பதிப்பித்து வந்தது.

ஊடகம் என்ற வகையில் இத்தகைய மக்கள் எழுச்சிக்கு உரமூட்டியதும், மக்கள் மத்தியிலிருந்த தயக்கத்தை உடைத்தெறிந்து ஆதரவுக் கரமாகச் செயற்பட்டமையும் உதயனின் பாராட்டத்தக்க ஊடகப்பணியே. உதயனின் ஆரம்ப கால வாசகனாகக் கவனித்து வரும் விடயங்களில் உதயனின் இத்தகைய பணி பாராட்டுக்குரியது. மக்களுக்குப் புத்துயிர்ப்பை வழங்குவது. இன்றைய காலத்தில் மட்டுமல்லாது கெடுபிடிகள் நிறைந்த மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில்கூட ஏதோவொரு விதத்தில் தேசிய உணர்வுடைய செய்திகளை மிகச் சூட்சுமமாக வெளியிட்டிருந்த ஊடகம் உதயன் என்பதையும் இவ்விடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புலம்பெயர் தேசங்களில் நடக்கின்ற நினைவேந்தல்கள், மற்றும் விடுதலைப் போராட்டம் சார்ந்த நிகழ்வுகளை உதயன் வெளிப்படுத்தியிருந்த விதங்களை மறந்துவிட முடியாது.

**சின்னத்தம்பி, யாழ்ப்பாணம்**

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிபரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# 9ஆயிரம் ஆண்டுகள் பழமையான முகமூ

ஜெருசலோம்.நவ.30
9ஆயிரம்ஆண்டுகாலப்பழமை யுடையதாகக் கருதப்படுகின்ற, கல்லால் ஆன முகமூடி ஒன்றை இஸ்ரேலின் தொல்பொருள் திணைக்களம்வெளியிட்டுள்ளது. உலகில் உள்ள கல் முகமூடிகள் 15இல் இதுவும் ஒன்று.
இஸ்ரேலால் தற்போது ஆக்கிர மிக்கப்பட்ட மேற்குக் கரையின் தெற்கில் உள்ள ஹெப்ரானைச் சுற்றியுள்ள பகுதிகளில் இந்தக் கைவினைப் பொருள் கண்டுபி டிக்கப்பட்டிருக்கிறது.
இந்தஆண்டின்ஆரம்பத்தில்திரு டர்களிடம் இருந்து அதிகாரிகள் இந்தமுகமூடியைக்கைப்பற்றிய தாக இணைய நாளிதழான 'ரைம்ஸ் ஒவ் இஸ்ரேல்' செய்தி வெளியிட்டுள்ளது.
இளம் சிவப்பு மற்றும் மஞ்சள் சேன்ட்ஸ்டோனால், நியோலிதிக் யுகத்தில் இது செய்யப்பட்டதா கருதப்படுகின்றது.
"இந்தமுகமூடிமிகநேர்த்தியா செய்யப்பட்டுள்ளது.
கண்ணத்தில்உள்ளஎலும்பு மற்றும்மூக்கு எல்லாம்சரிய அமைந்திருக்கின்றன" என் இஸ்ரேல்தொல்பொருள்திணை களத்தின் தொல்பொரு ஆராய்ச்சியாளர் ரோனித் லூ தெரிவித்துள்ளார்.



# சிரிய அகதியின் சுதந்திரச் சுவாசம்!

கோலாலம்பூர்.நவ.30
நுழைவிசைவின் காலவரையறை முடிந்துவிட்ட நிலையில் மலேசிய விமானநிலையத்தில் 7மாதங்கள்வரையில்தங்கி இருந்துள்ள சிரிய அகதி ஒருவர் 7 மாதங்களுக்குப் பிறகு கனடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். சிரியாவைச் சேர்ந்த ஹசன் அல் கோடார் (வயது37) என்பவர் மலேசியாவுக்குச் சுற்றுலா நுழைவிசைவு மூலம் சென்றிருக்கிறார். அங்கிருந்து கடந்த மார்ச் மாதம் வேறு நாட்டுக்குச்செல்லமுயன்ற அவரை மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலைய அதிகாரிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.
அவருடைய நுழைவிசைவின் கால எல்லை முடிந்து விட்டதாகத் தெரிவித்து அவருடைய பயணத்துக்கான அனுமதியை மறுத்தனர். இதைத் தொடர்ந்து புதிய நுழைவிசைவு கிடைக்கும் வரை விமான நிலையத்திலேயே அவர் தங்க வைக்கப்பட்டுள்ளார்.
அவர் ஏழு மாதங்களை அவர் விமான நிலையத்திலேயே கழித்துள்ளார். ஏழுமாதங்களுக்குப்பிறகுதற்போது கடந்தவாரம் அவர் கனடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதற்கு உதவிய கொலம்பிய முஸ்லிம் சங்கம் கூறும்போது, "நாங்கள் ஹசனின் பிரச்சினைகளைக் கவனித்தோம்.
அவர் மலேசிய விமான நிலையத்திலேயே தங்கி இருப்பதாகவும், வேறு எங்கும் செல்ல அனுமதி இல்லாமல் இருக்கிறார் என்றும் எங்களுக்குத்தெரியவந்தது. அதைத்தொடர்ந்து அவருக்கு உதவுவதற்கு ஏற்பாடு செய்தோம்" என்றுள்ளது. இதைத் தொடர்ந்தே ஹசனின்கனடாப்பயணத்துக்கான ஆவணங்கள்தயாராகி அவர் கனடாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார். இதுகுறித்து ஹசன் கூறும்போது, "எனக்குச் சிரியாவுக்குச் செல்ல விருப்பமில்லை. நான் இராணுவத்தில் சேர விரும்பவில்லை. நான் கனடாவில் கால் வைத்தபோது மழை பெய்து கொண்டிருந்தது. வீதிகளில் நடப்பது எனக்குசாதாரணமானவிடயம்தான். ஆனால், என்னைப்பொறுத் தவரை இது சுதந்திரத்தின் சுவாசம்" என்றிருக்கிறார்.

# உக்ரைன் - ரஷ்யா

## உக்ரைன் அதிபர் மீது ரஷ்ய அதிபர் குற்றச்சாட்டு
## ரஷ்யாவுடன் போர் மூளும் என்கிறார் உக்ரைன் அதிப
## உதவிக்கு வருமாறு 'நேட்டோ'வுக்கு வேண்டுகோள்

ரஷ்யாவால்சொந்தம்கொண்டாடப்பட்டுவருகின்றஉக்ரைனின்தென் பகுதிப் பிரதேசமான கிரிமியாவின் கடற்பரப்பில் வைத்துக் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று உக்ரைனின்மூன்று கப்பல்களைக்கைப்பற் றியிருந்தது ரஷ்யக் கடற்படை. இதனால், இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையிலான முறுகல் நிலை அதிகரித்துள்ளது.

இந்தச்சம்பவம் இந்த இரண்டுநாடுகளுக்கும் இடையேயான உறவில் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது. இரண்டுநாடுகளும் ஒன்றின் மீது ஒன்று குற்றம் சுமத்தி வருகின்றன. 2019ஆம் ஆண்டில் நாட்டில் நடக்கவுள்ள தேர்தலில் தனக்கான வெற்றி வாய்ப்புகளை அதிகரிப்பதற்காகவே உக்ரைன் அதிபரான பெட்ரோ போரோஷென்கோ ரஷ்யாவின் கிரிமியாக் கடல் பகுதியில் அத்துமீறியதாக ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். "எல்லையில் நிலவும் சூழலை மேலும் பதற்றமாக வைத்திருப்பதற்கு அவர் ஏதாவது செய்தாகவேண்டும்" என்று உக்ரைன் அதிபரைக்குறிப்பிட்டுப்புடின் பேசியுள்ளார். இதற்கு மாறாக ரஷ்யாவின் தாக்குதல் நடவடிக்கையை 'ஆக்ரமிப்புத் தாக்குதல்' என்று உக்ரைன் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக உக்ரைன் அதிபர் புரோசென்கோ தெரிவித்ததாவது. "உக்ரைன் கடுமையான மிரட்டலுக்கு ஆளாகி இருக்கிறது.
தற்போதுநடக்கும்நிகழ்வுகள்விளையாட்டுத் தனமான விடயங்கள் அல்ல. ரஷ்யா தாக்குதலுக்குத் தயாராகி உள்ளது. எனவே, ரஷ்யாவுடன்நாங்கள் முழுப்போரில் ஈடுபடும்நிலை ஏற்பட்டு இருக்கிறது" என்றுள்ளார். தங்களுக்கு உதவும் வகையில் நேட்டோ நாடுகள் தங்கள்நாட்டுக்கப்பல்களை அனுப்பிவைக்க



வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். உறுப்பினர் நாடல்லாத உக்ரைனுக்குத் தங்களுடைய முழு அதரவையும் வழங்குவதற்கு நேட்டோ முன்வந்துள்ளது. அதிகரிக்கும் பதற்றம் தொடர்பாக மிகவும் கவலை அடைவதாக இந்தச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய

ஆணையம் குறிப்பிட்டு பலத்தை ரஷ்யா ப்யன்ப றும் அது குறிப்பிட்டுள்ள மீதுஎவ்விதமானதடைக ஆணையம் விதிக்கவில் உக்ரைன் அதிபருடைய பிறகு ரஷ்ய அதிபர் புதின்

# பிரான்ஸும் ஜேர்மனியும் நட்புக்கொண்டாடுகின்ற அயல்நாடுகள் ; இந்தியா–

## பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கான் உருக்கம்

இஸ்லாமபாத்.நவ.30
பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள சீக்கியப் புனிதத் தலத்துக்கும், இந்தியாவின் குருதாஸ்பூரில் உள்ள தேரா பாபா நானக் புனிதத்தலத்துக்கும் இடையேயானபுதியவழித்தடத்துக்கு அடிக்கல் நாட்டியுள்ளார் பாகிஸ்தானின் தலைமை அமைச்சரான இம்ரான் கான். இதன் மூலம் சீக்கிய யாத்திரிகர்கள்நுழைவிசைவுஇல்லாமல் இந்தப் புனிதத் தலத்துக்குப் பயணம் செய்யலாம். இந்தியாவுடன் பாகிஸ்தான் நாகரிகமான உறவை மேற்கொள்ளவிரும்புவதாகஇம்ரான் கான் தெரிவித்திருக்கிறார். பாகிஸ்தானில் கர்தார்பூர் நகரில் அமைந்துள்ள சீக்கியர்களின்புனிதத்தலமானகர்தார் பூர்சாஹிப்பின்வழித்தடதிறப்புவிழாவிலேயே இம்ரான் கான் இதைத் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்ச்சியில் இம்ரான்கான் தெரிவித்ததாவது, "நான் இந்தியாவுக்கு எப்போதெல்லாம்பயணம்செய்கிறேனோஅப்போதெல்லாம் அங்கிருந்த மக்கள் என்னிடம் பாகிஸ்தான் இராணுவத்துக்கு அமைதியில்உடன்பாடில்லைஎன்றே கூறி இருக்கிறார்கள்.
நான்உங்களிடம்ஒன்றுகூறுகிறேன், நான்தான்பாகிஸ்தானின்தலைமை அமைச்சர், என்னுடைய கட்சி, பிற கட்சிகள்மற்றும்பாகிஸ்தான்இராணுவம் எல்லாம் ஒரே பக்கத்தில்தான் இருக்கிறோம். நாங்கள் இந்தியாவுடனானஉறவில்முன்னோக்கிச்செல்ல விரும்புகிறோம்.
நாங்கள்இந்தியாவுடன்நாகரிகமான உறவை விரும்புகிறோம். கடந்த 70வருடங்களாக நாம் போரிட்டுக் கொண்டுமாறிமாறிக்குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறோம்.

இரண்டுதரப்புகளிலும்தவறுகள் என. எவ்வளவு நாள்தான் நாம் வரை ஒருவர் மாறி மாறிப் பழி தீக் கொண்டு இருக்க முடி பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி அ எவு பெரிய போருக்குப் பின் நட் முன்னெடுக்கும்போது நாம் அதைச் செய்யக் கூடாது? தற்போ அந்தஇருநாடுகளும்எல்லைகளை திறந்து வைத்துள்ளன. வணிகம்

மூடி

யப்பட்டதாகக்
நேர்த்தியாகச்
து.
ளஎலும்புகள்
லாம்சரியாக
றன" என்று
ருள்திணைக்
ல் பொருள்
ரோனித் லூபு

ஜமால் கொலை விவகாரம்

## விசாரணைக்கு மறுத்தார் சி.ஐ.ஏ. இயக்குநர்

வோஷிங்டன்.நவ.30
சவூதியுடனான உறவுகள் குறித்த செனட் விசாரணைக்கு மத்திய புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ.யின் இயக்குநர் வராததை அமெரிக்கச் செனட் சபை அதிகாரிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோமற்றும்பாதுகாப்புதுறைஅமைச்சர்ஜிம் மேட்டிஸ் ஆகியோர் ஆதாரங்களை அளித்தும், சி.ஐ.ஏ.இயக்குநர்ஜினாஹேஸ்பல்விசாரணைக்கு வராதமை அவர் எதையோ மூடி மறைப்பதைக் காட்டுவதாக செனட் சபை அதிகாரி ஒருவர் விவரித்துள்ளார்.
சவூதியைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் ஜமால் கொலை செய்யப்பட்டதையடுத்து, சௌதி மீதான விமர்சனங்கள்அதிகமாகிவருகின்றன.அமெரிக்கக் குடியுரிமைஉள்ளவர்என்பதால்அதுசார்ந்தவிசாரணைகளை அமெரிக்கா முன்னெடுத்து வருகிறது. ஜமாலின் கொலையில் சவூதி இளவரசருக்குத் தொடர்பிருப்பதாகஅமெரிக்காவின்உளவுஅமைப்பானசி.ஐ.ஏ. கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## சுவீடனின் கட்டடம் மீது மோதியது ‘எயார் இந்திய’ வானூர்தி

### பயணிகள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்

ஸ்டொக்கோம்.நவ.30
சுவீடனின் தலைநகர் ஸ்டொக்கோமில் இருந்து இந்தியாவின் டெல்லி நோக்கிப் பயணத்தை ஆரம்பித்த எயார் இந்தியா வானூர்தியானது சுவீடனில் உள்ள கட்டடத்தில் மோதியது. இந்த விபத்தில் அதிலிருந்த 179 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.
ஸ்டொக்கோமில்இருந்துடெல்லிக்குப்பயணமானஅந்தவானூர்தியில் 179 பயணிகள் மற்றும் பணிப்பெண்கள் 6பேர் இருந்துள்ளனர். வானூர்தி ஓடுபாதைக்குச்செல்வதற்காக நகர்த்தப்பட்டது.
பின்னர் அந்த வானூர்தியைச் சற்று வேகமாக விமானி இயக்கினார். அப்போதுவானூர்திஓடுபாதையிலிருந்துசற்றுவிலகிஓடஆரம்பித்தது. அருகில் இருந்த கட்டடத்தில் விமானத்தி ன் இடது பக்க இறக்கை மோதியது. இதனால் விமானம் குலுங்கியது.
உட்னே விமானி அந்த விமானத்தை உடனடியாக நிறுத்தி விட்டார். இதனால்வானூர்தியில்இருந்த179பயணிகளும்உயிர்தப்பினார்கள். வானூர்தி தடம் மாறிச் சென்றதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. உடனடியாக அந்த வானூர்தியில் இருந்த பயணிகள் அனைவரும் அவசர வாசல் வழியாக வெளியேற்றப்பட்டனர். பிறகு அந்தவானூர்தியைச்சுற்றித்தீயணைப்புவண்டிகள்நிறுத்தப்பட்டன.

# ா மோதல் போக்கு

ி
அதிபர்
காள்

தன்
ந்த
பற்
கும்







போது, “உக்ரைனுடன் மோதும்எண்ணம்எங்களுக்கு இல்லை. உக்ரைனில்நடக்கும்தேர்தலில் ஆதாயம் பெறுவதற்காக அந்த நாட்டு அதிபர் அச்சுறுத்தல் இருப்பதாகவும், போர் நடக்கப்போகிறதுஎன்று கூறியும் நாடகம் ஆடுகிறார்” எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்டுள்ளது. இராணுவ
யா ப்யன்படுத்தியது தவறு என்
ப்பிட்டுள்ளது. ஆனால், ரஷ்யா
னதடைகளையும்ஐரோப்பிய
விதிக்கவில்லை.
திபருடைய இந்தக்கருத்துக்குப்
அதிபர் புதின் இதுபற்றிக் கூறும்

**பின்னணி**
ரஷ்யாவின் பெரு நிலப்பரப்பை ஒட்டி இருந்த பல நாடுகள் சோவியத் யூனியன் என்ற பெயரில் ஆரம்பத்தில் ரஷ்யாவுடன் இணைந்த ஒரே நாடாக இருந்தன. பின்னர் அந்த நாடுகள் ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்று விட்டன. அதில், முக்கியமான நாடு உக்ரைன். பிரிந்து சென்ற பிறகு இரண்டு நாடுகளும் பகை நாடுகளாக மாறி விட்டன. சிலஆண்டுகளுக்குமுன்புஉக்ரைனின்ஒரு பகுதியான கிரிமியாவை ரஷ்யா வலுக்கட்டாயமாகக்கைப்பற்றித்தன்னுடன் இணைத்து கொண்டது. அதன்பிறகுஇரண்டுநாடுகளுக்கும்இடையே மோதல் போக்கு அதிகரித்தது.

இந்த நிலையில் கிரிமியாக் கடல் பகுதியில் சென்ற உக்ரைனின் 3கப்பல்களை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. இதனால்இரண்டுநாடுகளுக்கும் இடையே போர் மூழும் என்ற சூழ்நிலை நிலவுகிறது.
உக்ரைன் உள்நாட்டில் இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. தனது படைகளை எல்லையில் குவித்து வருகிறது. பதிலுக்கு ரஷ்யாவும் எல்லையில் ஆயுதங்களைக் குவித்து வருகிறது.
2014ஆம்ஆண்டிலிருந்துஉக்ரைனும்ரஷ்யாவும் உக்ரைனின் கிழக்குப் பகுதியில் போரில் ஈடுபட்டு வருகின்றன. தற்போதைய நிலையால், அங்கு போர் அதிகரிக்கும் ஆபத்து உள்ளது. ரஷ்யவிடம் கனரக ஆயுதங்கள் உள்ளன என்பதும் உக்ரைனுக்கு மேலைநாடுகளிடமிருந்துஉதவிகள்கிடைக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.


## இந்தோனேசிய வானூர்தி விபத்து

### “பறப்பதற்குத் தகுதியற்ற விமானம் அது”



கோலாம்பூர்.நவ.30
கடந்தமாதம்விபத்துக்குள்ளாகியிருந்தமலேசியவானூர்தியான‘லயன் எயார்’ வானூர்தி பறப்பதற்குத் தகுதியின்றி இருந்ததாகவும், அதை நிறுத்தி வைத்திருக்க வேண்டும் என்றும் இந்தோனேசிய விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் 29ம் திகதி இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து மேலெழுந்து பறந்து, பறந்த சற்று நேரத்தில் போயிங் 737 மேக்ஸ் வானூர்தியானது ஜாவா கடலில் விழுந்தது. அதில் பயணித்த பயணிகள், விமானிகள் அனைவரும் சாவடைந்திருந்தனர்.
737 போயிங் வானூர்தித் தயாரிப்பு நிறுவனத்தின் புதிய பதிப்பான 737 மேக்ஸ்வானூர்திசற்றுநேரமேவானில்பறந்ததாகமுதற்கட்டஅறிக்கை விவரிக்கிறது.
இத்தகைய வானூர்திகளில் பிரச்சினைகள் இருந்தபோதிலும், லயன் எயார் நிறுவனம் இந்த வானூர்தியைப் பறக்க வைத்துள்ளது என்று தேசிய போக்குவரத்துப் பாதுகாப்புக் குழு கண்டறிந்துள்ளது.
“எங்களது கருத்தின்படி, இந்த வானூர்தி மேலழுந்து பறப்பதற்குத் தகுதியில்லாதது. இது இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்” என்று கூறப்பட்டுள்ளது. இந்த வானூர்தியிலிருந்த குறைபாடுகளைக் குறிப்பிட்டு விபத்தில் சாவடைந்தவர்களின் குடும்பத்தினர் போயிங் வானூர்தித்தயாரிப்புநிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

# ா– பாகிஸ்தானால் ஏன் அப்படி இருக்க முடியாது?



தவறுகள்உள்
தான் நாம் ஒரு
றிப் பழி சுமத்
க்க முடியும்?
ஜர்மனி அவ்வ
ப் பின் நட்பை
து நாம் ஏன்
து? தற்போது
எல்லைகளைத்
. வணிகம் புரி

கின்றன. நம்இரண்டுநாடுகளுக்கும் காஷ்மீரில்நிகழும்பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற ஒருமித்த எண்ணம் உள்ளது. அது நிச்சயம் நடக்கும். அது நடக்கும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.
நமக்கு இடையே உள்ள வேறுபாடுகளை எரித்து அமைதி உண்டாக, இரண்டு நாட்டு எல்லைகளையும் திறந்துவைப்போம்” என்றிருக்கிறார்.



**இன்று**
நேசிக்க நாம்
தயாராகாதபோது

**நாளை**
சுவாசிக்க நற்
காற்றிருக்காது
நம் தலைமுறைக்கு

**இயற்கையை நேசிப்போம்**
**சூழல் மாசுபாட்டை**
**நீக்குவது குறித்து**
**சிந்திப்போம்....!**






# ‘அக்னி தேவ்’ உருவகிக்கும் புது அக்னி

‘ரோஜா’ நாயகி மதுபாலா, பாபி சிம்ஹா நடித்துள்ள ‘அக்னி தேவ்’ படத்தின் முன்னோட்டக் காணொளி வெளியாகியுள்ளது.

‘சென்னையில் ஒரு நாள் 2’ பட இயக்குநர் ஜான் பால் ராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள ‘அக்னி தேவ்’ திரைப்படம், அரசியல் கதைக்களத்தை மையப்படுத்தி உருவாகியுள்ளது. இநதப் படத்தின் முன்னோட்டக்காணொளி வெளியாகி சமூக வலைத்தளங்களில் பெருவரவேற்புப் பெற்று வருகிறது. பிரபல க்ரைம் எழுத்தாளர் ராஜேஷ் குமாரின் நாவலை மையப்படுத்தி உருவாகியுள்ள இந்தப் படத்தில் பொலிஸ் அதிகாரியாக பாபி சிம்ஹா நடித்துள்ளார்.

மிரட்டலான அரசியல்தலைவராக மதுபாலா நடித்துள்ளார். இவர்களுடன் சதீஷ், ரம்யா நம்பீசன், டெல்லி கணேஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். பேருந்துநிலையத்தில் நடைபெறும், பெண்பத்திரிகையாளரின் படுகொலை, அதை விசாரிக்கும் பொலிஸ் அதிகாரி, அவருக்கும் பெண் அரசியல் தலைவருக்கும் இடையே நடக்கும் மோதல் என விறுவிறுப்பாக செல்லும் அக்னிதேவ் முன்னோட்டக்காணொளி தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ளது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | 4 | | 8 | | 3 |
| | | | 3 | | 5 | | | 4 |
| | 4 | | 8 | | | 6 | | |
| 4 | | | | 3 | 8 | | | |
| | 6 | 2 | 5 | | 7 | | | |
| | 9 | 8 | | | 1 | 5 | | |
| | | | | | 3 | | 7 | |
| | | 5 | | 2 | 6 | | 8 | 1 |
| | | | 9 | 5 | | 2 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 1 | 2 | 6 | 9 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 9 | 3 | 4 | 7 | 1 | 5 | 6 |
| 4 | 7 | 6 | 5 | 8 | 1 | 2 | 9 | 3 |
| 7 | 3 | 5 | 1 | 2 | 4 | 6 | 8 | 9 |
| 6 | 2 | 8 | 7 | 9 | 5 | 3 | 4 | 1 |
| 1 | 9 | 4 | 8 | 3 | 6 | 7 | 2 | 5 |
| 5 | 6 | 2 | 9 | 7 | 3 | 4 | 1 | 8 |
| 8 | 1 | 3 | 4 | 5 | 2 | 9 | 6 | 7 |
| 9 | 4 | 7 | 6 | 1 | 8 | 5 | 3 | 2 |

## சுடோக்கு
எண் விளையாட்டு




**மேடம்:** இடையூறு செய்பவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி மனதைக் கஷ்டப்படுத்தும். குறைந்த அளவில் பணவரவு இருக்கும்.

**இடபம்:** பிறர் செயல் குறித்து குறை சொல்ல வேண்டாம். ஆரவாரம் தவிர்ப்பதால் பணி சரியாக நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து வளர கண்காணிப்பு அவசியம்.

**மிதுனம்:** முக்கியமான பணி ஒன்றை நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் அதிக பாசம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி விலகும்.

**கடகம்:** பெரியவர்களின் ஆலோசனை நல்வழி தரும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். சேமிப்பு பணம் முக்கிய செலவுகளுக்கு பயன்படும்.

**சிங்கம்:** முன்னர் செய்த நல்ல செயலுக்கு உரிய நற்பலன் தேடி வரும். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** பொறுப்பான செயல் தவறாக விமர்சிக்கப்படலாம். சக தொழில் வியாபாரம் சார்ந்தவர்களுடன் தேவையின்றிப் பேச வேண்டாம். அளவான பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** தனித்திறமையை நன்கு வெளிப்படுத்துவீர்கள். தாமதமான பணி எளிதாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி விற்பனை நல்ல முன்னேற்றம் பெறும்.

**விருச்சிகம்:** : இடையூறாக செயல்பட்டவர்கள் விலகிப் போவார். சில மாற்றங்களை பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமான முன்னேற்றம் பெறும்.

**தனுசு:** சொந்த பிரச்னையை பிறரிடம் சொல்ல வேண்டாம். இஷ்ட தெய்வத்தின் கருணையால் சில நன்மை பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஓரளவுக்கு வளர்ச்சி இருக்கும்.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேசக்கூடாது. தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதமாகலாம். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அபிவிருத்தியாகும். பணக் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**மீனம்:** முன்பு பெற்ற உதவிக்கு நன்றி செலுத்துவீர்கள். உறவினர் அன்பு பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார நடைமுறையில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.



ஜப்பானிலுள்ள பேருந்து நிறுத்தம்

அகர முதல எழுத்தெல்லாம்
ஐந்து லட்சம்
கொடுத்துப் பழகு...





ஆரம்பப் பாடசாலைகள்

காலமும் உழைப்பும்
பதில் கூறட்டும்!
அவசரம் வேண்டாம்!
வேகம் முக்கியம்
இல்லை,
செவிடனாய், ஊமையாய்,
பொறுமையாய்
இலக்கினை நோக்கி
நகர்வதே முக்கியம்!

இழுக்க இழுக்க
குறைகிறது
“ஆயுள்”
புகைத்தல்

சிக்கனமாய் இருந்தி
ருக்கலாம் என நினைக்க
வைப்பது மாதக்கடைசி.
சிக்கனம் என்பதையே
மறக்க வைப்பது மாதத்
தொடக்கம்.



# குற்றவாளி யார்?

ஒருநாள் கடை வீதியில் மீன் வியாபாரியும் எண்ணெய் வியாபாரியும் பணப் பிரச்சினை தொடர்பாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியால் வந்த வழிப்போக்கன் ஒருவன் "சண்டை போட்டுக் கொள் ளாதீர்கள். நீங்கள் இருவரும் பீர்ப்பாலிடம் செல்லுங்கள்.

அவர் உங்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்குவார்" என்றான். வழிப்போக்கன் சொன்னபடி இருவரும் பீர்ப்பாலிடம் சென்றனர். பீர்ப்பாலின் காலில் விழுந்து வணங்கிய எண்ணெய் வியாபாரி "ஐயா என் பணத்தை எடுத்துக் கொண்டு இவர் தரமாட்டேன் என்கிறார். நீங்கள் தான் வாங்கித் தர வேண்டும்" என்றான். மீன் வியாபாரியோ "ஐயா எண்ணெய்க்காரன் சொல்வதை நம்பாதீர்கள்.

பணம் என்னுடையது" என்றான். பீர்ப்பால் "என்ன நடந்தது என்பதை முழுமையாகச் சொல்லுங்கள்" என்றார்.

மீன் வியாபாரி "ஐயா இவன் எண்ணெய் வேண்டுமா? என்று கேட்டு என் கடைக்கு வந்தான். நான் எண்ணெய் வாங்குவதற்காக பாத்திரம் எடுக்க கடைக்குள் போனேன். அதற்குள் என் பணத்தை இவன் எடுப்பதைப் பார்த்தேன். உடனே பாய்ந்து வந்து அவனிடமிருந்த பணத்தைப் பறித்தேன். ஆனால் இவனோ அந்தப் பணம் தன்னுடையது என்று இங்கு நாடகமாடுகிறான்" என்றான்.

"ஐயா இவன் சொல்வதை நம்பாதீர்கள். இவன் தான் நாடகமாடுகிறான்" என்றான் எண்ணெய் வியாபாரி. இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வழியை யோசித்தார் பீர்ப்பால். சிறிது நேரத்தின் பின் ஒரு முடிவுக்கு வந்தார்.

ஒரு வீரனை அழைத்து ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். பீர்ப்பாலின் அருகே வீரன் தண்ணீர்ப் பாத்திரத்தைக் கொண்டு வந்து வைத்தான். மீன்காரனின் பணப்பையில் இருந்த நாணயங்களைத் தண்ணீரில் கொட்டும்படி பீர்ப்பால் கட்டளையிட்டார். பணப்பையில் இருந்த நாணயங்கள் தண்ணீருக்குள் கொட்டப்பட்டன. உடனே பாத்திரத்தில் உள்ள தண்ணீரின் மேற்பரப்பில் எண்ணெய் மிதந்தது. உடனே பீர்ப்பால் "பணப்பை எண்ணெய்க்காரருக்குச் சொந்தமானவை. நீதான் திருடன் என்று மீன் வியாபாரியைப் பார்த்துச் சொன்னார் பீர்ப்பால்.

எண்ணெய் வியாபாரி நன்றியுடன் பீர்ப்பாலை வணங்கினான்.


பீர்பாலிடம் மீன் வியாபாரி மன்னிப்புக் கேட்டான். பீர்ப்பால் அவனைப் பார்த்து "எவருடைய பணத்துக்கும் ஆசைப்படாதே. உண்மை பேசி உத்தமனாய் வாழ்" என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்.

## எமது நாட்டில் நூலகங்களின் ஆரம்பம், சில வரலாற்றுத் தகவல்கள்

- எமது நாட்டில் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே நூல் நிலையம் இருந்ததற்கான தகவல்கள் இருக்கின்றன. அப்போது ஆலயங்கள் போன்றே விகாரைகளும் கல்வி கொடுக்கும் ஆலயங்களாக விளங்கியுள்ளன.
- நூல்கள் 'பௌத்த காலஜ்' என அழைக்கப்பட்டதாக அறிய முடிகிறது.
- திரிபீடகம் என்னும் நூலின் பிரதிகள் எல்லா விகாரைகளிலும் இருந்துள்ளன.
- தேவநம்பியதீசன் கட்டிய மகாவிகாரை பல ஏட்டுச் சுவடிகளையும், நூல்களையும் கொண்டு பல்கலைக்கழகம் போல விளங்கியது.
- 'புத்தகோஷ' என்ற துறவி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து சிங்கள மொழியில் உள்ள நூல்களைப் பாளி மொழியில் மொழி பெயர்த்ததாக அறிய முடிகின்றது.
- 'பாகியான்' என்ற சீன யாத்திரிகர் இலங்கைக்கு வந்தபோது, அபயகிரி விகாரையில் 3 ஆயிரம் பௌத்த குருமாரும் கல்வி கற்றதாக அவரது குறிப்புக்கள் மூலம் அறிய முடிகின்றது.
- மகா பராக்கிரமபாகு (1302 -1326) 550 புத்த ஜாதகக் கதைகளை சிங்கள மொழியில் பெயர்த்துடன், தமிழில் உள்ள சரசோதி மாலை என்ற சோதிட நூலையும் மொழிபெயர்த்தான்.
- மகா பராக்கிரமபாகு 128 வீடுகளில் நூல்களை வைத்துப் பேணி வந்ததாக சூளவம்சம் கூறுகிறது.
- 6ஆம் பராக்கிரமபாகு (1470-1236) இலக்கிய நூல்கள், பல்வேறு அறிவியல் நூல்கள் போன்றவற்றை சேகரித்ததோடு அவற்றைப் போதிப்பதற்காக பௌத்த, சமண மற்றும் தமிழ் அறி ஞர்களையும் நியமித்திருந்தார்.

## சரியான சாவியை கண்டுபிடிப்போம்







## எறும்பு

ஓடும் எறும்பே நில் நில்
ஓடி விளையாடச் சொல் சொல்

ஊரும் எறும்பே நில் நில்
உழைத்து வாழச் சொல் சொல்

சின்ன எறும்பே நில் நில்
சேர்ந்து படிக்கச் சொல் சொல்

புற்று எறும்பே நில் நில்
பூக்கள் மலரச் சொல் சொல்


கடிக்கும் எறும்பே நில் நில்
சுறுசுறுப்புப் பற்றிச் சொல் சொல்

## இன்பமாய் வாழ்வோம்

காட்சி காணக் கண்கள்
ஒலியைக் கேட்கக் காதுகள்
மணத்தை முகர மூக்கு
சுவையை அறிய நாக்கு
மென்று உண்ணப் பற்கள்
உண்டு மகிழ வாய்
வேலை செய்யக் கைகள்
நடந்து செல்லக் கால்கள்
எழுத்து எழுத விரல்கள்
உணர்ந்து கொள்ள உடம்பு
இவற்றை நன்கு பேணி
இன்ப வாழ்வு வாழ்வோம்!



## கானல் நீர் எவ்வாறு உருவாகிறது?



அதிக வெப்பமான காலநிலை நிலவும் கோடைக் காலத்தில் தார் சாலைகளிலும் பாலைவனங்களிலும் கானல் நீரைப் பார்க்க முடியும். தண்ணீர்தான் இருக்கிறது என்று அருகில் சென்றால், இன்னும் சற்றுத் தொலைவில் கானல் நீர் தெரியும். இது ஒரு மாயத் தோற்றம். நிலத்தில் இருந்து அதிகமான வெப்பம் மேலே வருகிறது. மேலே இருக்கும் காற்று சற்றுக் குளிர்ச்சியாகக் கீழ் நோக்கி வருகிறது.

இவை இரண்டையும் ஊடுருவிக்கொண்டு சூரிய ஒளிக்கதிர்கள், வெப்பத்திலும் குளிர்ச்சியிலும் வெவ்வேறு வேகத்தில் நுழைகின்றன. அப்போது ஒளிக்கதிர்கள் வளைகின்றன. இதை நம் மூளை நிலத்திலிருந்து தண்ணீர் தோன்றுவதுபோல் எண்ணிக்கொள்கிறது.



# மகரஜோதி நாயகனைப் பணிவோம்!

காரை.எம்.பி.அருளானந்தன்

சபரிமலை யாத்திரை மேற்கொள்ள நினைப்பவர்கள் குரு சுவாமி ஒருவரை நாடிச் செல்வர். அவர் அனுமதியைப் பெற்று, அவருடன் இணைந்து யாத்திரையை மேற்கொள்வர். இங்கு ஒருவர் தனித்தே யாத்திரை மேற்கொள்வதையும் விட குருவுடன் இணைந்து யாத்திரை மேற்கொள்வது என்பது கிடைத்தற்கரிய பாக்கியம். இந்தப் பாக்கியம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் ஒவ்வொரு ஐயப்ப பக்தருக்கும் கிடைக்கிறது.

கலையானாலும் சரி, கல்வியானாலும் சரி எமை நன் முறையில் வழிநடத்திச் செல்லவதற்கு குருவானவர் உதவி புரிகின்றார். அந்தவகையில் ஆன்மிக குருவானவர் சிறப்பிடம் பெறுகிறார். இந்து மதத்தில் குருவுக்கு மேலான இடம் வழங்கப்பட்டுள்ளது.
சமரிமலை யாத்திரை என்பது ஓர் ஆன்மிக யாத்திரை. அதைக் குருவின் துணை கொண்டு மேற்கொள்வதே சாலச் சிறந்தது.

**மாலை அணிதல்**
எந்தவொரு காரியத்தைச் செய்யும் முன்பும் சங்கல்பம் செய்து கொள்வது என்பது முக்கிய கடமையாகக் கருதப்படுகிறது. மனதில் உறுதியான சங்கல்பம் இல்லாமல் செய்யும் காரியங்கள் முழுமையடைவதில்லை. சபரிமலைக்குப் போகும் முன்பாக, மாலை அணிந்து கொள்வது என்பது சங்கல்பம் செய்து கொள்வதே. அதாவது, "சீரிய முறையில் விரதத்தைக் கடைப்பிடித்து நல்ல முறையில் யாத்திரை மேற்கொண்டு, பகவானது மேலான தரிசனம் காண்பேன்" என்று சங்கல்பம் செய்து கொண்டிருப்பதையே முத்திரை மாலை உணர்த்துகின்றது.

**மார்கழி மாதத்தின் சிறப்பு**
மார்கழி மாதம் மேலான மாதம். "மாதங்களில் நான் மார்கழி மாதமாக இருக்கிறேன்" என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கூறுகிறார். தவிர மார்கழி மாதம் தான் தேவர்களுக்கெல்லாம் பிரம்ம முகூர்த்த காலம். அதிகாலைப் பொழுதை நாம் இறைவழிபாடு இயற்றும் காலமாக கொண்டால், வாழ்வில் நல்ல முன்னேற்றம் கிட்டும். ஆண்டாள் "திருப்பாவை" பாடியதும் மார்கழி மாதமே. மார்கழிக் குளிரில் குளிப்பதும், இரவு வெறுந்தரையில் படுப்பதும் உடல் சார்ந்த பற்றைக் குறைக்கிறது.


**தீட்சை பெறுதல்**
ஒருவன், தன்னையும் தன் உடலையும் மறக்க மறக்க இறைவனது நினைதல் அவனுள்ளாய் அதிகரிக்கிறது. தன்னையும் தன் அழகையும் மறந்து இறைவனையே நினைக்கும் போது இறைவனது அருள் அவனுக்குப் பரிபூரணமாகக் கிடைக்கிறது. இறையருள் கிடைக்கத் தன்னை மறக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே தீட்சை.

**ஐயப்பன் சுலோகம்!**
"சுவாமியே சரணம் ஐயப்பா" என்று ஐயப்பன் சுலோகத்தை சாதாரணமாகவே வாய்மொழிந்து கொள்ளலாம். ஆனாலும் அதை அசைவியக்கத்தின் நயத்தோடு உரக்கக் கூறுவது சுவாசப் பயிற்சிக்கு ஒப்பானதாக விளங்குகிறது. 'பிரணாயாமம்' செய்வதால் கிடைக்கும் பலனை இதனூடே பெற்றுக் கொள்ள முடியும். இவ்விதம் கூறும்போது எமை அறியாமலேயே மனம் ஒருமைப்பட்டு பகவானின் பாதக் கமலங்களில் லயித்து விடுகிறது. இந்த அனுபவம் வார்த்தைகளால் விளக்கிக்கூறி விட முடியாத இன்பத்தைத் தரும்.

**மன ஒருமைப்பாடும் இரு முடியின் தத்துவமும்**
ஐயப்பா விரதத்தைக் கடைப்பிடிப்போர், விரதம் மேற்கொள்ளும் ஒவ்வொருவரையும் ஐயப்ப சுவாமியாகவே உருவகப்படுத்திக் கொள்கின்றனர். இது கிடைத்தற்கரிய மிக உன்னதமான நிலையாகக் கருதப்படுகிறது.

இருமுடியில், முன்முடியில் அதாவது முன்பகுதியில் சுவாமிக்கு வேண்டிய அபிஷேகப் பொருள்களும், நைவேத்தியப் பொருள்களும், பின்முடியில் பக்தனுக்குரிய அதாவது யாத்திரிகனுக்கு வேண்டிய பொருள்களும் கொண்டு செல்லப்படும். சபரிமலையை அண்மிக்கும் போது, பின்முடியில் உள்ள பொருள்கள் அனைத்தும் உபயோகப்படுத்தப்பட்டு பகவான் சந்நிதானத்தை அடையும் பொழுது இருமுடியில் பகவானது பிரசாதங்கள் மட்டுமே இருக்கும். பகவானை அண்மிக்கும் பொழுது யாத்திரிகர்களின் பொருள்கள் குறைவடைந்துவிடும். முடிவில் பகவானைத் தரிசித்துத் திரும்பும் பொழுது எமக்கென்று இருப்பது இறை அருள் உடைய அருட்பிரசாதம் ஒன்றாகவே இருக்கும். இதையே இரு முடியின் தத்துவமாகக் கொள்கின்றனர்.

**நெய்த் தேங்காயின் மகத்துவம்**
நாம் சபரிமலைக்கான யாத்திரையை



ஆரம்பிக்கும் போது, நெய் நிரப்பி எடுத்துச் செல்லும் தேங்காயை சபரி மலையில் உடைத்துப் பார்க்கும் போது அது நன்கு உறைந்து 'புரணம்' போல் காட்சியளிக்கும். குருவானவர் முக்கண்களில் ஒன்றான அகக் கண்ணைத்திறந்து அதன் ஊடே பக்தி என்ற நெய்யை எம் மனதில் நிரப்பி விடுகிறார். சிறிது காலம் செல்ல அதுவே பூரண ஞானமாக வெளிப்படுகிறது. இதுவே நெய்த் தேங்காய் கொண்டுள்ள உட்கருத்து.

**இருமுடியை தலையில் ஏந்திச் செல்லல்**
"எண் சான் உடம்புக்கு சிரசே பிரதானம்" அந்த வகையிலே நாம் ஒருவரைப் புகழ்ந்து போற்றினால் "ஏன் அவரைத் தலைமேல் வைத்துத் தாங்குகிறாய்..?" என்று கேட்கும் வழக்கத்தை அறிந்து கொண்டுள்ளோம்.

இங்கு, தலைமீது தாங்குவது என்பது அவ்வளவு மேலான விடயமாக கருதப்படுகிறது. தலைமீது ஒரு பொருளைத் தாங்கி வருகின்றோம் எனில், அதற்கு அவ்வளவு முக்கியத்துவத்தை நாம் கொடுக்கிறோம் என்பது அர்த்தம். பரதன் ஸ்ரீராமனின் பாதுகையைத் தோளிலோ, தோள் பையிலோ கொண்டு செல்லவில்லை. மாறாக தன் தலைமீதுதான் சுமந்து நடந்து சொன்றான் என்பதை இராமாயணத்தில் பார்க்கிறோம். ஆகையால் இருமுடியைத் தலைமீது ஏந்திச் செல்வதுதான் பொருத்தமானது.

**ஜோதியின் தத்துவம்**
கடவுளுக்கு உருவமும் உண்டு. அருவமும் உண்டு. ஆக, சபரிமலையில் ஏகாந்தமாய் சின் முத்திரையுடன் கூடிய யோக வடிவில் உருவம் கொண்ட அதே மூர்த்தியே, அருவமான ஜோதி வடிவமுமானவன் என்பதை உணர்த்துவதே ஜோதி. அந்த ஜோதியின் பிரகாசத்தினால்தான் சூரிய சந்திரர்கள் பிரகாசிக்கிறார்கள்.

**பதினெட்டாம் படியின் தத்துவம்**
ஐந்து இந்திரியங்கள், அன்மைய கோசம், எட்டு இராகங்கள், மூன்று குணங்கள், பிராணமய, மனோமய கோசங்கள், வித்யா, சுவித்யா இவற்றைக் கடப்பது என்பது, விஞ்ஞான மய, ஆனந்தமய கோசங்களைக் கடந்து நிற்கும் நிலையாகவே கருதப்படுகின்றது. எனவே பதினெட்டுத் தத்துவங்களையும் கடந்தால் ஸ்ரீ ஐயப்பனைச் சென்று அடையலாம் என்பதே பதினெட்டாம் படியின் தத்துவமாகக் கொள்ளப்படுகிறது.

மேலும் பதினெட்டுப் படி என்பது பதினெட்டுச் சித்தர்களையும், தேவதைகளையும் குறிப்பதாகவும் ஒரு ஐதீகம் உண்டு. அவர்களுக்குச் செய்யும் பூஜையே படிப் பூசையாகும்.
அந்தவகையிலே ஐயன் எல்லாவற்றையும் கடந்தவராக விளங்குவதோடு எல்லோரையும் காப்பவராகவும் விளங்குகிறார். முறைப்படி அவரை வணங்குவோர் நிலவுலகில் எல்லாச் சித்திகளையும், வானுலகில் முத்திகளையும் பெற்று வாழ்வாங்கு வாழ்வர்.

***சுவாமியே சரணம் ஐயப்பா!***





# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல் 2019

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும். ஏற்கனவே 2018 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்வதற்கு **" இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்து பெற முடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2018 தொடக்கம் 31.12.2018 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.**

கோயிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/-) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/-) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். கட்டளைகள் யாவும் **" பொருளாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு"** என்னும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2019" எனக் குறிப்பிட்டு " செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் **சமாதான நீதிவான், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராமசேவை உத்தியோகத்தர்** ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப் படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் **021 321 3024 / 021 320 7785** தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

**செயலாளர், நா.யோகநாதன்**
**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.**

---

முதலாவது அட்டவணை (படிவம் 01)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**
**வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்**

**..................... ஆம் ஆண்டு**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :- ..............................
2. பிறந்தநாள் :- ..............................
3. இந்து சமயத்தவரா? :- ..............................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் வழிபடுபவரா? :- ..............................
5. நீங்கள் உறுப்புரிமை 03 (2) (ஏ) அல்லது 03 (2) (பி) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின் இந்த ஆண்டு கோயிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விவரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விவரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி :- ..............................
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற் கட்டளையின் விவரம்:-
   காசுக்கட்டளை / த.க.இல ............ அலுவலகமும் வழங்கிய நாளும் ............ தொகை ............
8. நீங்கள் ஏதாயினும் குற்றத்துக்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விவரங்களையும் தருக.
9. இந்தக் கோயிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
10. இக்கோயிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விவரங்களையும் தருக.

மேற்கூறிய விவரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

..............................
விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ............ ஆம் ஆண்டு ............ மாதம் ............ நாளன்று ............ என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

என் முன்னிலையில்

..............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை " (றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

20..................12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

---

இரண்டாம் அட்டவணை – (படிவம் 02)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**
**வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**

**............ ஆம் ஆண்டு**

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

அன்பார்ந்த ஐயா

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

............ ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன். ............ அஞ்சலகத்தால் ............ ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட ............ இலக்கங்கொண்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் :- ..............................
முகவரி :- ..............................
எனக்குள்ள உபயம் :- ..............................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :- ..............................

..............................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என்முன்னிலையில் ............ ஆம் ஆண்டு ............ மாதம் ............ நாளன்று ............ என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

என் முன்னிலையில்

..............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

குறிப்பு:- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

20..................12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(IN/8531)(11)

# மரண அறிவித்தல்



## பெரேரா பெணார்ட்

கொழும்பைப் பிறப்பிடமாகவும், சேர்ச்லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பெரேரா பெணார்ட் 28.11.2018 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரேரா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலக்சுமியின் (பேபி) அன்புக் கணவரும், ராஜ்மோகன் (சுவிஸ்), ராஜினி (சுவிஸ்), ரதிக்கா (சுவிஸ்), உஷா (ஜேர்மனி), றஜிந்தா (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்ஷினி (சுவிஸ்), அருள்தாஸ்(சுவிஸ்), காலஞ்சென்றசுந்தரேசன்(சுவிஸ்) மற்றும் கருணாகரன் (ஜேர்மனி), சிவகுமார் (கொக்குவில்) ஆகியோரின் அன்புமாமனும், தனுசன், யனுசன், சுசிக்கா(சுவிஸ்), பியுலா, பேனின்(சுவிஸ்), றதிஸ்கன், சத்தியா, டெனிஸ், ரஸ்மி (சுவிஸ்), றுமேஸ், ஆஷா, நிஷா, றுசாந் (ஜேர்மனி), கஜப்பிரியா, பிரவீன், கின்ஸ்ஷான் (கொக்குவில்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (30.11.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சேர்ச்லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.** (cs.21473) (13) **தகவல் : குடும்பத்தினர்.**

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் 2019 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

கேள்வியின் பெயர் - நகராட்சிமன்ற இறைச்சிக்கடைகளுக்கான குத்தகைக்கேள்வி

சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 2019 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

01. கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 30.11.2018 - 14.12.2018 ஆம் திகதி வரையான அலுவலக நாள்களில் மு.ப 9.30 –பி.ப 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசியஅடையாளஅட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.

    கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி :- 14.12.2018 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10.00
    கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 14.12.2018 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 11.00

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். (எக்காரணம் கொண்டும் 14.12.2018முற்பகல் 10.00மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) இதன் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி-ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
04. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்தகேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி்வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
05. கேள்விகள் திறக்கப்படும், அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
06. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைகளிற்குரிய கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியை செலுத்திசபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
07. கேள்வி தொடர்பான மேலதிகவிபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**இந்நகராட்சிமன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்விகளிற்கு விண்ணப்பிக்கமுடியாது.**

**2019 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளிற்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விபரம் (01.01.2019 – 31.12.2019) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (இதரவரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 1. | மாட்டிறைச்சிக்கடை இல - 01 | **2,138,152.50** | 21381.53 | 1000.00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை இல - 02 | **2,138,152.50** | 21381.53 | 1000.00 |
| 3. | ஆட்டு இறைச்சிக்கடை இல - 01 | **583,000.00** | 5830.00 | 1000.00 |
| 4. | ஆட்டு இறைச்சிக்கடை இல - 02 | **583,000.00** | 5830.00 | 1000.00 |
| 5. | கோழி இறைச்சிக்கடை இல - 01 | **1,560,270.31** | 15602.70 | 1000.00 |
| 6. | கோழி இறைச்சிக்கடை இல - 02 | **1,560,270.31** | 15602.70 | 1000.00 |

**குறிப்பு: இந்நகராட்சி மன்றத்தின் கடைகளிலிருந்து 1Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.**

**நகராட்சிமன்றம்**
**சாவகச்சேரி**
**28.11.2018**


(IN 8529)(14.17)

**திருமதி சிவமங்கை**
**தவிசாளர்**
**நகராட்சிமன்றம்,சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்

# இளையதம்பி குமாரசாமி

*Retired surgeon Major, ஓய்வுபெற்ற மருத்துவளாளர்(Pharmacist, Srilanka Army Hospital Kollupitiya, colombo 03), ITR வானொலி மற்றும் அகரம் வானொலியின் முன்னாள் அறிவிப்பாளர் Montreal)*



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் நாச்சிமார் கோவிலடியை வதிவிடமாகவும், தற்போது கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ,குமாரசாமி கடந்த (26.11.2018) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஏழாலை கிழக்கை சேர்ந்த காலஞ் சென்றவர்களான இளையதம்பி தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதிகளின் அன்புமருமகனும், அன்னரத்தினத்தின் அன்புக்கணவரும், பால முருகன் (லண்டன்), பகீரதி (கனடா), செந்தூர்க்குமரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வ ரத்தினம், தவஞானவதி மற்றும் சிவஞானவதி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் கௌசல்யா, சதானந்தன், செல்வசுஜி ஆகியோரின் அன்பு மாமனாரும் கவித், ரவீனா, கம்சா, கபின்சா, கபின்சன், டிலக்ஸ்சனா, விதுசனா, சகானா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சிவபாலசுந்தரம், இராசமணி, செல்வராஜா, புஸ்பராசா, அருளானந்தராசா மற்றும் மல்லிகா தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்(01.12.2018) அன்று 55 Rue Gince, Saint Laurent, Montreal, QC H4N 1J7, Canada எனும் இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

## பனை அபிவிருத்திச்சபை தலைமையகம் யாழ்ப்பாணம்

## வழங்குனர்களைப் பதிவு செய்தல் - 2019

சபையின் வேலைத்திட்டங்களுக்கு பொருள்கள் மற்றும் சேவைகளை விநியோகிப் பதற்கான வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் (காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை).

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 20.12.2018 இற்கு முன் கிடைக் கக்கூடியவாறு கடித உறையின் (9" x 4") இடது பக்க மேல் மூலையில் வழங் குனர்களை பதிவு செய்தல் - 2019 எனக் குறிப்பிட்டு தலைவர் பனை அபிவிருத்திச் சபை தலைமையலுவலகம் தேசிய வீடமைப்புச் செயலகம் 01 ஆம் மாடி, கண்டி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக கையளிப்பதாயின் சபையின் தலைமையலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ரூபா 1000/= இனை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக சபையின் தலைமையகத்தில் காசாளரிடம் வைப்புச் செய்யலாம் அல்லது சபையின் கணக்கு இலக்கம் 1093004 இலங்கை வங்கி கிளை, யாழ்ப்பாணம் எனும் வங்கி கணக்கில் வைப்பிலிடலாம். பெற்றுக் கொண்ட பற்றுச்சிட்டை (பொது 172) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

### வழங்கும் சேவைகள் விவரம் வருமாறு

01. கட்டட நிர்மாண வேலைகள்
02. நிலமும் கட்டடமும் பராமரிப்பு வேலைகள்
03. கட்டட மூலப்பொருள்கள்
04. வாகன உபகரணங்கள் மற்றும் சேவைகள்
05. நுகர்வுப் பொருள்கள்
06. இலத்திரனியற் பொருள்கள்
07. மின்னியல் பொருள்கள்
08. துணிவகைகள்
09. காகிதாதிகள்
10. உணவு வகைகள்
11. தளபாடங்கள்
12. ஆய்வுகூடப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் (Chemical / Glassware)
13. பனைசார் கைப்பணிக்கான உபகரணங்கள்
14. பனைசார் உணவு உற்பத்திக்கான இயந்திர உபகரணங்கள்
15. அச்சுப்பதிப்பு மற்றும் பதாகைகள்
16. பாதுகாப்பு / சுத்திகரிப்பு சேவை
17. உள்ளக தொலைபேசி இணைப்பு
18. பிளாஸ்ரிக் பொருள்கள்
19. வாகன உதிரிப்பாகங்கள்
20. பலசரக்குப் பொருள்கள் (அரிசி, உழுந்து, சீனி, பயறு)
21. கண்காணிப்பு தொகுதி (CCTV)

M.B.லோகநாதன்
பொதுமுகாமையாளர்
பனை அபிவிருத்திச்சபை

(IN 8534)(14.17)


**பியூட்டி பார்லருக்கு வேலைக்கு ஆள்கள் தேவை**

வேலை தெரிந்த அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (பெண்)

**077 899 1833 ஜீவினா பியூட்டி பார்லர் இருபாலைச்சந்தி, பருத்தித்துறை றோட்.**

**Group Classes**

**English & Tamil Medium**

**தரம் - 10 , 11**

**ICT**

T. செந்தூரன் B.I.T, M.Sc, (Com Sci)Dip.Tec

வர்த்தகம்

S. றொமேஸ் B.Com, PGDE, M.A(Ed)

**ஆரம்பம் : 05.12.2018 மு.ப 10.00**

**4, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டிக்குளி.**

**077 271 9982**


## யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், மலசலகூட பராமரிப்பு சேவை என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான**

### மீள்கேள்வி அறிவித்தல் -2019

யாழ் மாநகர சபையினால் 02.11.2018 ஆம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கும், கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைவாக, இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2019 - 31.12.2019 திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | - ரூபா 500.00 (வரி நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - 30.11.2018 - 13.12.2018 (மு.ப 9.00 - பி.ப 3.00 மணி வரை) |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 13.12.2018 பி.ப. 4.00 மணி வரை |
| கேள்விப்படிவம் திறத்தல் | - 14.12.2018 மு.ப 10.00 மணிக்கு |

**நிபந்தனைகள்**

1. 2019 ஆம் ஆண்டுக்கான கேள்வியில் சித்தி பெற்று 1/3 பணம் செலுத்தாத கேள்வி-தாரர்கள் மீள் கேள்வியில் சித்தி பெறினும் பரிசீலிக்கப்பட மாட்டார்கள்

### மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

### இறைச்சிக்கடை குத்தகை - 2019

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 201,757.50 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 64,496.25 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 230,202.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 261,424.80 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 171,438.75 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 82,908.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 966,164.85 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 90,515.25 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 966,947.63 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 979,394.85 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 158,760.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 885,087.00 |
| 13 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 101,904.08 |
| 14 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 347,287.50 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 874,337.63 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 336,372.75 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 277,664.63 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 396,900.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 352,800.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 248,172.75 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 248,062.50 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 220,665.38 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 245,085.75 |
| 24 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 382,567.50 |
| 25 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 65,885.40 |
| 26 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,725.60 |
| 27 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 79,490.25 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 589,021.65 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 618,734.03 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 447,339.38 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 474,912.90 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 524,238.75 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 584,997.53 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 450,481.50 |

### பொதுச்சந்தைக் குத்தகை -2019

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய் கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,392,930.00 |
| 2 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 356,107.50 |
| 3 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 72,434.25 |
| 4 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்திகளின் அறிமுகச் சந்தை | 2,000.00 | 8,955.05 |
| 5 | பொது மலசல கூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவை | 2,000.00 | 165,375.00 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
2018.11.30

இம்மானுவல் ஆனல்ட்
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை

(14.17)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம்
24 . 09 . 1960

மறைவு
17 . 11 . 2018

### செல்வி விஜயலக்சுமி கதிர்காமலிங்கம்
(கணக்காளர்)

17.11.2018 இல் எம்பெருமான் திருவடி சேர்ந்த அன்னாரது இறுதிக்கிரியைகளில் பங்கு-பற்றியவர்களுக்கும் பலவழிகளில் அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்து எமது துயர் பகிர்ந்தவர்களுக்கும் அன்னாரது இறுதிக்காலத்தில் பெரும் சேவை வழங்கிய யாழ் பொது (போதனா) வைத்தியசாலை வைத்தியர்கள். தாதியர்கள். பல்துறை பணியாளர்கள். நிர்வாகத்தினர் மற்றும் யாழ் செஞ்சிலுவை சங்கத்தினர் ஜெய்பூர் நிறுவனத்தினர் மற்றும் சகல உதவியாளர்கள். அந்திம கிரியையாளர்கள். நண்பர்கள் ஆகியோருக்கும் அன்னாரது சார்பிலும் எமது சார்பிலும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (29.11.2018) இல் வில்லூன்றி தீர்த்தக் கரையில் நடைபெற்றது. நாளை (01.12.2018) வெள்ளிக்கிழமை நடைபெறும் பாசனக் கிரியைகள் கீரிமலை தீர்த்தக்கரையில் பூர்த்தியாகும். வீட்டுக்கிருத்திய நிகழ்வை தொடர்ந்து 02.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்னரது இல்லத்தில் மு.ப 11.00 மணிக்கு ஆரம்பமாகும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன மகேஸ்வர பூசையிலும் பங்குபெறுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**74, அரசடி வீதி, நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 21487)(14.17)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி மல்லிகாதேவி அலோசியஸ்

**தோற்றம்**
**02 . 03 . 1966**

**மறைவு**
**29.11.2018**



தச்சந்தோப்பைப் பிறப்பிட மாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி அலோசியஸ் நேற்று (29.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சதாசிவம் நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வர்களான தேவசகாயம் தொம்மாஸியா தம்பதி யரின் அன்புமருமகளும் தேவ சகாயம் அலோசியஸின் அன்புமனைவியும் ஜெனஸ்றீன், சரண் ராஜன், ஜெனித்தா, அபிராஜ் ஆகியோரின் அன்புத்தாயும் உமாலினி, நிசாந்தன் ஆகியோரின் அன்புமாமியும் வடிவேல்பூபதி, தியாக ராஜா, சுப்பிரமணியம், திரவிய நாதன், பத்மாவதி, ஸ்ரீறஞ்சன், கெங்காதேவி, நித்தியசீலன் ஆகி யோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2018)வெள்ளிக் கிழமை மு.ப. 9 மணிக்கு உரும்பிரா யில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தச்சன்தோப்பு பிணமுருங்கை இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜெனஸ்றீன் - 076 9675 942**
**சரண்ராஜன் - 075 760 9495**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி செல்லத்துரை



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21.06.1931 | 28.11.2018 |

தம்பசிட்டியினைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தினையும், சங்குவேலி தெற்கு மானிப்பாயினையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி செல்லத்துரை 28.11.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திர சேகரம் - தங்கம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - செல் லாச்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ் சென்ற செல்லத்துரையின் மனைவியும் காலஞ்சென்ற சதாசிவத்தின் தங்கையும் காலஞ்சென்றவர்களான நடராசா, சின்னத் துரை ஆகியோரின் ஸ்மைத்துனியும் சிவசோதி மலர், மனோகரன் காலஞ்சென்ற மனோ ரஞ்சன் மற்றும் ஜெகநாதன், ஈஸ்வரன், ஜெகதீஸ்வரி, மகிழ்ராஜன், வளர்மதி ஆகி யோரின் தாயாரும் காலஞ்சென்ற சோமசுந் தரம் மற்றும் இராஜேஸ்வரி, அகிலேஸ்வரி, திகழ்மதி, தனலட்சுமி, கணேசமூர்த்தி, சிவ ரஞ்சினி, கமலநாதன் ஆகியோரின் மாமி யும் தாரணி - ஜெகதீஸ்வரன், ஆதித்தன் - நித்தியா, மயூரன் - இந்துமதி, அமிர்தா - சருசன், மலர்வேந்தன் - தட்சாயினி, ஜெகதா - ரிசானந், ராகவன் - யாழினி, பிரசானந்தன், தர்சிகா - சஞ்ஞீவன், குமரன், பிரணவி, துளசிதன், கஜ்வரன், சஜிவரன், நிலக்ஷி, சரஸ்மி, சஞ்ஞீவ், சரண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் அக்ஷயா, ஆத்மியா, அஞ்சலி, நிவேதா, அக் ஷரன், வராகி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2018) சனிக்கிழமை அன்னாரின் இல்லத் தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**சங்குவேலி தெற்கு,**
**மானிப்பாய்.**

(CS 21477) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**
**ஈசன் (மகன்)**

**0771041564 / 0779577643**

## மரண அறிவித்தல்



### திருமதி நவரத்தினமணி தில்லைநாதன்

ஏழாலை மேற்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி நவரத்தினமணி தில்லைநாதன் நேற்று (29.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சரவணன் தில்லைநாதனின் (J.P.முன்னாள் அதிபர், கட்டுவன் புலம் மகாவித்தியாலயம், பொதுச்செயலாளர் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை, முடிமன்னர் ஆலய தர்மகர்த்தா, மத்தியஸ்தர் சபை உறுப்பினர், ஓய்வூதியர் சங்க நிர்வாக உறுப்பினர்) அன்புமனைவியும் தர்ஜினி (ஆசிரியர், யா/ ஏழாலை தெற்கு அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை), தாரணி (சமுர்த்தி உத்தியோகத்தர், மல்லாகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம்), மைதிலி, மயூரன் (மின்சார சபை உத்தியோகத்தர், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத்தாயும் யசோதரன் (மின்சாரசபை ஒப்பந்த ஊழியர்), யோகேஸ்வரி (அலுவலக உதவியாளர் யா/ அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம்), ஞானகௌரி (லண்டன்), தட்சாயினி (வைத்தியசாலை ஊழியர்), ஜெய சந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் கரிஷ், திஷாரா, சோனிஜா (பல்கலைக்கழக மாணவி), திவ்யா, தூபிகா, ஜன்சிகா, கார்த்திக் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மார்க் கண்டு (ஓய்வுபெற்ற போதனா வைத்தியசாலை ஊழியர்), செல்லத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரியும் நவநீதராஜா, சுபாஜினி ஆகியோரின் அன்புச்சிறியதாயும் காலஞ்சென்ற கார்த்திகேசு சொக்கலிங்கம், குமாரசாமி காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் மைத்துனியும் சிவகாந்தன், ஜெய காந்தன், சசிகாந்தன், நீலதயாளன் (கிராம உத்தியோகத்தர்), நீலதமிழினி, நீலதயாளினி (பல்கலைக்கழக மாணவர்கள்), தயாளறூபினி, தயாளநீதினி, சுகுணதாஸ் ஆகியோரின் பெரிய தாயும் கஜன், கஜனி, சுமன், மதன், குஜினா, விமல்ராஜ், ஜீவராஜ், விஜிதா (வைத்தியர்) ஆகியோரின் மாமியும் புவனேஸ்வரி, புஸ்பராணி, தங்கரட்ணம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் கணேஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2018) வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவகுரு வீதி,**
**ஏழாலை மத்தி, ஏழாலை.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 102 4342**

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் வரவு செலவுத்திட்டம் 2019

2019 ஆம் ஆண்டிற்கு கிடைக்கக் கூடிய வருமான மதிப் பீட்டையும் உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் உத்தேச வரவு செலவுத்திட்டமானது 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ஆம் திகதி இன்று தொடக்கம் ஏழு நாள்களிற்கு பின்வரும் இடங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

1. மாநகரசபை அலுவலகம் 585 /5, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2. பிரதான பொது நூலகம் 15, முற்றவெளி வீதி, யாழ்ப்பாணம்.
3. நவீன சந்தைக்கட்டடத் தொகுதி, யாழ்ப்பாணம்.
4. பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.
5. பிரதேச செயலகம், நல்லூர்.
6. மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.

மாநகரசபையின் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 212 B இன் பிரகாரம் இவ்வறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இம்மானுவேல் ஆனல்ட்
முதல்வர் மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### குமாரலிங்கம் கமலாதேவி

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப் பிடமாகவும் கொண்ட குமாரலிங்கம் கமலாதேவி 28.11.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்
குடும்பத்தினர்.

(CS/21485)(11)

**077 494 2052**

## கண்ணீர் அஞ்சலி



### சிவஸ்ரீ கிருஷ்ண நாராயணகுருக்கள்
(கதிரேசன் கோவில்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை உரிமையாளரும், ஊழியர்களும்.
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1522
சீட்டிழுப்பு திகதி 29.11.2018

வெற்றி இலக்கங்கள்
02 20 26 37 W (ஆங்கில எழுத்து)

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 22, 132, 096/=

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 449
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.11.29

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 53,421,450/-

வெற்றி இலக்கங்கள்
08 10 13 31 L (ஆங்கில எழுத்து)

## සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 199
சீட்டிழுப்பு திகதி ▶ 29.11.2018 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| A | 24 64 68 | 08 |

அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16,397, 468 /=

2018.12.01ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற நோய்களுக்கு நிரந்தர தீர்வு

பிரபல ஹோமியோபதி நிபுணரின் சேவை மக்களுக்காக
பரந்தனில் 01.12.2018 (நாளை)
யாழ்ப்பாணத்தில் 08.12.2018
தொடர்பு - 077 444 1082

## Web Designing Course

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்
Web Designing Course
இரு நாள்கள் நடத்த உள்ளது.
ஒருவருக்கான கட்டணம் 1000/= ஆகும்.
பயிலுனர்கள் Laptop கொண்டு வர வேண்டும்.
விண்ணப்ப முடிவு திகதி 05.12.2018

தலைவர், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், 76, கோவில் வீதி, யாழ்ப்பாணம். மின்னஞ்சல் முகவரி : jaffnacngos@gmail.com T. P : 021 222 3668

## நன்றி நவிலல்



### சண்முகானந்தம் விஜயராகவன்
(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், தொலை பேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் பங்குபற்றியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி - V. கோகிலத்வனி
(தேசிய கலைஞரும் அகில இலங்கை சமாதான நீதவானும்)
சகோதரன்: S.ஜெயந்திநாதன்,
முகாமையாளர் - செல்வேந்திரா - & Co பட்டயக் கணக்காளர்.

## உள்ளத்தை உருக்கும் நினைவுகளோடு

செயல் இழந்த பதினெட்டில் | இதயம் நெருடும் இருபத்திரண்டில்



மண்ணுலகில் 03.08.1942
விண்ணுலகில் 30.11.2000

### அமரர் இராசு செல்வரட்ணம்
(சித்தப்பா)

(உரிமையாளர், அம்பாள் மரக்காலை
வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்)



மலர்ந்தாய் 19.10.1976
மறைந்தாய் 21.08.1996

### செல்வி
### றஜனி செல்வரட்ணம்

(வர்த்தகப்பிரிவு A/L - 1995 மாணவி
யாழ். இந்து மகளிர் கல்லூரி)

கடமையில் செயல்வீரராய் கருத்துடனே வார்த்தைபேசி கண்ணியமாய் வாழ்ந்தீர்கள்
பண்பும், பணிவும்கொண்டு யாவர் உள்ளத்திலும் வாழ்ந்தீர்கள்
கனிமுகமான இருமுகங்களின் இன்முறுவல் காண்போமா இனி
பாரிலே பாவிகள் நாம் இங்கிருக்க நீவீர் சென்றது ஏனோ
நீர் குமிழி வாழ்வியல் தத்துவத்தை எமக்கு உணர்த்திய காவிய தலைவரே
"இன்னா செய்தாரை உறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து கொளல்"
யாரிடமும் பிரிவின்றி பழகும் செல்வ மழலைகள் நீங்கள்
உமை இழந்து உயிரிழந்த ஓவியமாய் வாழ்கின்றோம் நாம்
உங்கள் ஆத்மா சாந்திபெற அன்னை வீரமாகாளியின் பாதம் வணங்கி பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"செல்வபதி"
256, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(cs.13472)(13.17)

MAJESTIC CINEPLEX
REGAL CINEMAS
empire CINEPLEX
All Cinemas Except Regal Colombo




Jaffna Platinum
10.00AM | 1.00PM | 4.15PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)
Jaffna Bronze
10.30AM | 1.30PM | 4.30PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)
Jaffna Silver
1.45PM | 10.45PM (Fri/Sat)

CEYLON THEATRES Since 1928
Hotline 011 5 999 999
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com.
021493 1111

# 19ஆவது பிறந்த தினமும் முதலாவது ஆண்டு நினைவலைகளும்

## அமரர் மயில்வாகனம் தர்சிகா

திதி:- 30.11.2018



மலர்வு 05 . 11 . 1999

உதிர்வு 10 . 12 . 2017

கார்த்திகைப் பூவாய்
கனகமணி முத்தாய்
காரிருள் நீக்கும்
கார்த்திகைத் தீபமாக
காலம் முழுவதும் எமது வாழ்வில்
நீயும் ஒரு சுடராக
ஒளிர்வாய் எம் இதயத்தில்
மீண்டும் மீண்டும்
கார்த்திகை வரும் எனில்
**தர்சிகாவும்** வருவாள்
எம் நினைவுகளில் பிரகாசமாய்...
நீ வாழ்கிறாய்...
மண்ணுலகில்
அகவை பத்தொன்பதில்
அன்பான இதயங்கள்
வாழ்த்தும் உன்னை...
மௌன கீதமாய்....
வீசும் காற்றில்
மழை நீர் மண்ணின் வாசனையாய்
வானில் மிளிரும் நட்சத்திரங்களாய்
நிலவின் குளிர்மையாய் இரவின்
அமைதியாய்
என்றும் உறவுகளின் உணர்வுகளாய்...

**உம் பிரிவால் நித்தம் துயருறும்...**

அம்மா, அப்பா, அக்கா, தம்பி,
தாத்தா, அம்மம்மா, மற்றும்
சதீஸ்மாமா, அருட்சோதி அத்தை குடும்பத்தினர் (நோர்வே),
சுரேஸ்மாமா விஜயா அத்தை குடும்பத்தினர் (ஜேர்மனி),
சிவா சித்தப்பா ஜெயந்தினி சித்தி குடும்பத்தினர் (கொக்குவில்),
ஜனி மாமா லோஜி அத்தை குடும்பத்தினர் (லண்டன்),
ரகு மாமா யாழினி அத்தை குடும்பத்தினர் (நோர்வே),
றஞ்சன் மாமா துஷி அத்தை குடும்பத்தினர் (லண்டன்)
பாபு மாமா றஞ்சி அத்தை குடும்பத்தினர் (சண்டிலிப்பாய் இந்து கல்லூரி ஆசிரியர்),
மோகன் மாமா ஜுபி அத்தை குடும்பத்தினர் (ஜேர்மனி),
சத்தியவதி அப்பம்மா (ஆனைக்கோட்டை),
சாந்தகுமார் மனோ குடும்பம் (சுவிஸ்),
ஜெயக்குமார் ரதி குடும்பம் (லண்டன்)

**சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.**

(CS/21383)(11,17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி நமசிவாயம்



காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நமசிவாயம் நேற்று (29.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**G.P.S. Road, கல்வியங்காடு.**

**தகவல் :**
**மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

## பக்கிரிப்பத்தர் கந்தையா



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பக்கிரிப்பத்தர் கந்தையா நேற்று (29.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பக்கிரிப்பத்தர் வள்ளியம்மை தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்ற வீரலட்சுமியின் அன்புக்கணவரும் செல்லத்துரை தம்பிராசா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும் சுகுமார் (ராசன்), நிர்மலாதேவி, ரஞ்சிதமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியராணி, ஸ்ரீஸ்கந்தராஜா (தேவி நகைமாடம் புதுக்குடியிருப்பு), நவநீதகிருஸ்ணன் (வேணுஷா ஜீவல்லர்ஸ் Luzran ) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான அப்புலிங்கம், இரத்தினவேல் (சந்தனம்) மற்றும் அகிலாண்டேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் துசாந், ராகுல், ஷாமினி காலஞ்சென்ற பிரவீனா மற்றும் அனோஜன், சரணியா, தனுஷ்யன், வினோஜிதன், கஜந்தன், வேணுஷா, சுபேதா, அபிமலர் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி தனலெட்சுமி குஞ்சிளையாப் போடி



மண்டூரைப் பிறப்பிடமாகவும் கல்முனையை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலெட்சுமி குஞ்சிளையாப்போடி நேற்று (29.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலபிள்ளை - அன்னமுத்து தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்ற குஞ்சிளையாப் போடியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலிப்போடி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கிரிஹரன், கிரிதாஸ் மற்றும் கிருஷ்ணவேணி (மேற்பார்வையாளர் ஆதார வைத்தியசாலை - கல்முனை), கிருஸாணி (கு.ந.உத்தியோகத்தர் பி.வை.நல்லூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராசா (டோகா), தவசீலன்(தவா - கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீஷன் (கொ.இ.கல்லூரி), லிக் ஷிகன்(கொ.இ.கல்லூரி), ஹம்ஷா (கொ.இ.ஆ.பாடசாலை), பிரணவி(உவஸ்லி, உயர்தரப்பாடசாலை - கல்முனை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**66, அச்சுக்கூட வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(CS 21479) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 612 8186**

## பிரம்மஸ்ரீ நாராயண சிவாச்சாரியார்



பிறப்பு 12.07.1957

இறப்பு 28.11.2018

கீரிமலையைப் பூர்வீகமாகவும், அம்மன் வீதி, கொக்குவிலை வதிவிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் வண்ணை கதிரேசன் கோயிலில் சுமார் 40 ஆண்டு காலமாக இறைபணியாற்றிய பிரதம குருவுமாகிய பிரம்மஸ்ரீ நாராயண சிவாச்சாரியார் 28.11.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணய்யர் - கோமதியம்மாள் தம்பதிகளின் புத்திரனும், சுப்பிரமணிய சர்மா - பத்மாவதி தம்பதிகளின் மருமகனும், கல்பனா கௌரி அவர்களின் அன்புக் கணவரும், கிருஷ்ணமோஹன் (மலேசியா), கிருஷ்ணராஜ் (ஆஸ்திரேலியா), துளசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், நீலாம்பரி, நிவேதினி, கோபிகிருஷ்ணா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற ஜெயலக்ஷ்மி மற்றும் ச.பாலாம்பிகை, கு.பத்மாவதி, க.ராமாமிர்தம், ஜெ.மீனாட்சி, இ.சம்பூர்ணவல்லி, கி.வைத்தீஸ்வர சிவாச்சாரியார், க.ஷேஷம்மா, ஞா.பார்வதி, சு.பரமேஸ்வரி, கி.பரமேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராமசிவாச்சாரியார் (மலேசியா), Dr.இ.இலக்ஷ்மண ஐயர் (நல்லூர்), சாம் சோமஸ்கந்தசிவாச்சாரியார் (கனடா) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி, கொக்குவில்.** (CS/21483)(11) **தகவல்:- குடும்பத்தினர்.**

**021 205 2391**

# அறுகம்புல்லின் பயன்கள்

தினமும் காலையில் வெறும் வயிற்றில் அறுகம்புல் சாறு குடிக்க வேண்டும். இதை கொஞ்சம் கொஞ்சமாக சுவைத்துக் குடிக்க வேண்டும். குடித்த 2 மணி நேரத்திற்குப் பிறகு மற்ற உணவு வகைகள் சாப்பிடலாம்.

**அறுகம்புல் சாறு குடிப்பதனால் ஏற்படும் பயன்கள்**

*நாம் எப்பொழுதும் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கலாம்.

*குருதிச் சோகை நீங்கி, இரத்தம் அதிகரிக்கும்.

*வயிற்றுப் புண் குணமாகும்.

*குருதிஅழுத்தம் குணமாகும்.

*நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை அளவை கட்டுப் படுத்தும்.

*சளி, சைனஸ், ஆஸ்துமா போன்ற நோய்களை குணப் படுத்தும்.

*நரம்புத் தளர்ச்சி, தோல் வியாதி ஆகியவை நீங்கும்.

*மலச்சிக்கல் நீங்கும்.

*புற்று நோய்க்கு நல்ல மருந்து.

*உடல் இளைக்க உதவும்

*இரவில் நல்ல தூக்கம் வரும்.

*பல், ஈறு கோளாறுகள் நீங்கும்.

*மூட்டு வலி நீங்கும்.

*கர்ப்பப்பை கோளாறுகள் நீங்கும்.

# தேனின் மருத்துவ குணங்கள்

தேனின் மருத்துவ குணங்கள் அனைவரும் அறிந்ததே. பின்வரும் தேன் கலவைகள் ஆரோக்கிய வாழ்க்கைக்கு உதவும்.

**கண் பார்வைக்கு**
தேனை கேரட் சாறுடன் கலந்து காலை ஆகாரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் பருகினால் கண் பார்வை விருத்தியடையும்.

**இருமலுக்கு**
சரியளவு தேன் மற்றும் இஞ்சி சாறு கலந்து அருந்தினால் இருமல், தொண்டை வலி, மார்பு சளி, மூக்கு ஒழுகுதல் மற்றும் மூக்கடைப்பு போன்ற உபாதைகளில் இருந்து நிவாரணம் கிடைக்கும்

**ஆஸ்துமா**
அரைகிராம் கருப்பு மிளகைப் பொடி செய்து சரியளவு தேன் மற்றும் இஞ்சி சாறுடன் கலந்து அருந்த ஆஸ்துமா குணமாகும்

**குருதிக் கொதிப்பு**
ஒரு தேக்கரண்டி அளவு பூண்டு சாறுடன் இரண்டு டீகரண்டி தேன் சேர்த்து தினமும் இரு வேளை (காலை - மாலை) சாப்பிடுவது குருதிக் கொதிப்புக்கு சிறந்த மருந்தாகும்.

**குருதி சுத்திகரிப்பு/கொழுப்பு குறைப்பு**
ஒரு குவளை மிதமான சூடுள்ள நீரில் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி தேனும், ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறும் கலந்து தினமும் காலைக்கடன்களுக்கு முன் பருகவும். இது குருதி சுத்திகரிப்பிற்கும், உடல் கொழுப்பை குறைப்பதற்கும், மற்றும் வயிற்றை சுத்தமாக்கவும் உதவும்.

**தேனை உட்கொள்ளும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்:**

1. தேனை சூடான உணவு பொருள்களுடன் கலக்கக் கூடாது.
2. தேனைச் சூடாக்குவதை தவிர்க்க வேண்டும்.
3. வெப்ப நிலை அதிகமாக உள்ள இடங்களில் வேலை செய்பவர்கள் தேன் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.
4. தேனை மழை நீர், கடுகு, நெய் மற்றும் காரமான உணவு வகைகளுடன் ஒருபோதும் கலக்கக் கூடாது.

தேன் பல மலர்களின் மதுரம் கலந்த ஒரு கலவையே. அதில் நச்சு தன்மை வாய்ந்த மலர்களும் அடங்கும். நஞ்சு பொதுவாக கார மற்றும் உஷ்ண குணங்களையே கொண்டிருக்கும். ஆகவே தேனை கார மற்றும் சூடான உணவு பொருள்களுடன் கலக்கும்போது இந்த நச்சு தன்மைகள் மேலோங்கும் சாத்தியக்கூறு உள்ளது.




மரண அறிவித்தல்

**நாகலிங்கம் செல்வராஜன் (ராசா)**



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கும்பழாவளை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வராஜன் (ராசா) நேற்று (29.11.2018) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் கேசவன் (கனடா), நிமலன் (லண்டன்), சிறிசத்தியா (சுவிஸ்), சிறிவித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாவித்திரி, சின்னத்தம்பி, காலஞ்சென்ற ராமநாதன் மற்றும் மங்களேஸ்வரி, திருச்செல்வம், கோபாலகிருஷ்ணன், குணேஸ்வரி, பாலச்சந்திரன், பத்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சித்திரா, சுரேந்தினி, சுரேந்திரன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கீர்த்தன், துவாரகன், அக்சயா, தர்ஷன், தர்ஷனா, சுரபி, சுடரவன், கீர்த்தனா, துவாரகன், பிரியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2018) வெள்ளிக் கிழமை பி.ப. 4.00 மணியளவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்

பாராட்டி வாழ்த்துகின்றோம்


செல்வி வ.கிருஸ்ணானந்தி


திரு. க.குணரத்தினம்

எமது கல்லூரியில் விஞ்ஞானபாட ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி வ.கிருஸ்ணானந்தி அவர்கள் ராஜரட்டை பல்கலைக்கழக உதவிப் பதிவாளராகப் பதவியுயர்வு பெற்றமைக்கும் பாடசாலையின் தமிழ் பாட ஆசிரியர் திரு.க.குணரத்தினம் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியபிரமாணம் செய்தமையையும் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பதவிகள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

**வட்டமேசை - யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.**

## தேர்தல்...

யாளராகக் கடமையாற்றிய மொஹமட் நேற்று முதல் தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளராக மகிந்த தேசப்பிரிய பதவியில் தொடர்கின்றார். (ற-5)

## 12,000...

களில் தனியார் காணிகள் விடுவிக்கப்படும். ஆனாலும் இராணுவத்தினர் வசம் உள்ள காணிகளில் 12 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாது. தேசிய பாதுகாப்பு மற்றும் ஏனைய சில காரணங்களுக்காக அந்தக் காணிகளை விடுவிக்க முடியாது. இவ்வாறு இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களில், 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் 25 ஆயிரம் ஏக்கர் தனியார் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத காணிகளே உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின்படி, வடக்கு கிழக்கு மாகாணங்களில் விடுவிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் ஆராய்வதற்காக 5 வருடச்செயற்பாட்டுக் காலத்தைக் கொண்ட வேலைத் திட்டமொன்று பாதுகாப்பு அமைச்சால் முன்னெடுக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டத்தின் கீழ் இதுவரை 95 வீதமான காணிகள் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 வீதமான காணிகளே விடுவிக்கப்பட வேண்டியுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளை அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே பணிப்புரை விடுத்திருந்தார்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியிலிருந்து 2009ஆம் ஆண்டு வரை 84 ஆயிரத்து 509 ஏக்கர் காணி இராணுவத்தினர் வசமிருந்தது. எவ்வாறாயினும், அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 12 ஆயிரம் ஏக்கர் காணிகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பார்கள் எனவும் இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது - என்றுள்ளது. (ற-5)

## பெப்ரவரிக்கு...

ஐக்கிய தேசிய முன்னணி அரசு அமைவதற்கு தாம் விதித்துள்ள நிபந்தனைகளை குறித்த காலக்கெடுவுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்றும் தவறினால், வழங்கப்படும் ஆதரவை மீளாய்வு செய்ய வேண்டிய நிலமை ஏற்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாகவே தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை 5 மணியிலிருந்து இரவு 6.30 மணிவரை அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில், ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, ராஜித சேனாரத்ன, சாகல ரத்னாயக்க, மங்கள சமரவீர, அகிலவிராஜ் காரியவசம், ரிசாட் பதியுதீன், ஹக்கீம், மனோ கணேசன், மலிக் சமரவிக்கிரம, ரவி கருணாநாயக்க ஆகியோரும், கூட்டமைப்பின் சார்பில் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு அமையுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த நிபந்தனையின் அடிப்படையில் ஆட்சிக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பிலும், அதற்குப் பதிலீடாக ஐக்கிய தேசிய முன்னணி எவற்றைச் செய்யும் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

முக்கியமாக புதிய அரசமைப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, வடக்கு கிழக்கு அபிவிருத்தி, வேலை வாய்ப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது.

ஒவ்வொரு விடயங்கள் தொடர்பிலும் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டு விடயங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இரண்டு தரப்பிலும் கூறப்பட்டுள்ளது. இந்த விவகாரங்கள் தொடர்பில் தொடர்ந்தும் பேசிக் கொண்டேயிருப்பதாகவும், அதைத் தொடர அனுமதிக்க முடியாது என்று ஐக்கிய தேசிய முன்னணயின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர். நிர்ணயிக்கப்படும் கால எல்லைக்குள் விடயங்கள் முன்னெடுக்கப்படாவிட்டால், ஐக்கிய தேசிய முன்னணிக்கான ஆதரவை பரிசீலிக்க வேண்டியிருக்கும் என்று கூட்டமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி இரண்டு தரப்பும் இறுக்கமான மௌனம் காக்கின்றன.

அதேவேளை, கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டுள்ள ரணில் விக்கிமசிங்க இது தொடர்பான உறுதிமொழி அடங்கிய கடிதத்தை நாடாளுமன்றத்தில் இன்று கூட்டமைப்பினரிடம் கையளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5)

## பெற்றோல்...

யளவில் நடத்தப்பட்ட பெற்றோல் குண்டுத் தாக்குதலில் அந்த வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு முச்சக்கர வண்டிகள் தீயில் எரிந்து நாசமாகின. உந்துருளிகள் இரண்டு அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. 8 பேர் கொண்ட வன்முறைக் கும்பலே இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆரியகுளம் சந்தியில் கராஜ் வைத்திருக்கும் உரிமையாளர் ஒருவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கராஜ் உரிமையாளர் நேற்றுமுன்தினம் இரவு முச்சக்கர வண்டிகள் இரண்டை வீட்டில் கொண்டு வந்து விட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 1.55 மணியளவில் பெரும் சத்தம் கேட்டுள்ளது. வீட்டு உரிமையாளர் வெளியே வந்து பார்த்த போது 8 பேர் முகமூடியுடன் வீட்டின் முன்னாள் நின்றுள்ளனர்.

"அந்தக் கும்பல் வீட்டின் கண்ணாடிகள் மற்றும் வாகனங்கள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டது. முச்சக்கரவண்டிகள் இரண்டும் தீப் பற்றி எரிந்தன. உந்துருளிகள் இரண்டு வாளால் வெட்டப்பட்டு சேதமாக்கப்பட்டன. வீட்டின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. நான் எவருடனும் எந்த பிரச்சினைகளுக்கும் செல்வதில்லை. யார் இந்தச் சம்பவத்தைச் செய்தார்கள் என்று தெரியாது' என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5.106)

## இலவச...

திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது. அதற்கமைய பாடசாலைச் சீருடையைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சீருடைக்கான வவுச்சர்களை வழங்கியபோது 550 மில்லியன் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது. உள்ளூர் ஆடைத் தயாரிப்பாளர்களிடம் சீருடைக்கான துணியைக் கொள்வனவு செய்யாமையால் அவர்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கினர். ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிக நிதியை வெளிநாட்டவருக்கு வழங்க வேண்டி நேரிட்டது என்றுள்ளது. (ற-5)

## ஐ.தே.மு....

மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கடிதம் அனுப்பியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. அதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பும் விவகாரம் ஆராயப்பட்டது. இதன்போது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், ஒற்றுமைக்காக கையெழுத்திடுகின்றேன் என்று கூறியுள்ளார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அப்படியானால் மாற்றுத் தீர்வாக உங்களிடம் என்ன உள்ளது? என்று அவரிடம் கேள்வி எழுப்பியுள்ளார். அதன்பின்னர் கூட்டமைப்பின் சகல உறுப்பினர்களும் அரச தலைவருக்கு அனுப்பப்படவுள்ள கடிதத்தில் கையெழுத்திட்டனர்.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து நடந்த அனைத்துச் சம்பவங்களினதும் பின்னணியின் அடிப்படையில் மேற்குறித்த விடயம் தொடர்பாக நாங்கள் அக்கறைகொண்டு, இந்தக் கடிதத்தை எழுதுகின்றோம்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், (மகிந்த ராஜபக்ச), அவர் நியமிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும், இந்தக் காலப் பகுதியில் பல தடவைகள் நாடாளுமன்றம் கூடியுள்ள போதிலும், தனக்கு நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை நம்பிக்கையை உள்ளது என்பனை நிரூபித்துக் காட்ட முடியாத ஒருவராக காணப்படுகின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மீது தலைமை அமைச்சராக இருப்பதற்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கடந்த 14, 16ஆம் திகதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

'குரல்' அடிப்படையில் எடுக்கப்பட்ட வாக்குகள் 122 உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது மாத்திரமன்றி இது தொடர்பிலான சபாநாயகரின் அறிக்கைகளும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை அமைச்சராக இருப்பதற்கு நாடாளுமன்றத்தின் நம்பிக்கையை பெற்றுள்ளாரா என்ற வினாவுக்கு பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து எதிராகவே உள்ளது. அது மாத்திரமன்றி சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டும் உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர், தலைமை அமைச்சராகத் தான் இருப்பதற்கு நாடாளுமன்றத்தில் நம்பிக்கையை பெற்றுள்ளார் என்பதனை நிரூபித்துக் காட்ட இயலாது போயுள்ளது.

இந்த நிலையில் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை அமைச்சராக இருப்பதற்கு எதிராக, கடந்த 14 மற்றும் 16 ஆம் திகதிகளில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களானது, இந்த நாட்டில் ஒரு தலைமை அமைச்சரோ, அமைச்சரவையோ சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட அரசோ இருக்கின்றதா என்ற முரண்பாட்டை தோற்றுவித்துள்ளது.

இந்த நிலமை தொடர்ந்து நீடிக்க முடியாது என்பதை நாம் மிகவும் மரியாதையுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

நாடாளுமன்றத்தின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை அமைச்சராக நியமிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாம் கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் நாளுக்கு முன்னர் இருந்த, ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசை மீள் அமைப்பதற்கு ஆதரவளிப்போம்.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணியினால் நியமிக்கப்படும், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை பெறக் கூடியவர் என்று நீங்கள் கருதும் நபரை தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் எனவும், தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை அரச தலைவராகிய தங்களுக்குத் தெரியப்படுத்துவதை எமது கடமையாக கருதுகின்றோம், குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, சி.சிவமோகன், சீனித்தம்பி யோகேஸ்வரன், சிறிநேசன், கோடீஸ்வரன் மற்றும் துரைரெட்ணசிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். (ற-5)

## நான்காவது....

காலை 10.30 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிப்பை தொடர்ந்து தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கான நிதியை முடக்கும் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க முன்வைத்தார். தீர்மானத்தை அதே கட்சியை சேர்ந்த நவீன் திஸ்ஸநாயக்க வழிமொழிந்தார். தீர்மானம் மீது விவாதம் இடம்பெற்று இலத்திரனியல் முன்றப்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

123 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். எந்தவொரு வாக்குகளும் எதிராக அளிக்கப்படவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த எந்த ஒரு உறுப்பினரும் நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்கவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரச தரப்புக்கு தாவிய அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும், ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகி சுதந்திரமான உறுப்பினராக செயற்பட அத்துரலிய ரத்தன தேரரும், நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்றனர். இவர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

அதேவேளை, மகிந்த தரப்புக்கு தாவி அமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டபின், மீண்டும் ஐக்கிய தேசிய கட்சிக்கு திரும்பி வந்த வசந்த சேனநாயக்க, தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, நாடாளுமன்றம் இன்று காலை 10.30 மணி வரை ஒத்திவைக்கப்படுகின்றது என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவித்தார்.

(ற-5.10.61)

## யாழ். - கொழும்பு...

குள்ளாகினர்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட பேருந்தே விபத்துக்குள்ளாகி யுள்ளது. கட்டுப்பாட்டை இழந்த பேருந்து கால்வாய்க்குள் தடம்புரண்டு பல தடவைகள் உருண்டுள்ளது. அதில் சாரதியும், மூன்று பெண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 19 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். உயிரிழந்தவர்களும், காயமடைந்தவர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச வாசிகளும்,பொலிஸாரும் இணைந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்கள் நோயாளர் காவுவண்டி மூலம் மாறவில மற்றும் நாத்தாண்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-8)

## வடக்கு...

கூறப்படும் 320 இலட்சம் ரூபா தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு 3 பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் எழுத்து மூலம் ஆளுநரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய விசாரணைகள் நடைபெறவுள்ளன. சுகாதார அமைச்சின் செயலாளர் திவாகரன், வடக்கு மாகாண கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சுரேந்தினி, மாகாண சுகாதாரத் திணைக்களக் கணக்காளர் கஜேந்திரன் ஆகியோர் இந்த விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். இருவாரங்களுக்குள் விசாரணை அறிக்கையை கையளிக்க வேண்டும் என்று ஆளுநர் பணித்துள்ளார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சந்திரசிறி பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி நிதியை வடக்கு மாகாண ஆளுநர் சுயேச்சை நிதிய வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டிருந்தார். அதன் வட்டியில் சிறுநீரகம் மற்றும் இதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவச் செலவுக்கு நிதியத்தின் ஊடாகப் பணம் வழங்கப்பட்டு வந்தது. வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் அனைத்து நிதியும் அந்தந்தத் திணைக்களங்களுக்கு மீளளிக்கப்பட்டது. அந்த நிதியைப் பொருத்தமான திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று மாகாணக் கணக்காய்வுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண மகளிர் அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதி அந்தத் தீர்மானத்துக்கு மாறாகச் செலவு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அது தொடர்பாகவே வடக்கு ஆளுநர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-8)

## தமிழ்க்...

இடையில் தனித் தனியாக சந்திப்புக்கள் நடைபெறவுள்ளன.

கொழும்பில் கடந்த ஒரு மாத காலமாக நிலவி வந்த அரசியல் நெருக்கடி இன்று தீர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்ற அமர்வு நேற்று நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் புறக்கணித்திருந்த போதும், அமைச்சர் விஜயதாச ராஜபக்ச பங்கேற்றிருந்தார். அவர் சிறப்புரையாற்றியிருந்தார். தற்போதுள்ள அரசியல் நெருக்கடியை தணிப்பதற்காக சபாநாயகர், அரச தலைவருடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும், அதற்கு அரச தலைவர் தயாராக இருப்பதாகவும் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

நாடாளுமன்ற அமர்வு முடிவடைந்த பின்னர், அரச தலைவருக்கும் சபாநாயகருக்கும் இடையிலான சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. அரச தலைவர் செயலகத்தில் நேற்று மாலை சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், அரச தலைவர் நேற்றைய நாடாளுமன்ற அமர்வை ஏற்றுக் கொண்டுள்ளார். அத்துடன் அரசியல் நெருக்கடியைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கும் இணங்கியுள்ளார். இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்குவதாக அரச தலைவருக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

சபாநாயகருடனான சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால, ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியினரையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் தனித் தனியே சந்தித்துப் பேச்சு நடத்த விரும்புவதாகக் கூறியுள்ளார். இதற்கு அமைவாக இன்று மாலை 6 மணிக்கு கூட்டமைப்புடனும், இரவு 7 மணிக்கு ஐக்கிய தேசிய முன்னணியுடனும் சந்திப்பு நடைபெறவுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்வேன் என்று வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அரச தலைவர் தெரிவித்திருந்தார்.

(5.10.61)



## சராசரியை கருத்தில்கொண்டு நீக்கப்பட்டாராம் மிதாலி ராஜ்

பெண்களுக்கான ரி20 உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணியில் இருந்து மிதாலி ராஜ் நீக்கப்பட்டமைக்கு, அவருடைய சீரற்ற சராசரியே காரணம் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரமேஸ் பவார்.

மேற்கிந்தயத் தீவுகளில் அண்மையில் ரி20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இந்திய அணியில் இருந்து அனுபவ வீராங்கனை மிதாலி நீக்கப்பட்டார். அவர் இல்லாத இந்திய அணி மிகவும் மோசமாகத் தடுமாறித் தோல்வியடைந்தது. இந்திய அணியின் தோல்விக்கு மிதாலி நீக்கப்பட்மையே காரணம் என்று கிரிக்கெட் வல்லுனர்கள் பலரும் வெளிப்படையாகவே விமர்சித்திருந்தனர். "பயிற்சியாளர் பவார் என்னைத் திட்டமிட்டு பழி வாங்கினார்" என்று மிதாலியும் குற்றச்சாட்டை முன்வைத்து அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் மிதாலி நீக்கப்பட்டமை ஏன் என்று விளக்கமளித்துள்ளார் பவார். அவர் தனது விளக்கத்தில், "சீரற்ற சராசரியைக் கருத்தில்கொண்டே மிதாலி நீக்கப்பட்டார்" என்று தெரிவித்துள்ளார். (ம)

## தீவுகள் - பங்களாதேஷ் 2ஆவது டெஸ்ட் இன்று



மேற்கிந்தியத் தீவுகள் - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷூக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது. இரண்டாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்ததால் குறைந்த பட்சம் தொடரைச் சமநிலையில் முடிக்க வேண்டுமாயின் இன்று ஆரம்பமாகும் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடி மேற்கிந்தியத் தீவுகளுக்கு உள்ளது. (ம)



### உலகிலுள்ள கிரிக்கெட் வீரர்களில்

# பணக்கார வீரராக மீண்டும் கோக்லி

உலகிலுள்ள கிரிக்கெட் வீரர்களில் மிகவும் பணக்கான வீரர் என்ற சிறப்பைத் தொடர்ந்தும் தக்கவைத்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி. உலகிலுள்ள விளையாட்டு வீரர்களில் அதிக வருவாயை ஈட்டும் வீரர்களின் பட்டியலை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறது போர்பஸ் பத்திரிகை. கிரிக்கெட் வீரர்களில் அதிக வருவாய் ஈட்டும் வீரராக கடந்த வருடம் அடையாளப்படுத்தப்பட்டார் கோக்லி. இந்த வருடமும் கோக்லியே தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.

இந்த வருடத்தில் மட்டும் கோக்லி இலங்கை மதிப்பில் சுமார் 500 கோடி ரூபாவை வருவாயாகப் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த வீரர்களின் பட்டியலில் கோக்லி 82ஆவது இடத்தில் உள்ளார். பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள ஜோகோவிக்கை விடவும் கோக்லி அதிகம் சம்பாதித்துள்ளார். (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 30

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பொலிகை பாரதி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை கெல்த் ஸ்ரார் அணியை எதிர்த்து பொலிகை பிளக் புல்ஸ் அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை அற்ராக் போய்ஸ் அணியை எதிர்த்து பொலிகை நோர்த் யுனைற்ரெட் அணி மோதவுள்ளது. (ம-23)

## ரகிமுக்குக் காயம்

பங்களாதேஷ் அணியின் இலக்குக் காப்பாளரும் மத்திய வரிசை வீரருமான ரகிமுக்குக் கைவிரலில் காயமேற்பட்டுள்ளது. இதனால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் விளையாடுவாரா என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

இரண்டாவது ஆட்டத்துக்காக நேற்றுமுன்தினம் வலைப் பயிற்சியில் ஈடுபட்டபோது ரகிமுக்குக் காயம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து அவர் நேற்றைய தினம் வலைப்பயிற்சியைப் புறக்கணித்தார். இதனால் இன்று அவர் களமிறங்குவாரா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. (ம)





கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் கால்பந்தாட்டப் பயிற்சி முகாம் இடம்பெற்றது. (ம-23)

## பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான கராத்தே

யாழ்ப்பாணம், நவ. 30

பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான 9ஆவது கராத்தே தொடர் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 2ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்றும் இலங்கை கராத்தே அணியில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பால்ராஜ், கொழும்பைச் சேர்ந்த அபிசேக் ஆகிய இரு தமிழர்கள் இடம்பிடித்துள்ளனர். (ம-23)

## பாக். அணியில் மாற்றமில்லை

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான பாகிஸ்தான் அணியில் இரண்டாவது ஆட்டத்தில் விளையாடிய வீரர்களே இடம்பிடிப்பார்கள் என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பிராஸ் அகமட் தெரிவித்தார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் தோல்வியடைந்த போதிலும் இரண்டாவது ஆட்டத்தில் அந்த அணி இன்னிங்ஸால் வென்று பதிலடி கொடுத்தது. இதையடுத்தே சர்பிராஸ் அகமட்டிடம் இருந்து இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. (ம)




## சமநிலை

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லியோன் மன்செஸ்டர் சிற்றி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றதை அடுத்து ஆட்டம் சமநிலையானது. ஒப்பீட்டளவில் மன்செஸ்டர் சிற்றியை விடவும் லியோன் பலமான அணி என்கிற கருத்துக்கணிப்பு உள்ள நிலையில் அந்த அணியைச் சமன்செய்தமையால் லியோன் அணிக்குப் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. (ம)




ஐரோப்பியக் கழகங்களின் சம்பியன்ஸ் லீக்

# மெஸ்ஸி அதிரடி வென்றது பார்சா




ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்றது பார்சிலோனா அணி.

வருடாவருடம் இடம்பெறும் ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரின் குழுநிலை ஆட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனாவும் பி.எஸ்.வி. அணியும் மோதின.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே பி.எஸ்.வி. அணியினர் மெஸ்ஸியைக் கட்டுப்படுத்த மிகவும் சிரமப்பட்டனர். சுமார் நான்கு அல்லது ஐந்து வீரர்களின் கண்காணிப்பில் மெஸ்ஸி தொடர்ந்து வைக்கப்பட்டுக் கொண்டிருந்தார். இதனால் அவர் அவ்வப்போது முறையற்ற விதத்திலும் கட்டுப்படுத்தப்பட்டார். கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 61ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவு செய்தார். பக்கியு 70ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். டி ஜோங் 82ஆவது நிமிடத்தில் பி.எஸ்.வி. அணியின் கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது. (ம)




## லிவர்பூலை வென்றது பரிஸ் செயின்ட்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது.

பரிஸ் செயின்ட் ஜேர்மனை எதிர்த்து லிவர்பூல் அணி மோதியது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்திலேயே பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் பேர்னன்ட். 37ஆவது நிமிடத்தில் நெய்மர் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது பரிஸ் செயின்ட் ஜேர்மன்.


48ஆவது நிமிடத்தில் லிவர்பூலுக்கு தண்டனை உதையொன்று கிடைத்தது. மில்னர் அதைக் கோலாக்க முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பரிஸ் செயின்ட் ஜேர்மன். (ம)

## எதிரணி குறித்து கவலை இல்லை

### கிளார்க்கின் கருத்துக்கு பெய்ன் தகுந்த பதிலடி

ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பெய்ன் மற்றும் தலைமைப் பயிற்சியாளர் லாங்கர் இருவரும் எதிரணியினரைக் குறித்து அதிகம் கவலை கொள்கின்றனர். இவர்களால் ஒரு வெற்றியைக்கூடப் பெறமுடியாது என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்திருந்த நிலையில், எதிரணி குறித்து தமக்கு எந்தக் கவலையும் இல்லை என்று தெரிவித்தார் பெய்ன்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தோல்வியில் இருந்து தப்பிப்பதற்காக பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் ஆகியோர் தடை பெற்றனர். இந்த விவகாரத்துக்கு தானும் பொறுப்பேற்று பதவி விலகினார் பயிற்சியாளர் லீமன். இதையடுத்து ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளராக லாங்கர் நியமிக்கப்பட்டார். அவர் ஆஸ்திரேலிய அணிக்குள் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்தார். லாங்கரும் பெய்னும் இணைந்து ஆஸ்திரேலிய வீரர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கக்கோவைகளை அறிமுகம் செய்து வைத்தனர். 'ஆஸ்திரேலிய வீரர்கள் வார்த்தை மோதலில் ஈடுபடக்கூடாது' என்பதும் அந்த ஒழுக்கக் கோவைகளில் ஒன்று. இந்தத் திட்டத்தை கிளார்க் கடுமையாக விமர்சித்தார்.



"ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் தங்களைப் பிறர் விரும்புவார்களா இல்லையா என்ற கவலையை விட்டுவிட வேண்டும். மாறாக எமது அணியை நாம் காப்பாற்ற வேண்டும் என்பது பற்றிய கவலையே உண்மையான கவலை. உங்களுக்குப் பிடித்திருக்கிறதோ, இல்லையோ கடினமான முறையில் விளையாடுவதுதான் ஆஸ்திரேலியப் பாணி. அதுதான் எமது குருதியில் கலந்துள்ளது. ஆஸ்திரேலியப் பாணியிலிருந்து வெளியேறினால் உலகில் மற்ற அணிகளுக்கு எம்மைப் பிடிக்கும், அடுத்தவர்களுக்கு பிடித்தமான அணியாக இருப்போம், ஆனால் ஒரு வெற்றியையும் பெறமாட்டோம்" என்று கிளார்க் தெரிவித்திருந்தார். இதற்கு தற்போது பெய்ன் பதிலடி கொடுத்துள்ளார்.

எதிரணியினர் எம்மை விரும்ப வேண்டுமென்றெல்லாம் யாரும் பேசவும் இல்லை நினைக்கவும் இல்லை. ஆஸ்திரேலிய மக்களின் நம்பிக்கையைப் பெறுவது பற்றித்தான் பேசினோம், விவாதித்தோம். ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியை ஆஸ்திரேலிய ரசிகர்களும் மக்களும் விரும்ப வேண்டும். ஆனால் எதிரணியினர் எம்மை விரும்புகின்றனரா இல்லையா என்பது பற்றியெல்லாம் ஒரு துளியும் அக்கறையில்லை. மைக்கேல் கிளார்க் தெரிவிப்பதுபோல் ஆக்ரோசமாக ஆஸ்திரேலியப் பாணியில்தான் விளையாடுவோம். அதில் மாற்றமில்லை. ஆனால் சில வரையறைகளைக் கொண்டுள்ளோம். கண்டிப்பாக அவை தேவை - என்று பெய்ன் தற்போது தெரிவித்துள்ளார். (ம)

## திரு. என். எஸ் தீபன் ஆசிரியரின்

வழிகாட்டலில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான

தரம் 3 | தரம் 4 | தரம் 5

அரச பரீட்சை வினாத்தாள் அமைப்பு முறைகளுக்கு அமைவானது.

*Paper Class *I.Q. Class

*விசேட வழிகாட்டல் வகுப்புக்கள்

(அனுமதிகளையும் நேரசூசியையும் (01.12.2018) இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

புலமைக்கல்லூரி டச்சு வீதி, பெருங்குளம் சாவகச்சேரி. | MATHSHALL வைரவபுளியங்குளம் வவுனியா.

03.12.2018 திங்கட்கிழமை ஆரம்பம் 01.12.2018 சனிக்கிழமை

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## பிரத்தியேக/குழு வகுப்புகள்

A/L 2019 & DAY / A/L 2020

கணக்கீடு:
Mr.BALAKAJEN

* கந்தர்மடச்சந்தி கந்தர்மடம் (Tue & Fri 5 - 7 p.m
* கொழும்புத்துறை Sat & Sun (2 - 5 p.m.)

T.P. 075 077 5660/ 076 565 5956

## BARATHY

சித்தன்கேணி

தரம் 6 முதல் 11 வரை

புதிய வகுப்புக்கள் நாளை ஆரம்பம்

01.12.2018 சனி 7.30 am

எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

Note : மாணவர்கள் எண்ணிக்கை வரையறுக் கப்பட்டுள்ளதால் இடநெருக்கடிகளை தவிர்க்கும் முகமாக உங்கள் அனுமதி களை முன் கூட்டி பெற்றுக் கொள்ளவும்.

இயக்குனர்.

வடமாகாண அலுவலகப் பணியாளர் (OES) தெரிவுக்கான வகுப்புகள் ஆரம்பம்
*01.12.2018*
*சனி 9.30 AM*
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 320 2787

## பதவி வெற்றிடம்

1. SALES REP
2. SALES EXECUTIVE

- 25 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது
- குறைந்தது இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவோடு ஊக்கத்தொகையும் வழங்கப்படும்

சனிக்கிழமை (01.12.2018) காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

ANDRA PUBLICATIONS
379,Kasthuriyar Road, Jaffna.
0772607614 | 0777481696

மேலதிக தொடர்புகளுக்கு
0776622981 / 0777481696

## போட்டிப் பரீட்சை வகுப்புகள்

**வடமாகாண அலுவலக பணியாளர்**
பிரதி சனி
11.00→4.30 மணிவரை

**அதிபர் சேவை**
பிரதி ஞாயிறு
09.30→3.30 மணிவரை

**SLAS SLEAS**
பிரதி ஞாயிறு
09.00→3.00 மணிவரை

**ஆசிரியர் தெரிவு**
ஞாயிறு 9.00→3.00

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.நகர்.
076 688 3394

## பொருளியற் கல்லூரி

(யாழ். கிளை நிறுவனம்)

K.K.S. றோட், சுன்னாகம்

(K.K.S. றோட்டிற்கு அருகில் மயிலணி வீதிப்பக்கம்)

### தரம்: 5

புலமைப்பரிசில் வழிகாட்டல் வகுப்பு

புலமைப்பரிசாளன் பிரபல வினாத்தாள் தயாரிப்பாளர்

**S.மயூரன்**

B.A., M.A. National Dip.in teacher
(ஆரம்பக் கல்வி)
Dip.in Counselling

புதிய வகுப்புகள் ஆரம்பம்:
05.12.2018 புதன்கிழமை
காலை: 8.30

Note:
- குறிப்பிட்ட தொகை மாணவர்கள் அனுமதிக்கப் படவுள்ளதால் உங்கள் பிள்ளைகளின் அனு மதிகளை 02.12.2018 முன் பெற்றுக்கொள்ளவும்.
- மாணவர்களின் வசதிக்கான நாள்கள், நேரங்கள் வகுப்பு ஆரம்பிக்கும் அன்றைய தினம் தீர்மானிக் கப்படும்.
- வாரத்தில் 4 நாள்கள் வகுப்புகள், ஒவ்வொரு வாரமும் பரீட்சைகள் மொத்தம் 36 பரீட்சைகள் நடைபெறும் மாணவர்களுக்கான கையேடுகளும் வழங்கப்படும்.

சிறந்த வழிகாட்டலுடன்
தரம்: 3, 4 வகுப்புகளும் ஆரம்ப மாகின்றன (புலமைப்பரிசில் ஆதலால்)
வகுப்பு ஆரம்பம்:
09.12.2018 ஞாயிற்றுக்கிழமை
காலை: 8.30

முற்பதிவுகளை 05.12.2018 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
077 376 3511

## NCG கட்டணக்குறைப்பு

எமது நிறுவனமான NCG Express பேருந்து சேவைகள் எதிர்வரும் 01.12.2018 இல் இருந்து யாழ்ப்பாணம் கொழும்பு ஒருவழிப்பாதைக்கு 1200/= கட்டணம் அறவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். அது மட்டுமின்றி 05.12.2018 தொடக்கம் 15.12.2018 வரை யாழ். கொழும்பு சேவையை மேற்கொள்பவர்களுக்கு மட்டும் எமது யாழ் காரியாலயத்திற்கு நேரடியாகச் சென்று ஆசனபதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு விசேட சலுகையாக 1100/= கட்டணம் அறவிடப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம். அத்துடன் யாழ். கொழும்பு கொழும்பு யாழ். பொதிகள் சேவையும் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

**யாழ்ப்பாணம்**
077 661 2532, 077 013 6151
370, Hospital Road, Jaffna.
(SRI RANGAN ENTERPRISE)

**கொழும்பு,**
077 107 5555,
077 661 7577

## கணக்கீடு (A/L)

"எல்லா மாணவர்களும் படிக்கின்றார்கள் எப்படி படிக்கின்றார்கள் என்பதே முக்கியம்"

**வி.தமிழ்ஈசன்**
(குழு மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள்)

076 806 6960

## NEC

1. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2. மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.

A/L 2019, A/L 2020 Day Class


விடுமுறைக்கால புதிய பிரிவுகள்
ஆரம்பம் : 01.12.2018 சனி 8.00 மணி

**வர்த்தகப்பிரிவு**
- பொருளியல் : S.ஜெயக்குமார்
- வணிகக்கல்வி : S.K. பாலசுபேஷ்
- கணக்கீடு: K. பாலகஜன்

A/L 2019, A/L 2020 Day Class
பிரிவுகளுக்கான கலை, வர்த்தகம், தொழில்நுட்பப் பிரிவுகளுக்கான புதிய பிரிவுகள்
ஆரம்பம் : 01.12.2018 சனி 8.00 மணி

T.P.: 077 469 6695

## மரண அறிவித்தல்



### இராஜ்குமார் விஜெய்

இல. 37, சந்தைவீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜ்குமார் விஜெய் நேற்று (29.11.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு. திருமதி இராஜ்குமார் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் தர்ஷனின் அன்புச் சகோதரனும் ஜெயக்குமார், ரஞ்சன்குமார், ஜீவன்குமார், ரவீந்திரகுமார், நாகேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஜெயந்தி, கமலநாதன், யோகேஸ்வரன், மகேந்திரன், சிவகுமாரன் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கூடான யாத்திரை

ஆரம்பம் 20.02.2019 யாத்திரீகர் 10 நாள்கள் 16

**இதுவரை சென்றிராத புதிய ஆலயங்கள்**

உச்சிப்பிள்ளையார், திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, அகோபிலம் நரசிங்கப்பெருமாள், கொல்லி-மலை, ஈசா, ஸ்ரீ சைலம் ஜோதிலிங்கம், மந்திராலயம், ஸ்ரீ ராகவேந்திரர் ஜீவசமாதி, புட்டப்பத்திபாபா இஸ்கான் கோவில், மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், ஸ்ரீரெங்கநாதர் (1500 ஆண்டு பழமையான ஆலயம்), ஸ்ரீரெங்கப்பட்டினம், சிருங்கேரி, வித்தியாபீடம், சங்காரபீடம், முறட்டீஸ்வராசிவன், கோடிலிங்கேஸ்வரர், சோமநாதர், காளபைரவர், கொள்ளூர் மூகாம்பிகை, உடுப்பி கிருஷ்ணா, தர்மசாலா, மஞ்சுநாதசுவாமி, கார்த்திகேயா (சுப்பிரமணியர்), மடிக்காவேரி, தலைக்காவேரி, மகாநதி, பெல்லூர் அன்னபூரணி, பொன்னியம்மன் கோயில், பிருந்தாவனம் காடின், மைசூர் பாலஸ், விருத்தாச்சலம், விருத்த கிரீஸ்வரர் திருக்கோயில், சிருங்கேரி (கேசேவ் கிராமம்), கமண்டல கணபதி மகாபல்லேஸ்வரர் மற்றும் வேறு இடங்களும் நேரமிருந்தால் காணலாம். **தரிசிக்கும் நாள்கள்** : கர்நாடகா 6 நாள்கள் **தரிசிக்கும் நாள்கள் :** ஆந்திரா 6 நாள்கள் மற்றும் இடங்களும் சொப்பிங்கும் 4 நாள்கள் மொத்தமாக 16 நாள்கள்.

**தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :-** இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி, இவை அனைத்தும் எமது சேவை.

**மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.** சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக் கலாம். **(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)**

**வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.**

தொடர்புகளுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
sriranganathan1944@gmail.com / sriranganathan2601@gmail.com
T.P - 077 768 0102/ 077 736 2154

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.